Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 20

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO—12.

உங்களுக்குத் தேவையான

10, 12, 14, 18, பொயண்ட தமழ, ஆங்கில ரோமன் போல்ட் எழுத்துக்கள் எங்களது டைப் பவுண்டரியில் வார்த்துக் கொடுக்கப்படும்

உங்களிடமுள்ள தேய்ந்து போன எழுத்துக்களைக் கொண்டும் உங்களுக்குத் தேவையான பொயிண்டுகளில் எழுத்துக்கள் வார்த்துத் தரப்படும்.

விலை - விபரங்களுக்கு:

சுதந்திரன் டைப் பவுண்டரி,

194 ஏ, தட்டா தெரு, கொழும்பு—12.
போன்: 3411. தபால் பெட்டி 1183.

புத்தகம் 13 திருவள்ளுவர் ஆண்டு 1990 மாசி திங்கள் 3-ம் நாள் 15—2—1959 ஞாயிற்றுக்கிழமை ஷஃபான் பிறை 6 இதழ் 38



# "ஒன்ருக வாழ்வோம் இன்றேல் ஒன்ருக மாள்வோம்

## தமிழர்களைக் கூறுபோடுவது ஈனமான துரோகச் செயல்"

### வவனியாப் பிரதிநிதியின் வாய்க்கு தமிழரசுத் தந்தையின் ஆப்பு

(சுதந்திரன் நிருபர்)

"தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டில் சுதந்திரர்களாக வாழ்வதா அன்றித் தொண்டடிமைப் பட்டு மாள்வதா என்ற ஜீவ மரண நெருக்கடி மிகுந்துள்ள இந்த நேரத்தில் தமிழ்பேசும் மக்களை இந்தியத் தமிழர் என்றும் இலங்கைத் தமிழர் என்றும் பிரித்து அவர்களிடையே கசப்பான பிளவை உண்டாக்க ஒரு தமிழ்த் தலைவரே முற்படுவது ஈனத்தனமான துரோகச் செயலாகும். இதன் விளைவு தமிழ் பேசும் இனம் தற்கொலை செய்து கொள்வதை நிகர்த்ததாகும்."

இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் சுதந்திரன் நிருபருக்களித்த ஒரு விசேஷ பேட்டியின் போது கவலையும், ஆத்திரமும் அடைந்தவராகக் கூறினர்.

இலங்கைத் தமிழர்கள் இந்தியத் தமிழர்களுடன் ஒன்று படுவது ஆபத்தானது என்றும், இலங்கைத் தமிழர்களுடைய கடைகளை மலை நாட்டுத் தமிழர்கள் புறக்கணித்துப் பகிஷ்கரிக்கிருர்கள் என்றும், இலங்கைத் தமிழர்களும் தமிழரசுக் கட்சியும் மலை நாட்டுத் தமிழர்களுக்காகப் பாடுபடுவது "தான் போக வழியைக் காணுமல் மூஞ்சூறு விளக்குமாற்றையும் கட்டிக் கொண்டு போனதற்கு ஒப்பாகும்" என்றும், வவனியாப் பிரதிநிதி திரு. சுந்தரலிங்கம் சமீபத்தில் தெரிவித்தார். இதுபற்றி அபிப்பிராயம் கேட்டபோதே திரு. செல்வநாயகம் மேற்கண்டவாறு கூறலானுர்.

#### எதிரிகளுக்குப் பலம்

திரு. செல்வநாயகம் தொடர்ந்து கூறியதாவது: "எங்களைப் பொறுத்தவரை மலை நாட்டிலுள்ள இலங்கைத் தமிழர்களுடைய எந்தக் கடையையும் இந்தியத் தமிழர் பகிஷ்கரித்ததாக எதுவித தகவலும் இதுவரை கிடைத்ததில்லை. அப்படித்தான் எங்காவது பகிஷ்கரித்திருந்தாலும் அது அறியாமையினுல் தவருக நிகழ்ந்திருக்கவும் கூடும். அல்லது யாராவது வகுப்பு வெறியர்களின் கைக் கூலிகளான சிலர் சொந்த நலனுக்காக அப்படிச் செய்திருக்கவும் கூடும். அது ஆராயப்பட வேண்டியது. எது எப்படியிருந்த போதிலும் மலைநாட்டுத் தமிழரும் இலங்கைத் தமிழரும் பிளவுபட வேண்டும் என்ற செய்தியை ஒரு இலங்கைத் தமிழ்த் தலைவர் நாவடக்கமும் போதிய ஆராய்வுமின்றி அம்பலத்தில் பேசுவது அரசியல் விவேகமுடையதாகாது. அது நமது விரோதிகளுக்கு பலமும் வேகமும் அளிக்கும் துரோகச் செயலாகும்.

#### பிரச்னை ஒன்றுதான்

"தமிழர்கள் இலங்கையில் எங்கிருந்தாலும் அவர்களுக்குள்ள பிரசனைகள் ஒரே விதமானவைதான். எல்லாரையும் ஒரேவிதமான இன்னல்கள்தான் எதிர் நோக்கியுள்ளன. எனவே எல்லோரும் ஒன்ருக வாழ வேண்டும். இன்றேல் ஒன்ருக மடிய வேண்டும்"

இவ்வாறு திரு. செல்வநாயகம் கூறி முடித்தார்.

## கடல் கடந்த கதை

வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு அ. அமிர்தலிங்கம் சுதந்திரன் நேயர்களுக்குப் பிரத்தியேகமாக அளிக்கும் "கடல் கடந்த கதை" இனி இடைக்கத்தாமதமில்லை.

கடந்த வருடம் நடந்த இனக் கலவரத்தின்போது தமது துணைவி மங்கையர்க்கரசியாருடன் கொந்தளிக்கும் கடலிலே கப்பலோட்டிச் சென்று கிழக் இலங்கைக் கரையில்காலடிவைத்த உண்மைக் கதையைத் தளபதி தமக்கே உரிய பாணியில் கூறுவதைக் கேட்கும் கோழை நெஞ்சு கூட விரத்தால் விம்மிப் புடைக்குமென் பதில் ஐயமில்லை.

சரி, அடுத்த வாரச் சுதந்திரனில் அதைப் படிக்க நேயர்கள் தயாராகலாம்,

—ஆசிரியர்: சுதந்திரன்



## லெனின் வழியும் தோழர்களின் புது வழியும்

இந்தியாவானுல் 'ஏக இந்தியா', இலங்கையானுல் 'ஏக இலங்கை'—இப்படி 'ஏக'க் கூச்சல் போடும் கொம்யூனிஸ்ட்டு தோழர்களுக்கு கடந்த காலத்தில் தமது வழிகாட்டிகள் சொல்லி வைத்த முக்கியமான விஷயங்கள் கூட மறந்து போய் விட்டன.

மார்க்ஸ் தத்துவத்தை தமனதார நம்பி, லெனின் வழி

(9-ம் பக்கம் பார்க்க)

# பழைய பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு அநீதி!

## தலைமை ஆசிரியர் சங்கம் மந்திரிகளுக்கு கடிதம்

கல்வி இலாகா கடந்த ஆண்டில் உதவி நன்கொடை பெறும் ஆங்கிலப் பாடசாலைகளுக்கும் ஏனைய பாடசாலைகளுக்குமான கல்விச் சட்டத்தில் செய்த திருத்தம் ஆசிரியர்களுக்கிடையே மனக் கசப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் திருத்தத்தால் 1955 ஏப்ரலுக்கு முன்பிருந்தே கடமை செய்துவரும் இரண்டாம் வகுப்பு ஆரம்ப, கனிஷ்ட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்று வருத்தம் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாம் வகுப்பு ஆரம்ப, கனிஷ்ட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 5 வருஷ திருப்திகரமான சேவைக்குப் பின்னர் முதல் வகுப்புக்கு தரம் உயர்த்தப்பட்டு வந்தனர்.

1946-ம், 1955-ம் வருட ஆசிரியர் சம்பளத் திட்டங்கள் சுயபாஷைப் பயிற்சி பெற்ற தலைமை ஆசிரியர்களுக்கும் உதவி ஆசிரியர்களுக்கும் தொடர்ச்சியான தோர் கால வரம்பு சம்பளப் படியமைப்பை வழங்கின.

### அநீதி

ஆனுல் கல்வி இலாகா கடந்த ஆண்டில் ஏற்படுத்தியதும் 16-5-58-ல் அமுலுக்கு வந்ததுமான அந்தத் திருத்தம் ஆசிரியர்களின் தர உயர்வுக்கு 5 வருட திருப்திகரமான சேவை வேண்டும் என்பதை 3 வருட சேவை போதும் என்று குறைத்திருக்கிறது. சம்பள முரண்பாட்டுக் கமிஷனும் இந்தத் திருத்தத்தை மனதில் கொண்டே சம்பளப் படியை நிர்ணயித்து சிபார்சு செய்திருக்கிறது. இதன் விளைவு பாரதூரமானதாகும். இதனுல் பழைய ஆசிரியர்கள் அதாவது ஏப்ரல் 1955 க்கு முன்னர் நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு நீதி வழங்கப்படுவதாய் இல்லை.

### சம்பள இழப்பு

புதிய திட்டத்தின்படி முதல் வகுப்புக்கு தரம் உயர்த்தப்படும் ஆசிரியர் முதலில் பெறும் சம்பளம் பழைய ஆசிரியர் தமது சேவைக் காலத்தில் நான்காவது படி ஏற்றமாகப் பெறும் சம்பளம் அளவில் அமைகிறது. இன்னும் சொல்லப் போனுல் இந்தப் பழைய ஆசிரியர்கள் புதிய திட்டத்தின்படி, தங்களுக்கு உரிய இரண்டு சம்பளப்படி ஏற்றத்தை இழக்க வேண்டியவர்களாகிறுர்கள்.

### நிவாரணம் வேண்டும்

இந்தக் குறைபாட்டை நீக்க வேண்டும் என்பதே ஆசிரியர்களின் கோரிக்கையாகும். அகில இலங்கை தலைமை ஆசிரியர்கள் சங்கம் நிதி மந்திரிக்கும் கல்வி மந்திரிக்கும் அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இது நிலைமையை நன்கு விளக்கி நிவாரணம் அளிக்குமாறு கேட்டிருக்கிறது.

# பகிரங்கக் கடிதத்துக்கு சமசமாஜக் கட்சி பிரமுகர் பதில்

## 'கொடி புகா'ருக்கு மறுப்பு இல்லை

இரத்தினபுரியைச் சேர்ந்த திரு. மொழிவாணன் யாழ்-மாநகர சபை உறுப்பினரும், சம சமாஜத் தலைவர்களில்ஒருவருமானதிரு. ஆ. துரைராஜசிங்கத்தை நோக்கி கடந்த வார சுதந்திரன் மூலம் விடுத்த பகிரங்கக் கடிதத்துக்கு திரு. துரைராஜசிங்கம் மறுப்புத் தெரிவித்துப் பதில் தந்துள்ளார்.

சமசமாஜக் கட்சி இம் மாதம் முதலாந்தேதி இரத்தினபுரி மைதானத்தில்நடத்திய பொதுக் கூட்டத்தில் 'தமிழ்ப் பேச்சுக்கு தடை' என்றும் 'கொடி பறக்க விட முடியாத நிலை' என்றும், 'சமசமாஜக் கட்சியின் மொழிக் கொள்கை வண்டவாளம்' என்ற தலைப்பில் கடந்த வாரம் சுதந்திரனில் இரத்தினபுரியைச் சேர்ந்த திரு. மொழிவாணன், திரு. ஆ. துரைராஜசிங்கத்துக்கு எழுதிய பகிரங்கக் கடிதம் வெளியிடப்பட்டது.

மறுப்புத் தெரிவிக்கும் இடதுசாரிகள் மாற்றுரை ஏகும் வழக்கத்துக்கிணங்க திரு. துரைராஜசிங்கமும், திரு.மொழிவாணனுக்குப்பதில் கொடுப்பதற்குப் பதிலாக, சுதந்திரனையும் சுதந்திரன் 'நிருப'ரையும் 'பொய், புளுகு' என்ற வார்த்தைகளை யெல்லாம் கொட்டித் திட்டி விட்டுப் பின்வரும் கருப்பொருளை வெளியிட்டிருக்கிருர். அதை அப்படியே சொல்லுக்குச் சொல் இங்குபிரசுரிக்கிறேம்:

### மறுப்பு

"சென்ற ஞாயிறன்று இரத்தினபுரியில் நடைபெற்ற மேற்படி கூட்டத்துக்கு சுமார் 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தார்கள். ஆயிரக் கணக்கான சமசமாஜக் கட்சியின் செங்கொடிகள் சகிதம் பிரமாண்டமான ஊர்வலம் சென்றபோது தமிழ், சிங்கள கோஷங்கள் வானைப்பிளந்தன.

(9-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பறியும் தொடர் நவீனம்:

# நீலவேணி

"நவம்"

## (22)

### அரசியல் தலைவர்களும் சினிமா நட்சத்திரங்களும்

'அவரைப் பற்றி ஒரு முக்கிய விஷயம் தெரியுமே!' என்று நீலவேணி சொன்னதும் சங்கரனின் தலை சுழன்றது.

திடீரென்று ஆகாயத்தில் அப்போது ஓர் பேரிரைச்சல் கேட்டது. சுழன்ற தலையை நிமிர்த்தி மேலே வானத்தை நோக்கினான் சங்கரன். ஒரு விமானம் கீழே இறங்குவதற்கு இலக்குப் பார்த்துக் கொண்டுவானத்தில் சுழன்று சுழன்று வட்டமிட்டுக் கொண்டிருந்தது. நல்ல

உங்கள் அபாயகரமான விரோதி



பயோரியா

ஈறுகளில் இரத்தம் வடிதல் ? வாய்ப் புண் ? பல்லாட்டம் ?

இந்த பயங்கர வியாதி உங்கள் பற்களை விழச் செய்வதுமன்றி, ஆரோக்கியத்தையும் கெடுத்து விடுகின்றது. தேகத்தில் ஏற்படும் வியாதிகளில் 85 சத விகிதத்திற்கு பயோரியா தான் காரணமென பரிசோதனையிலிருந்து தெரிய வருகிறது. ஆயினும் அநேகர் இந் நோயின் அறிகுறிகளை அலட்சியம் செய்து நாளா வட்டத்தில் கடுமையான நோய்க்குள்ளாகின்றனர். நவீன சாஸ்திரீய முறைப்படி தயாரிக்கப்பெற்றுள்ள பயோரிஸான் எந்த நிலைமையிலுள்ள பயோரியாவையும்! நீக்குவதில் கைகண்ட மருந்து பயோரிஸான். ஈறுகளில் இரத்தம் வடிதலை நிறுத்தி, சீழ் பிடிப்பதைத் தடுத்து, பற்களை ஆட்டமில்லாமல், உறுதியாக நிலைகொள்ளச் செய்கிறது பயோரிஸான்.

விலை ரூபா. 3/50

தபால்செலவு பிரத்தியேகம்.

இலங்கையில் சோல் ஏஜண்டுகள்:

பயனீர் பார்மஸி,

183, ஷாப்புத்தெரு, கொழும்பு.

வேளை. இப்போதாவது அந்த விமானம்வந்துதொலைந்ததே இல்லையென்றால் நீலவேணிக்கும் சங்கரனுக்கும் நடந்து கொண்டிருந்த சம்பாஷணையில் நம் தலையே சுழன்றிருக்கும் தப்பினோம்!

ஆகாயத்தில் சுழன்று வட்டமிட்ட அந்தப் பெரிய விமானம், மெள்ள மெள்ளக் கீழே இறங்கித் தரையைத் தொட்டது.

விமானத்தின் இறங்கு வாசலில் ஏணி பொருத்தப் பட்டதும், அந்த ஏணி வழியாகப் பிரயாணிகள் ஒவ்வொருவராக இறங்கினார்கள்.

அன்று அந்த விமானத்தில் பிரயாணம் செய்தோர் தொகை மிகச் சொற்பம். இருந்தும், விமான நிலையத்தில் ஜனங்கள் 'திமு திமு' என்று நெருங்கியடித்துக் கொண்டிருந்தார்கள்.

அத்தனை கூட்டத்தையும் கண்ட நீலவேணி, "இன்று இங்கு வந்திருக்கும் கூட்டத்தைப் பார்த்தால், இந்த விமானத்தில் யாரோ அரசியல் புள்ளிகள் வந்திருக்க வேண்டும் போல் படுகிறதே!" என்று சங்கரனிடம் கேட்டுவைத்தாள்.

"அரசியல் தலைவர்களுக்காவது அவர்களுக்கு இத்தனை கூட்டம் கூடுவதாவது! அதெல்லாம் அந்தக் காலம். அரசியல் புள்ளிகளுக்குக் கொடுக்கும் மதிப்பையெல்லாம் மக்கள் இப்போசினிமா ஸ்டார்கள் பக்கம் திருப்பி விட்டார்கள்!" என்றான் சங்கரன்.

"அப்போ இன்று யாராவது சினிமா நட்சத்திரங்கள் தான் வந்திருக்க வேண்டும் என்கிறீர்கள், இல்லையா?"

"சந்தேகமென்ன? இன்று இத்தனை கூட்டத்தையும் பார்க்கும்போது நிச்சயம் இந்த விமானத்தில் பிரபல சினிமா ஸ்டார் யாராவது வந்திருக்க வேண்டும் என்றே படுகின்றது!"

"நல்லாயிருக்கிறது நீங்கள் சினிமா நட்சத்திரங்களுக்குத் தரும் மதிப்பு!"

"நான்மட்டுமென்ன இலங்கையின் முன்னாள் முதலமைச்சர் சேர் ஜோன் கொத்தலாவலை முதற் கொண்டு, பாரதப் பிரதமர் நேரு ஈறாக சினிமா ஸ்டார்களுக்கு மதிப்புத்தருகிறார்களே! உங்களுக்குத் தெரியுமா? இரண்டொரு வருடங்களுக்கு முன் முன்னாள் முதலமைச்சர் சேர் ஜோன் ஏதோ டில்லியில் நடந்த மகாநாட்டில் கலந்து விட்டு விமான மார்க்கமாகக் கொழும்புக்கு வந்தார். அவர் பிரயாணம் செய்த விமானத்தில் பிரபல வட இந்திய நட்சத்திரங்களான ராஜ் கபூர், நர்கீஸ் முதலானவர்களும் பிரயாணம் செய்தார்கள்.

"விமானம் இரத்துமலாயனை அடைய இரவு பதினொரு மணிக்கு மேலாகிவிட்டது. சேர் ஜோன் விமானத்திலிருந்து கீழே இறங்கினார். அங்கு திரள் திரளாக முட்டியடித்துக்கொண்டு நின்ற ஜனத் திரளைக் கண்டதும் அவருக்கு ஒரே திகைப்பாகப் போய்விட்டது. 'அடடே! இவ்வளவு நேரமாகியும் மக்கள் நம்மைக் காண ஆவலுடன் காத்திருக்கிறார்களே!' என்று தமக்குள் வியந்து கொண்டார். பின்னால் தான் விஷயம் அவருக்குப் புரிந்தது. வந்திருந்த ஜனக் கூட்டம் தமக்காக அல்ல என்றும், அத்தனைபேரும் ராஜ் கபூர்—நர்கீஸ் விசிறிகள் என்றும் புரிந்தது......இப்படித் தான் ஒரு முறை நேருஜி..."

சங்கரன் வாக்கியத்தை முடிக்கவில்லை. அதற்குள் நீலவேணி குறுக்கிட்டு, "ஐயா! டாக்டரே! தவறு; சினிமா ரஸிகரே! போதும் விளக்கம். சேர் ஜோனின் வியவகாரமே இத்தனை நீண்ட தென்றால் நேருஜியின் 'சங்கதியை' எப்படிப்பட்டதென்று கற்பனை பண்ணிக் கொள்ள வேண்டியதுதான்! பேசாமல் இத்தனை விபரத்தையும் சினிமா பத்திரிகை, சஞ்சிகை எதுக்காவது கட்டுரையாக எழுதி அனுப்புங்கள். உங்கள் ரஸிகத் திருக்கூட்டம் விழுந்து விழுந்து படிக்கும்" என்றாள்.

"அந்தக் கைங்கரியத்தைச் செய்வதற்குத்தானே உங்கள் எழுத்தாள அண்ணை இருக்கிறார்!"

அழகேசனுக்கு ஆயுசு நூறு என்று தான் சொல்ல வேண்டும். எழுத்தாள அண்ணை என்று சங்கரன் குறிப்பிட்டு வாய் ஓய்வதற்குள், விழுந்தடித்துக்கொண்டு ஓடிவந்தான் அழகேசன் அங்கு!

பரக்கப் பரக்க அவன் ஓடி வந்ததால் அவன் தேகம் முழுக்க வியர்த்துக் கொட்டத் தொடங்கிவிட்டது. எதையோ பறிகொடுத்தவன் போல் காணப்பட்ட அழகேசனைக் கண்டதும் நீலவேணியும், டாக்டர் சங்கரனும் அப்படியே அசந்து போனார்கள்.

அந்த நேரத்தில் அங்கு எதிர்பாராதவகையில் நீலவேணியையும், சங்கரனையும் பார்த்த அழகேசன் கூட அசந்துபோனான்!......

## (23)

### அஜந்தாவின் அதிர்ச்சி!

நிழல் மனிதன் போல் சிறிது நேரம் வேஷம் போட்டு, மல்லிகைத் தோட்டப் பங்களாவில் அட்ட [illegible] மாண்ட அந்த மனிதனைப் பற்றி அறிவதற்கு வேண்டிய ஒரு அருமையான சந்தர்ப்பம் இப்போ நமக்குக்கிடைத்திருக்கின்றது. அந்த அருமையான வாய்ப்பை நல்கியவர்கள், நமது நீலவேணியும், டாக்டர் சங்கரனும், அழகேசனும்தான்!

விமான நிலையத்தில் அவர்கள் மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்து திகைத்துத் திக்பிரமை பிடித்து நின்றது நமக்கு வாய்ப்பாகப் போய் விட்டது. அந்தச் சிறிய அவகாசத்தை நாம் மல்லிகைத் தோட்டப் பங்களாவில் கழித்துவிடுவோம். நம் கதையைச் சிக்கலாக்கிவிட்ட அந்தப் புதிய நிழல் மனிதனைப் பற்றித் தெரிந்து கொள்வோம். சரி; நேயர்கள் நம்முடன் மல்லிகைத் தோட்டப் பங்களாவுக்கு இப்போ வரலாம்.

"ஒன்றும் பேசாதீர்கள். என் பின்னால் வாருங்கள்!" என்று அஜந்தாவை அழைத்தான் போலி நிழல் மனிதன். அஜந்தா அவனை உண்மையான நிழல் மனிதன் என்று எண்ணிக்கொண்டு அவன் பின்னால் மயில் போல் தொடர்ந்தாள். இவற்றையெல்லாம் மறைவிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த நிஜ நிழல் மனிதன் திடீரென்று அந்த இடத்தை விட்டு மறைந்தான்.

இந்த விபரமெல்லாம் நமக்கு ஏற்கனவே தெரிந்தவைதாம். மறைந்த நிஜ நிழல் மனிதனைப் பின்பற்றிக் கொண்டு நாமும் பங்களாவுக்கு வெளியில் வந்து விட்டதால், திடீரென்று அஜந்தாவைக் கொலைகாரியாக்கிவிட்ட அந்தப் பயங்கரச் சம்பவத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியாமல் போய்விட்டது.

அஜந்தா புதியவனைப் பின் தொடர்ந்தாள். முன்னால் சென்ற புதியவன் என்ன எண்ணினானோ தெரியாது. திடீரென நின்றான். "ஏன் நின்றுவிட்டீர்கள்?" என்று கேட்டாள் அஜந்தா.

அந்த மின் ஒளியில் அஜந்தாவின் தங்க நிற மேனி பளபளத்துக் கொண்டிருந்தது. கல்யாணமானவளாக இருந்தும் கூட காட்டு மலர்போல்-வானத்து முழுமதி போல் அவள் முகம் பிரகாசித்துக் கொண்டிருந்தது. ஒரு வேளை கல்யாணம் முடித்த கையோடு தணிகாசலம் அவளைச் சுற்றிக்கொண்டு திரியாமல் தன் இச்சைப்படி விலகி நடந்தது தான் அந்தப் பிரகாசத்திற்குக் காரணமோ என்னவோ?

அந்த அகால வேளையில் முன்பின் தெரியாத ஒரு மாய மனிதனுடன் அவள் போவதால், அவள் முக மலரில் கோடிட்டு விளையாடிக் கொண்டிருந்த பீதியின் சுவடு அவள் வனப்பை இன்னும் மிகைப்படுத்திக்கொண்டிருந்தது.

திடீரென்று நின்ற அந்தப் புதிய மனிதன், அஜந்தாவை ஒரு தடவை திரும்பிப்பார்த்தான்.

"ஏன் நின்றுவிட்டீர்கள்?" என்று அவள் கேட்ட கேள்விக்கு எந்தவித பதிலும் அவன் கொடுக்கவில்லை. மீண்டும் இரண்டடி வைத்தான். எரிந்துகொண்டிருந்த லைட்டின் சுவிச்சை அழுத்தினான்.

அவ்வளவுதான். அறை முழுக்கக் கருமை. ஒரே கருமை! கண்ணில் குத்தினாலும் தெரியாத கும்மிருட்டு.

ஒரு கரம்! கரமா அது?

அந்தக் கரம் அஜந்தாவின் பூங்கொடி மேனியைத் தொட்டது. இருட்டில் தவிப்போமோ? என்று எண்ணமிடாள் அந்தக்கள்ளங்கபடமற்ற அழகுப் பதுமை.

"நான் இங்கு இருக்கிறேன்!" என்றாள் அஜந்தா.

தொட்ட கரம் மீழ்வதாயில்லை. அஜந்தாவுக்குச் சுருக்கென்றது. கடைந்தெடுத்த அவள் புயத்தில் பாவியிருந்த அந்தக் கரம் அப்படியே கீழ் நோக்கி உராய்ந்து கொண்டு வந்து அவள் காந்தள் கரத்தைப் பற்றியது.

அஜந்தாவுக்கு உடலெல்லாம் ஆடத் தொடங்கி விட்டது. ஆயிரம் அணு குண்டுகள் அவள் தலைக்குள் நுழைந்து 'படீர்,படீர்'என்று வெடித்தது போலிருந்தது.

## (24)

### எழுத்தும், உழைப்பும்

மென்னுள்ளம்படைத்த அஜந்தாவுக்கு எப்படித் தான் அந்த நேரம் ஒரு யானையின் பலம் வந்ததோ தெரியாது. தன் கரத்தை இறுக்கி அதில் இன்பம் அநுபவித்த அந்தப் பேய்க் கரத்தின் பிடியிலிருந்து திமிறி விடுபட்டுக் கொண்டு, மின்வெட்டு நேரத்தில் லைட்டின்ஸ்விச்சை அழுத்தினாள். ஒரு கணமும் தாமதிக்காமல், கட்டிலருகில் பாய்ந்து சென்று தன் கைத் துப்பாக்கியை எடுத்தாள். அவ்வளவுதான். அவள் வெறி கொண்ட காளியாக மாறிவிட்டாள். என்ன செய்கிறோம் என்றே அவளுக்குப் புலப்படவில்லை. 'டுமீல்' என்ற வெடிச் சத்தம் ஒன்று தான் அவளுக்குக் கேட்டது. நிலத்தில் விழுந்தான் போலி நிழல் மனிதன்.

அந்த அதிர்ச்சி அடங்குவதற்குள் அஜந்தாவுக்கு இன்னும் ஒரு பேரதிர்ச்சி ஏற்பட்டது. நிலத்தில் பிணமாய்க் கிடந்த நிழல் மனிதனை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த அஜந்தாவை எதிர் நோக்கி இன்னும் ஒரு நிழல் உருவம் நெருங்கி வந்தது.

"நீயும் தொலைந்துபோ!" என்று துப்பாக்கியை அந்த நிழல் உருவத்துக்கு முன்னால் நீட்டிப் பிடித்தாள் அஜந்தா.

நல்லவேளை. அதற்குள் அந்த நிழல் உருவம் தன் வேஷத்தைக் கலைத்துத் தன்னை யார் என்று அறிமுகம் செய்து விட்டது. இல்லாத பட்சத்தில் இரண்டாவது உயிரையும் அவள் கைத் துப்பாக்கி உறிஞ்சி விட்டிருக்கும்!

அப்படி உயிர்ப் பலியிலிருந்து மயிரிழையில் தப்பிய அந்த மாய உருவத்திற்குச் சொந்தமான மாயாவி யார் என்பதை நாம் ஏற்கனவேயே பார்த்து விட்டோம்.

நமது கதையின் நாதமாக நின்று கண்ணுமூச்சி விளையாடும் நிஜ நிழல் மனிதனே அந்த அதிர்ஷ்டசாலி!

பரபரப் பூட்டும் இந்த நிகழ்ச்சியின் பின்னால் நிகழ்ந்த சம்பவத்தை நாம் ஏற்கனவேயே தெரிந்து கொண்டுவிட்டோமாதலால் நம் கவனத்தை இனி வேறு திசையில் திருப்புவோம்.

ஃ

எழுத்துவேலை கூட அவ்வளவு சோர்வு தரக்கூடியதா என்று ஒரு தடவை நம் கதாநாயகி நீலவேணிக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டதல்லவா?

அவள் சந்தேகத்திற்கு அழகேசன் தந்த விளக்கம், உளநூல் தத்துவ ரீதியில் அமைந்திருந்தது என்று கூறினேமல்லவா? உண்மையில் அழகேசனின் அந்த உலநூல் விளக்கத்தை நாம் இப்போது

(15-ம் பக்கம் பார்க்க)




உங்கள் கூந்தலைப் படியவைப்பதற்கு பரிமளமிகுந்த

மிக்காடோ

கொங்கிரீட் பிரிலியன்டைன

கேட்டு வாங்குங்கள்.

இதனைப் பாவித்துப் பயனடைந்தவர்கள் மீண்டும் தெரிவு செய்கின்றனர்.

எங்கும் கிடைக்கும்

மிக்காடோ அன் கம்பெனி,

டேம் வீதி. கொழும்பு.

டெலிபோன்: 3242.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நமக்குத் தொழில் கவிதை

### தொல்லைகள் நம் காலில் தூசு (3)

அநியாயம் கோடி அடுத்தாலும் என்ன?
பனியாய் மறையும் பகல்முன்—குனியாது
வெல்லும் துணிபுடையோம்; வேண்டியவை [ஈண்டடைவோம்;
தொல்லைகள் நம்காலில் தூசு
—சு. நம்பிராசா, வெள்ளவத்தை

நல்ல ஒருநாட்டில் நாசம் பல விளைத்த
புல்லுருவி மெய்க்குப் புறம்காட்டிச்—செல்லானே?
செல்வான்; நாம் செல்லவைப்போம்; செல்லும் வரை தருமித்
தொல்லைகள் நம்காலில் தூசு
—'அன்பழகன்', அக்கரைப்பற்று—8

செந்தமிழ்த்தேன் சிந்தும் சிறந்த தமிழினத்தின்
மைந்தனெம் சொந்தச் சுதந்திரற்கு—விந்தையுறும்
அல்லல் விலங்கிட்டே ஆளநினைந் தோர் அறிக:
தொல்லைகள் நம்காலில் தூசு
—செ. கந்தசாமி, கரணவாய் தெற்கு

எத்தனையாய் இன்னல்கள் எம்மேற் றிணித்தாலும்
அத்தனையும் கொள்வோம்; அவலமுறேம்—சத்தியச்
சொல்லு மகிமையும் சூழ்ச்சியினை வெற்றிபெறும்
தொல்லைகள் நம்காலில் தூசு
—ச. சச்சிதானந்தம், சுன்னாகம்

பஞ்சுபடும் பாடதனிற் பல்லா யிரகோடி
தஞ்சர் வினைதுயரால் நாமலுத்துத்—துஞ்சுவமோ?
வல்லை முயன்றினைத்தே வாழும் பதம்பெறுவோம்
தொல்லைகள் நம்காலில் தூசு
—திருமதி சி. சிவயோகம், சேமமடு

தன்நாட்டில் தன்வீட்டில் தானடிமை யாயிருக்க
எந்நாட் டவனே இணங்குவான்?—இந்நாட்டுப்
புல்வர்எம் மாண்மைப் பொசுக்க இயலாது!
தொல்லைகள் நம்காலில் தூசு
—''இ. சு.'', எழுவைதீவு

ஓரவஞ்சச் சட்டம் உயிர்கள் பலஅழியக்
காரணமாய்க் கண்ட கொடுங்கோலைப்—பூரணமாய்
இல்லை எனஒழிக்க ஏற்றவழிச் செல்கின்றேம்;
தொல்லைகள் நம்காலில் தூசு
—ஞானம், கல்முனை

வீணாச் சிறைவரினும் மிக்க துயர்வரினும்
தானாது காண்எம் தமிழார்வம்—ஈழத்தில்
எல்லாளன் வாழ்ந்த தெவர்மறப்போம்? இன்றையஇத்
தொல்லைகள் நம்காலில் தூசு
—அரு. சிவசுந்தரம், திரியாய்

குட்டர்களை ஏவும் துடுக்கெங்கே! மக்களுக்
கொட்டி ஒளியும் உரமெங்கே!—சட்டமெனும்
கொல்லைப் புறத்தினின்றும் கொக்கரிக்கும் பண்டாவே
தொல்லைகள் நம்காலில் தூசு
—கே. அருளானந்தன், ஆரையம்பதி

கல்லொத்த தோள்கள், கலங்காத நெஞ்சுடையோம்;
வெல்லுந் திறலும் விரகோடு—வல்லமையும்
'செல்வா'வுக் குண்டு; செருக்கில் பிறர்இழைக்கும்
தொல்லைகள் நம்காலில் தூசு
—கோவை மகேசன், கோப்பாய்

கொடுமைப் படுத்திக் கொடுஞ்சிறையில் பூட்டிவைத்தே
அடிமைப் படுத்திஎமை ஆள—முடியுமென
எல்லை இலாதபேர் இச்சையினுல் செய்கின்ற
தொல்லைகள் நம்காலில் தூசு
—மு. சுந்தரம், அரசடித்தீவு

தன்மானம் காக்கத் தலைநிமிர்ந்து நின்று தமிழ்ப்
பொன்மானம் காக்கப் புறப்பட்டோம்—எந்நாளும்
எல்லையிலா ஈனச் செயல்புரியும் ஈரமிலார்
தொல்லைகள் நம்காலில் தூசு
—சரோஜினி வேதநாயகம், மண்டூர்

சத்தியமும் செத்திடுமோ? சாத்வீகம் தாழ்ந்திடுமோ?
பித்தனை யாமோ பெரும் பொன்னும்—இத்தரையில்
நல்லவைக்கு நோற்ற நமது தவம்வெல்லும்:
தொல்லைகள் நம்காலில் தூசு
—அருள், கொழும்பு

(தொகுப்பு: கவிஞர் "மஹாகவி")
(முற்றும்)

## 'அரண்டுவிட்டோம்!'

கடந்த வாரம் வெளியான 'தொல்லைகள் நம் காலிற் தூசு' (2) என்ற பகுதியில் கடைசி வெண்பாவுக்கு முதல் வெண்பா "வல்லை வெளி......" என்று ஆரம்பிக்கிறதல்லவா? இவ்வெண்பா பலருடைய ஆவேசத்தைக் கிளப்பியிருக்கிறது! அப்பாட்டைத் தேர்ந்து தொகுத்த கவிஞர் "மஹாகவி"யாரை நோக்கி இருவர் இதோ கணை தொடுக்கின்றனர். மஹாகவியாரும் இலேசில் விடவா போகின்றார்? பொறுத்திருந்து பார்ப்போமே.........
—ஆசிரியர்

இரண்டாந் தொகுப்பின் ஈற்றுமுதற் செய்யுள்கண்(டு)
அரண்டுவிட்டோமன்ப! வெதன் பொருளை-அரண்டோர்க்(கு)
ஆறுதல்சொல் சுதந்திரனில் அடுத்தமுறை நீவிரித்தால்
தேறிடுவோம் நுன்பொருளைத் தேர்ந்து
—சோ. சோமாஸ்கந்த ஐயர், சுன்னாகம்

வல்லையெனத் தொடங்கியெமை வாட்டுகின்ற செய்யுளினை
நல்லமுத்து லிங்கம் நவின்றார்—சொல்லரிய
வீரத்தமிழினத்தை வீண் கோழையாக்கிடவோ
ஆரையயா நோவதறை!
ச. சச்சிதானந்தம், மாவிட்டபுரம்




செ. கந்தசாமி,
கரணவாய் தெற்கு.

கே: மனிதர்களை எளிதில் மயக்குவது எது?

ப: ரேஸ் டிக்கட்.

கே: கடமையைச் சரியாகச் செய்வது எது?

ப: இயற்கையில் சூரியன்; செயற்கையில் சுதந்திரன்.

கே: தன்னைப் பலியிட்டுப் பிறரை மயக்குவது எது?

ப: சாராயம்!

ஃ

ம. மகேந்திரன், கொழும்பு.

கே: காரியப்பருக்குப் பதவி கிடைத்துவிட்டது. எதிர் மன்னசிங்கத்துக்கு...!

ப: பதவி கிடைக்கவும் தகுதி வேண்டுமல்லவா?

ஃ

எஸ். அரசரத்தினம்,
கிளிநொச்சி.

கே: மணமகன் கலியாண இரவில் எதைச் சிந்திப்பான்?

ப: மணமகள் என்ன சிந்திக்கிறுளோ என்பதைப் பற்றியே அவன் சிந்திப்பான்.

ஃ

அ. சு. நாகராசா, சாவகச்சேரி.

கே: மிஸ்டர் குயுக்தியாரே உம்மை ருஷிய ரொக்கெட்டில் வைத்து சந்திர மண்டலத்துக்கு அனுப்பினுல் அங்கு என்ன செய்வீர்?

ப: அங்கு போய் "கேட்டுப் பாருங்கள்" என்று ஒரு கேள்வி—பதில் பகுதியை நடத்துவேன்.

ஃ

ஐ. சுப்பிரமணியம், எருவில்

கே: பட்டிருப்பு பிரதிநிதியால் பட்டிருப்பு மக்களுக்கு மட்டுந்தான் பலன் கிடைக்கிறதா?

ப: ஐயோ பாவமே, பட்டிருப்பு மக்களுக்கு எங்கே பலன் கிடைக்கிறது? பட்டிருப்புப் பிரதிநிதியால் பட்டிருப்பு பிரதிநிக்கு மட்டுந்தான் பலன் கிடைக்கிறது. வேண்டுமானுல் பண்டிதருக்கும் கொஞ்சம் கிடைக்கலாம்.

ஃ

வ. செல்வராசா, அம்பாறை

கே: வாழ்க்கை என்றால் என்ன?

ப: காயிலே இனிப்பும் கனியிலே கசப்பும் உள்ள ஒரு வகைப் பழம்.

ஃ

க. சுப்பிரமணியம், சூளமி

கே: இந்தக்காலப் பெண்மணிகளின் நாகரிகம் எந்த அளவில் உயர்ந்திருக்கிறது?

ப: கவுண் அணியும் பெண்களானுல் தொடையளவிலும், ஜாக்கெட் அணியும் பெண்களானுல் தோள் அளவிலும் உயர்ந்திருக்கிறது.

கே: தோழர் கந்தையா ருஷியா சென்றுவிட்டாராமே?

ப: ஆம், ருஷியாவிடம் இருதயத்தைப் பறிகொடுத்தவர் அவர். திரும்பி வாங்கிவரச் சென்றிருக்கிறாராம்.

ஃ

த. கேசவன், நிய்மகாவலீ

கே: பெண்கள் நகை அணிவது அநாகரிகம் என்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

ப: புன்னகை கூடவா?

கா. பூபாலரெட்னம்,
வாழைச்சேனை

கே: அதிகம் படித்தவர்களுக்குப் புத்தி மத்திபம் என்று சொல்கிறார்களே, இது உண்மையா?

ப: சுந்தரலிங்கத்தார் மட்டும் நம்மிடையே இல்லாதிருந்தால் 'சுத்தப் பொய்' என்று சொல்லியிருப்பேன்.

ஃ

கா. தம்பியையா, ஆரயம்பதி

கே: சில பெண்கள் தலையில் வலை விரிப்பது எதற்காக?

ப: தலைவனுக்கு எப்படி வலை விரிக்கலாம் என்பதைப் பயின்றுகொள்வதற்காக.

ஃ

ரமணி, கழுதாவளை

கே: பட்டிருப்பார் ஒரு புதிய கார் ஓடித் திரிகிறாரே அது அவருக்கு சொந்தமா?

ப: ஏன், 'பந்தமா' என்று சந்தேகப்படுகிறீரா?

> **மிஸ்டர் குயுக்தியார்**
> C/o சுதந்திரன்.
> த. பெ. 1183
> கொழும்பு.—12

ஃ

ம. சரவணபவன்,
தலவாக்கொல்லை

கே: மனிதன் ஏன் மதுவை விரும்புகிறான்?

ப: உலகத்துச் சுமையை ஒருகணமாவது அவன் மதுவின் தலையில் கட்டிவிட முடிவதால்.

கே: அரசியல்வாதிகள் என்போர் யாவர்?

ப: மனச்சாட்சியைச் சாப்பிட்டு, பிறர் நலத்தைக் குடித்து. நேர்மையைக் கைகழுவிவிடுவோர் தாம் இந்த யுகத்தில் அரசியல்வாதிகளாக மதிக்கப்படுகின்றனர்.

ஃ

கே. தருமலிங்கம்,
பெரியநீலாவணை

கே: தாலிகட்டிய கணவர் இருக்க இன்னொருவனை விரும்பும் பெண்ணை என்னவென்று அழைப்பது?

ப: பத்தினியென்று அழைக்கலாம். ஐவருக்கும் பெண்ணுப் அழியாத பத்தினியாய் விளங்கிய திரௌபதி கர்ணனையும் விரும்பவில்லையா?

த. மேகராசா, மட்டக்களப்பு

கே: தற்கால மாணவர்கள் சமயத்தைப் புறக்கணிப்பது ஏன்?

ப: 'ஸ்புட்னிக்' 'லூன்னிக்' யுக மாணவர்கள் சமய அவுட்டுகளைக் கண்டு வியப்பது சாத்தியமில்லாததால் புறக்கணிக்கிறார்கள்.

ஃ

கே. கார்த்திகேசு, தலைமன்னார்

கே: சமசமாஜக் கட்சியின் சிவப்புக் கொடி தமிழர்களுக்கு எதைக் குறிப்பிடுகிறது?

ப: தனிச் சிவப்புக் கொடி அபாயத்தைத்தானே குறிப்பிடும். தமிழர்கள் இந்தக் கட்சியை நம்பினாலும் அபாயம்தான் என்று குறிப்பிடுகிறது.

ஃ

க. ராஜு, தெல்லிப்பழை

கே: காரில் போகும்போது கண்டு சிரிக்கும் பெண்ணை எப்படி அழைக்கலாம்?

ப: சவாரிச் சிரிப்பழகி என்று அழைக்கலாம்.

ஃ

சு. இராசலிங்கம், வேலணை

கே: உலகில் பெரிய பாலைவனம் எது?

ப: உலோபியின் உள்ளம்.

ஃ

'புரட்சிவேலன்', கல்முனை

கே: உயிருக்குயிரான காதலி காதலனிடம் சொல்லாமல் ஓடினுல் என்ன அர்த்தம்?

ப: அவனுக்கு டெலிபோனில்கூடப் பேசத் தெரியாது என்று அர்த்தம்.

ஃ

மூ. பாலசிங்கம், வவனியா

கே: திரு சுந்தரலிங்கத்தாருடைய ஒற்றுமை முன்னணிக் கட்சியின் இலட்சியமென்னவோ?

ப. தெரியவில்லையா? தமிழ் பேசும் மக்களிடையே ஒரேயொரு கட்டுக்கோப்பான அரசியல் கட்சியாக விளங்கும் தமிழரசுக் கட்சியை வீழ்த்தும் நோக்குடன் இலங்கைத் தமிழ் மக்களை வேற்றுமைப்படுத்திப் பிளப்பது; இலங்கைத் தமிழ் மக்களுக்கும் மலைநாட்டுத் தமிழ் மக்களுக்குமிடையே சிண்டு முடிந்து வேற்றுமைப்படுத்தி, முடிவில் எல்லோரையும், தன்னையும் சேர்த்துக் குழிதோண்டிப் புதைப்பது. இதுதான் வேற்றுமைப் பின்னணிக் கட்சியின் இலட்சியமாம்!

### நன்றி கூறல்
### மங்கையர்க்கரசி-கனகரத்தினம்

பொத்துவில் கனகரத்தினத்தின் வாழ்க்கைத் துணைவியும், மல்லாகம் சிவ சிதம்பரத்தின் புத்திரியும், சிவபாதசுந்தரம் (C. G. R.) சிவஞானசுந்தரம் ஆகியோரின் சகோதரியும், மல்லாகம், R. S. முத்து அவர்களின் மருமகளுமான மங்கையர்க்கரசி 16-1-59-ல் சிவபதமடைந்ததையிட்டு அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் நேரில் சமுகம் கொடுத்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம். ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் நன்றி கூற முடியாததையிட்டு வருந்துகிறேம்.

சிவபதமடைந்த அம்மையாரின் அந்தியட்டி 15-2-59 ஞாயிற்றுக்கிழமையன்று அளவெட்டியில் "ரங்கஸ்தான்" இல்லத்தில் நடைபெறும்.

மயில்வாகனம் கனகரத்தினம் (பொத்துவில் (E. P.)
சி. சிவபாதசுந்தரம் ("ஞானகிரி", சண்டிலிப்பாய்)
சி. சிவஞானசுந்தரம் (மல்லாகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்புக் காவலில் மூன்று மாதங்கள்

**மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை**

( 6 )

எங்கள் காரை நோக்கி வந்த பொலீஸ் வீரர்கள் காரை சுற்றி வளைந்து நின்றனர். அக் கூட்டத்தின் மேலதிகாரி கார் கதவின் கையை ஊன்றிக் கொண்டு "இக் காரில் யார்,யார் இருக்கிறீர்கள்?" என்று சற்று தொண்டையைக் கனைத்துக் கொண்டு கேட்டார்.

திரு கந்தையா காரில் இருந்தவர்களின் பெயரைச் சொல்லி முடித்தார். உயர்தர அப் பொலீஸ் அதிகாரி தன் கையில் வைத்திருந்த கடதாசி யொன்றில் பென்சிலினல் கோடுகவிட்டுக்கொண்டிருந்தார். எங்கள் காருக்கு முன்னும், பின்னும் நின்ற பொலீஸ் கார்களில் ரேடியோ இணைக்கப்பட்டிருந்தது. பொலீஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் செய்தி கொடுப்பதும், செய்திகள் பெறுவதுமாக இருந்தார்.

### கந்தையாவின் கோபம்

கண்டிப்பும், அதிகாரமும் தொனித்த குரலில் திரு கந்தையா பேசினர்:

"எங்கள் காரை நிறுத்தியிருப்பதன்அர்த்தம்என்ன?"

பொலீஸ் அதிகாரி: "பொலீஸ் சுப்பிரின்டென்டென்ட் மிஸ்டர் வி. டபிள்யூ. பெரேரா தங்கள் காரை நிறுத்தச் சொன்னர்."

"ஏன் நிறுத்தச் சொன்னர்?" இது திரு கந்தையாவின் கேள்வி.

"அது எங்களுக்குத் தெரியாது."

"நடுத் தெருவில் எங்களை ஏன் மறித்து நிறுத்த வேண்டும்?"

"அதுவும் எங்களுக்குத் தெரியாது."

"நாங்கள் என்ன கொலை செய்துவிட்டு—கொள்ளை அடித்துவிட்டு செல்கிறேமோ? இப்படி எங்களை தடுத்து நிறுத்துவதற்கு?"

"அதுவும் எங்களுக்குத் தெரியாது" இது பொலீஸ் அதிகாரியின் பதில்.

"பின்பு எதுதான் உங்களுக்குத் தெரியும்? திரு கந்தையாவின் குரல் உச்சஸ்தாயியில் ஒலித்தது.

பலத்த சிரிப்பு.

"நீங்கள் எங்களை கைது செய்து விட்டீர்கள் அல்லவா?"

பொலீஸ் அதிகாரிகள் எதுவுமே பேசாது ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்தனர். அசட்டுச் சிரிப்பு. அவர்களுக்கே என்ன செய்யப் போகிறேமென்று புரியாத சிரிப்பு!

"இன்னும் எவ்வளவு நேரம் இவ்விடத்தில் நிற்க வேண்டும்?" திரு கந்தையாவின் கேள்வி.

"இரண்டு நிமிடத்தில் வந்துவிடுவார். சற்றுப் பொறுங்கள்."

### அப்புக்காத்துப் பேச்சு

மிக வேகமாக ஒரு கார் வந்து கொண்டிருந்தது. எங்கள் காருக்கு அருகாமையில் 'கிறீச்' சென்று பேரொலியைக் கிளப்பியபடி நின்றது.

எங்கள் காரை விட்டு ஒருவரும் இறங்கவே இல்லை. காரினுள் இருந்தபடியே இருந்தோம். பொலீஸ் சுப்பிரின்டென்டென்ட் மிஸ்டர் பெரேரா எங்கள் சமீபமாக வந்து 'சல்யூட்' பண்ணினர். பதிலுக்கு நாங்களும் சல்யூட் பண்ணினேம்.

திரு கந்தையா மூச்சுவிடாமல் பேசினர்:

"இதற்கு என்ன அர்த்தம்? இரவு நேரத்தில் நடுச் சந்தியில், இப்படி மறித்து நிறுத்துவதற்கு என்ன பொருள்? வங்கியைக் கொள்ளையடித்து நாட்டில் தலைமறைவாகத் திரிந்த கொள்ளைக் கூட்டத்தாரை தடுத்து நிறுத்தியதைப் போன்று, பயங்கர கொலைகளை செய்து பொலீஸாருக்கும், பொது மக்களுக்கும் 'டிமிக்கி' கொடுத்துக் கொண்டு திரியும் கொலைகாரர்களைக் கைது செய்தது போல் இவ்வண்ணம் ஏன் மறிக்க வேண்டும்? பாராளுமன்றத்தில் வைத்தேமறித்திருக்கலாமே அல்லது நீங்கள் சந்திக்கப் போவதாககூறியிருக்கலாமே நேராக பொலீஸ் ஸ்டேஷனுக்கே வந்திருப்போம்" என்று திரு. கந்தையா தமக்குரித்தான அப்புக்காத்து பேச்சில் பேசிக்கொண்டு போனர். பொலீஸ் சுப்பரின்டென்டென்ட் சிரித்துக் கொண்டே நின்றர். பின்பு தம்மைச் சமாளித்துக் கொண்டு இப்படி நடந்ததற்கு மன்னியுங்களென்று கேட்டபடி காரில் யார் யார் இருக்கிறேமென்று கேட்டார். நாங்கள் ஒவ்வொருவரும் பெயரைச் சொன்னேம். எந்தெந்தப் பகுதிகளுக்கு பிரதிநிதிகள் என்பதையும் சொன்னேம்.

### தனித்தனி காரில்....

அவர் உதவி பொலீஸ் சுப்பிரின்டென்டென்டை அழைத்தார். அக் குரல் கேட்டதும். ஆஜானுபாகுவான ஒரு பொலீஸ் அதிகாரி நேருக்கு வந்து சல்யூட் பண்ணியபடி கட்டளைக்காக காத்து நின்றர். திரு. இராஜவரோதயத்தை அழைத்துக் கொண்டு போகுமாறு கட்டளையிட்டார். மேற்படி பொலீஸ் சுப்பிரின்டென்டென்ட் காரின் இடது பக்க முன் கதவருகில் வந்து கதவைத் திறந்தார். திரு. இராஜவரோதயம் சிரித்தபடி காரிலிருந்து இறங்கி எங்களுக்கு வணக்கம் செலுத்தினர். அவருக்கென்று ஓர் கார் ஆயத்தமாக காத்திருந்தது. அவர் அதில் ஏறி உட்கார்ந்ததும் அவரை அழைத்துச் சென்றஉதவி பொலீஸ் சுப்பிரின்டென்டென்டும் கூடவே ஏறினர். கார் பேரிரைச்சலைக் கிளப்பியபடி பிரதம

(8-ம் பக்கம் பார்க்க)





# திட்டமிடுதல்-உபகரணங்கள்: (இடைத் தொடர்பு)

## PLANNING—INSTRUMENTS OF PRODUCTION: THEIR INTER-RELATIONSHIP

**சகாதேவன்**

பாத்திரங்கள்

1. உபாத்தியாயர் உலகநாதர்
2. அப்பாக்குட்டி
3. குமரேசு

உபாத்தியாயர்:

சென்ற முறை பொருளாதாரத் துறையில் திட்டமிடுதல் என்ற விடயத்தில் உபயோகிக்கும் உபகரணங்கள், அதாவது வழிவகைகளைப் பற்றி ஆராய்ந்தோம்.

முதலாவதாக நாட்டின் ஜனத்தொகையில் இயன்றளவு கூடிய, அதாவது அதியுச்ச அளவு, எண்ணிக்கையினரை உழைப்பாளிகளாக ஈடுபடச் செய்ய வேண்டும்.

இரண்டாவதாக நாட்டுப் பொருளாதார அமைப்பின் முதலீட்டை உயர்த்த வேண்டும்.

மூன்ருவதாக உழைப்பில் ஈடுபடும் தொழிலாளிகளின் செயற்றிறமை உயர்த்தப் பட வேண்டும்.

நான்காவதாக நாட்டுப் பொருளாதார அமைப்பின் பல்வேறு அம்சங்களும் ஒன்ருெடொன்று முரண்பாடின்றி இயைந்து இயங்குதற்கேற்ற சீரிய இணைப்பு தேவை.

இந்நான்கும் வழிவகைகளாக அமையும்.

குமரேசு:

ஆம் ஆங்கிலத்தில் இவற்றை Maximize manpower employed; raise investment; raise the calibre of the workers; co-ordinate the different sectors of the economy என்று கூறலாம். இந்த வழிவகைகளைக் கடைப்பிடித்தால் நாம் குறிப்பிட்ட ஐந்து குறிக்கோள்களுள் கேந்திரஸ்தானம் வகிக்கும் குறிக்கோளாகிய பொருள் உற்பத்திப் பெருக்கம் என்பதை நம்பிக்கையாக எய்த முடியும்.

அப்பாக்குட்டி:

நீங்கள் முன்னம் சொன்ன குறிக்கோள்களுக்கும், இப்ப உபகரணங்களோ வழிவகையளோ எண்டு சொல்லுறதுக்கும் கன வித்தியாசம் இல்லைப் போல எனக்குத் தோற்றுது.

உபாத்தியாயர்:

மேலாழ்ந்தவாரியாகப் பார்க்கும்பொழுது தான் வித்தியாசமில்லைப் போலத் தெரியும் நுட்பமாக நோக்கின் செம்மையான வேற்றுமை தென்படும்.

குமரேசு:

குறிக்கோள்களை நிர்ணயிப்பதில் மக்கள் சுபீட்சம் என்ற பண்பினை விசேடமாக மனத்தில் வைத்திருத்தல் வேண்டும். அதன் காரணமாகவே நாட்டு வருவாய் சமபான்மையாகப் பங்கீடுபண்ணப்படுதல் என்ற குறிக்கோள் தொக்கு நிற்காமல் வெளிப்படையாகக் கூறப் பட்டது. அதே காரணமாகத்தான் "அதியுச்ச அளவு உழைப்புச் சந்தர்ப்பம் சிருட்டிக்கப்பட வேண்டும்" என்று குறிக்கோள் வகுக்கும் பொழுதும், வழிவகைகளை விவரிக்கும்பொழுது "அதியுச்ச அளவு எண்ணிக்கையினரை உழைப்பாளிகளாக ஈடுபடச் செய்ய வேண்டும்" என்றும் வேற்றுமையைப் புகுத்திக் கூறிஞேம்.

குறிக்கோள்கள் என்ற இடத்தில் "உழைப்புச் சந்தர்ப்பம்" என்றும் வழிவகைகள் என்ற இடத்தில் "உழைப்பாளிகள்" என்றும் வேற்றுமைபண்ணிவிடுகிறேம்.

உபாத்தியாயர்:

இன்றைக்கு இந்த நான்கு வழிவகைகள் அல்லது உபகரணங்களையும் கையாளும் முறைகளையும் கவனிக்கலாமோ?

குமரேசு:

நான்கு உபகரணங்களைக் கையாளும் முறைகளும் மிக நெடிய அத்தியாயமாகிவிடும். முதலில் நாம் ஒரு அம்சத்தை மனத்தில் பதிக்க வேண்டும். அதாவது இந்த நான்கு உபகரணங்களும் ஒன்றனுக்கொன்று தொடர்புடையன. அந்தத் தொடர்பை முதலில் கண்காணிக்கவேண்டும். தொடர்பினை ஆராயும் பொழுது ஒரு உபகரணம் கேந்திரஸ்தானம் வகிப்பதைக் கவனிப்போம். ஆகவே அந்த உபகரணத்தை எவ்வாறு உபயோகிக்கலாம் என்ற விடயத்தை முதலில் ஆராய்வோம்.

உபாத்தியாயர்:

நீங்கள் குறிப்பிட்ட தொடர்பு என்ற அம்சம் மிக்க அவசியமானதுதான். அதை எடுத்துக் கூறுங்கள் பார்க்கலாம்.

குமரேசு:

அதியுச்ச அளவு உழைப்புநரைஉற்பத்தியில்ஈடுபடச் செய்வதற்கு பிரதானமாக அபிவிருத்தியதிகம் எய்தாத நம் நாட்டைப்போன்ற சமுதாயங்களில், முதலீடு பெருகுதல்தான் திறவுகோலாக அமையும்.

உபாத்தியாயர்:

ஆம் முதலீடு ஒரு உபகரணம் ஆகும். உழைப்புநர் தொகை, இன்னெரு உபகரணம் ஆயினும் பிந்தியது, அதாவது உழைப்புநர் தொகை, முதலீடு கூடுவதையும் குறைவதையும் பொறுதிருக்கும்'

குமரேசு:

பல்வேறு உற்பத்திச் சாதனங்களை உபயோகியாது வெறும் மனித பலத்தை மட்டும் பிரயோகித்து உற்பத்தியிலீடுபடுவது இன்றைய உலகில் அசம்பாவிதம். ஆகவே உற்பத்திச் சாதனங்களின் அளவில் தங்கியிருக்கிறது ஜனத்தொகையின் கூடிய அல்லது குறைந்த எண்ணிக்கையினர் உழைப்புநராக அமைவது.

உபாத்தியாயர்:

செயற்றிறமைக்கும் முத

(9-ம் பக்கம் பார்க்க)

# சங்கப் பலகை

### தீபம்

ஆசிரியர்: சு. தியாகராசா. கிடைக்குமிடம்: 'கலையகம்', 199, செக்கடித் தெரு, கொழும்பு. விலை சதம் 10. பத்திரிகையின் அளவு: ½ எட்டுப் பக்கங்கள்

கலை இலக்கியத் திங்கள் இதழான தீபத்தின் நாலாவது இதழ் கிடைக்கப் பெற்றேம்.

அரசியல் கட்சிகளுக்கும் கத்தோலிக்க மத பீடத்துக்கும் 'சூடு' கொடுக்கும் 'தியாகி' என்று ஒரு சிறு கதை, சிருங்கார ரஸம் கொட்டும் சிங்காரக் கவிதை ஒன்று, காந்தியை "மீண்டும் பிறவாயோ?" என்று இறைஞ்சும் கவிதை ஒன்று, உழவர்கள் 'வர்க்க போதம்' பெற்று தம் உரிமைக்குப் போராட வேண்டும் என்று வலியுறுத்தும் கட்டுரை ஒன்று, சிறுவர் இலக்கியம் இலங்கையில் இனிமேலாவது வளர 'சிறுவர்களுக்கென சிறந்த பத்திரிகைகளும்' நல்ல கதைகளும் சிந்தனைக் கட்டுரைகளும் எழுதும் எழுத்தாளர்களும் உருவாகும் நன்நாள் எந்நாளோ?' என்று அங்கலாய்க்கும் விமர்சனக் கட்டுரை ஒன்றும் முக்கியமாக இந்த இதழில் இடம் பெற்றிருக்கின்றன.

### கலைச் செல்வி

(பொங்கல் இதழ்)

ஆசிரியர்: சி. சரவணபவன் பி. ஏ. வெளியீடு: யாழ்-தமிழ் இலக்கிய மன்றம். கிடைக்குமிடம்: கலைச்செல்வி காரியாலயம், கந்தரோடை, சுன்னுகம். விலை சதம் 30.

ஈழத்தில் தரமான இலக்கிய இதழ் இல்லையே என்று ஏங்கியவர்களுக்கு கலைச் செல்விதிங்கள் இதழ் வெளிவருவது சற்று ஆறுதல் அளிக்கும் என்பதில் ஐயம் இல்லை.

எழுத்துலகில் தமக்கு இடம் பிடித்துக் கொண்ட எழுத்தாளர்கள் பலரின் தரமான படைப்புகளோடு திங்கள் தோறும் வெளிவரும் கலைச்செல்வியின் பொங்கல் மலரின்பொலிவுஈழத்துஇலக்கியப்பத்திரிகைத் துறைக்கே பெருமை தருவதாகும். தமிழ் நாட்டு இலக்கியப் பத்திரிகைக்காரருக்கு உள்ள வாய்ப்பும் வசதியும் 'கலைச் செல்வி' நிர்வாகிகளுக்கும் இருக்குமாயின் அவர்கள் தமது இதழை முதலிடத்தில் வைத்து எண்ணத்தக்கவகையில் வெளிக் கொணர முடியும் என்பதை பொங்கல் மலரை இவ்வளவு சிறப்புடன் வெளியிட்டதன் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்கள். சிவாஜியின் 'ஸ்பூட்னிக் பொங்கல்' கேலிச் சித்திரம், அன்புமணியின் 'மாமாங்கம் தீர்த்தம்', ந. சஞ்சீவி எம். ஏ. யின் ஆசிரியர் கல்கியைப் பற்றிய கட்டுரை 'எழுத்திலும் பெரிய இதயம்', யாழ் நங்கையின் 'பெரியவன்', கொழும்பு சிவத்தின் 'தேவருலகில் 'பேரு மன்னர்கள்', கே. டானியலின் 'விடிநிலா', புதுமைலோலனின் 'ஈழத்துத் தலைசிறந்த பேச்சாளர்கள்' கலைச்செல்வி ஆசிரியர் சிற்பியின் 'உனக்காக கண்ணே' என்ற தொடர்

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னை அரசாங்கத்துக்கு சோதனைக் காலம்!

## வானொலி போராட்ட எதிரொலி
## கி. ஆ. பெ. விசுவநாதம் எச்சரிக்கை

## கவர்னர் உரையில் 'பஞ்சப் பாட்டு'
### திட்டம் தர முடியாத வங்குரோட்டு நிலை

(சுதந்திரன் சென்னை நிருபர்)

சென்னை சர்க்காருக்கு இது சோதனைக் காலம். கடந்த 4ந் திகதி அசெம்பிளியின் புதிய கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்த கவர்னர் திரு விஷ்ணுராம் மேதி தமது உரையில் பஞ்சப்பாட்டுப் பாடினர். பஞ்சத்தைப் போக்க சரியான மார்க்கம் சொல்லவில்லை. உருப்படியான திட்டம் தரவில்லை. சம்பிரதாயப்படி, "நடப்பதெல்லாம் நன்மைக்குத்தான்" என்று வாழ்த்தி நலம் கூறிவிட்டு வெளியேறிவிட்டார்.

விலைவாசிகளின் ஏற்றம், பருவ மழை பொய்யாது பெய்தும் விளைவு போதியளவு இல்லாததால் ஏற்படும் தானியத் தட்டுப்பாடு—அதாவது உணவு பற்றாக்குறை ஆகிய இரண்டையும் போக்க சர்க்கார் என்ன செய்யவிருக்கிறது என்று எதிர்பார்த்த மக்களுக்கு ஒரே ஏமாற்றம். கவர்னர் மேதி இரண்டு குறைபாடுகளும் இருப்பதை ஒப்புக்கொண்டார். வருத்தமும் தெரிவித்தார். அதற்கு மேலாக அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. வழமைப்பிரகாரம், "விலைவாசிகளின் ஏற்றம் இந்தியா பூராவும் உள்ளது. ஆதலால் அது ஒரு தேசியப் பிரச்னை. அதை தேசிய அடிப்படையிலேயே அணுகித் தீர்க்க முயல வேண்டும்" என்றார். அத்தோடு அது விஷயம் சரி.

### பலே வழி!

அடுத்த, உணவுப் பஞ்சப் பிரச்னை சம்பந்தமாகக் குறிப்பிடுகையில் தேசிய வளர்ச்சிக் கவுன்சில் சிபார்சுகளைச் சர்க்கார் அமுல் நடத்த இருப்பதாகப் பெருமையோடு கூறினர். கூட்டுறவு இயக்கங்கள் மூலமும் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகள் மூலமும் இரண்டு லட்சம் டன் அரிசி வாங்கி, அதை அவசியமான காலங்களில் நியாய விலைக் கடைகள் மூலம் ஜனங்களுக்கு வழங்கப்போகிறார்களாம். உணவுப் பற்றாக் குறையைப் போக்க மேதி கூறிய இந்த வழி வேறு யாருக்குத்தோன்றும்!

### பழைய பல்லவி

பரம்பிக்குளம், ஆனைமலை பகுதிகளில் ஓடும் ஆறுகளின் நீரை கேரள சர்க்காரோடு பகிர்ந்துகொள்ளுதல், நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம் ஆகிய இவைபற்றியும் மேதி பிரஸ்தாபித்து நப்பாசை தெரிவித்தார். அதெல்லாம் பழைய பல்லவி. யாரும் காது கொடுத்துக் கேட்கவில்லை.

### என். ஜி. ஒக்களுக்கு ரூபா 5 உயர்வு

என். ஜி. ஒக்களுக்கு, அதாவது கஜெட் பதிவில்லா உத்தியோகஸ்தர்களுக்கு மட்டும் மேதியின் பேச்சிலே 'பொடி' இருந்தது. அவர்களுக்கு ரூ. 5 சம்பள உயர்வு அளிக்கச் சர்க்கார் தீர்மானித்திருப்பதாகவும், உயர்வு கடந்த ஜனவரி மாதத்திலிருந்து அமுலாகும் என்றும் அறிவித்தார். "அப்பாடா, ஐந்து ரூபாயாவது அதிகப்படியாகக் கிடைத்ததே" என்று திருப்திகொள்ளும் நிலையில் அவர்கள் இல்லை.

### சென்னைக்கடிதம்

இந்த உயர்வு ஆனை வாயில் ஈ. புகுந்தமாதிரித்தான்.

மக்கள் மனம் கசந்து கொள்ளும்போது என். ஜி. ஒக்களாவது விசுவாசத்தோடு ஒத்துழைக்கலாம் என்ற சர்க்காரின் நம்பிக்கை தகர்ந்துவிட்டது. ஆட்சி சோதனைக்குள்ளாகிவிட்டது.

### வானொலி போராட்டம்

கொள்கை விளக்கத்தைவிட சென்னை சர்க்காரைச் சோதனைக்குள்ளாக்கி வரும் பெரிய பிரச்னை பிறிதொன்று இருக்கிறது. வானொலிப் போராட்டம் அது.

தமிழ் நாடு பெயர் மாற்றப் போராட்டத்திலே ஒரு சங்கரலிங்கனாரைச் சாகடித்த சென்னை சர்க்கார் வானொலி பெயர் மாற்றப் போராட்டத்திலே எத்தனை உயிரைப் பறிக்க இருக்கிறது என்று எளிதில் சொல்லிவிட முடியாது.

தமிழ்நாட்டு வானொலி நிலையங்களை 'ஆகாஷ்வாணி' என்று இந்தியில் அழைப்பதை விடுத்து 'வானொலி' என்று தூய தமிழில் சொல்ல வேண்டும் என்று கட்சி வேறுபாடு இல்லாமல் எல்லோருமே கோருகிறார்கள்.

### திருச்சியில்.....

சில தினங்களுக்கு முன்பு திருச்சி வானொலி நிலையத்தின் முன்பு இளவழகன் என்ற இளைஞர் இதே கோரிக்கைக்காக 15 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார். பெரிய அளவில் போராட்டம் நடத்த சர்வ கட்சிக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அந்தக் குழுவும், அதில் ஒரு உறுப்பினரான திருச்சி அறிஞர் கி. ஆ. பெ.

(12-ம் பக்கம் பார்க்க)

---

## மக்கள் குரல்

### தமிழ்த் தட்டெழுத்தாளர் பரீட்சை

தற்போது அரசாங்கம் சிங்களத்தில் தட்டெழுத்தாளர் போட்டிப் பரீட்சையொன்று வைக்கப் போவதாக அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதில் தமிழ்த் தட்டெழுத்தாளர் பரீட்சையைப் பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. சென்ற வருடத்திலும் ஆங்கிலத்திலும், சிங்களத்திலுந்தான் பரீட்சை வைத்தார்கள். 1955-ம் ஆண்டுக்குப் பிறகு இன்றுவரை தமிழ்த் தட்டெழுத்தாளர் பரீட்சையொன்றும் வைக்கப்படவில்லை.

எனவே, தமிழிலும் தட்டெழுத்தாளர் போட்டிப் பரீட்சையொன்றை வைக்கும்படி, தமிழ்ப் பிரதிநிதிகள் அரசாங்கத்திடம் எடுத்துக்கூறி, ஆவன செய்வார்களா?

—'தமிழ்த் தட்டெழுத்தாளன்'

குமபெனித்தெரு.

### திருத்துக!

கடந்த வாரம் தமிழரசு வாலிபர் முன்னணி மாநாடுபற்றி எழுதிய தலையங்கத்துக்கு 'பெரு நிறைவும் சிறு குறையும்' என்று தலைப்பிட்டிருந்தீர்கள்.

குறை சிறியதா என்ன? அவசியம் வேண்டிய தீர்மானங்கள் நிறைவேற்றத் தவறியது பெருங்குறை யல்லவா? எனவே தலைப்பு திருத்தப்பட வேண்டும். 'பெருங் குறையும் சிறு நிறைவும்' என்று அடிதலை மாறி இருக்க வேண்டும்.

—கே. இராமலிங்கம்

சாவகச்சேரி

### முன்னெச்சரிக்கை வரவேற்கத்தக்கது

பருத்தித்துறையில் நடைபெற்ற தமிழரசு வாலிபர் முன்னணியின் அரசியல் மகாநாட்டில் திரு வன்னிய சிங்கம் விடுத்துள்ள முன்னெச்சரிக்கை வரவேற்கத் தக்க ஒன்றாகும்.

கடந்த காலங்களில் எமது தலைவர்கள் தீர்க்க தரிசனமாகக் கூறிய பல அரிய யோசனைகளை நம்மில் பலர் அசட்டை செய்தோம். அதன் பலனை இன்று அனுபவிக்கிறோம்.

அந்தத் தவறை இனிமேலாவது செய்யாமலிருப்பது நமக்கே நலன் தருவதாகும். அரசாங்க வங்கிகளில் உள்ள நமது சேமிப்புகளை உடனடியாக நாம் வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டும்.

—"குமாரச் செல்வன்"

காலி.

### விந்தையிலும் விந்தை!

'மலைநாட்டுத் தமிழர்களை நம்பாதீர்கள்' என சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணிக் கூட்டத்தில் திரு சுந்தரலிங்கம் கூறியது உண்மையில் ஒற்றுமையை [illegible] தமிழர் எவருக்கும் [illegible]

(12-ம் பக்கம் பார்க்க)

---

## பருவம் பேசினால்....!

பரதன்

என்னைப் பல கூறுகளாகப் பிரித்திருக்கிறீர்கள். அவற்றில் இளமைப் பருவம் என்ற ஒன்றும் இருந்தால் அது பேசுவதாக எண்ணிக் கொள்ளுங்கள். பசுக் கூட்டம் வாழும் வயற்காட்டிலே பசுத்தோல் போர்த்த புலியும் சுயநல நோக்கோடு வாசம் செய்வதுபோல இன்றைக்கு எமது பெயரைச் சொல்லிக்கொண்டு சில டுப்ளிக்கேட்டுகளும் உலவுகின்றன. ஜாக்கிரதை! எனது சுயரூபத்தை எப்பொழுதும் இயற்கை அள்ளிக் கொட்டிவிட்டிருக்கும் பொலிவையும் வனப்பையும் கொண்டே தெரிந்து கொள்ளலாம். ஆடம்பர அலங்காரம், உதட்டுச் சாயம், பவுடர் பூச்சு, மேனி மினுக்கு—இவைதான் போலிகளின் அடையாளங்கள்; ஏமாறாதீர்கள்.

உங்களில் ஒவ்வொரு ஆணையும் பெண்ணையும் நான் உரிய காலத்தில் வந்து சேர்ந்து முடிவு காலத்தில் விட்டு விலகியதும், நீங்கள் என்னை இழந்து விட்டதாக காட்டிக்கொள்ளத் தயாராக இல்லை. இதனால் சிலருக்கு சில நன்மைகள் தோன்றிய போதிலும், சிலருக்கு சில கஷ்ட நஷ்டங்களும் ஏற்படாமலில்லை. உதாரணத்துக்கு உங்களுடைய நண்பர் ஏகாம்பரத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.

### தீராத ஆசை

ஏகாம்பரம் பிழைப்புக்காக பிறந்த ஊரை விட்டு கொழும்பு நகரம் வந்து சேர்ந்த ஆசாமி. அவருக்கு யாராவது பெண்களோடு—எத்தனை பெண்கள் அகப்பட்டாலும் சரிதான்—காதல் செய்ய வேண்டுமென்று ஒரு தீராத ஆசை. அந்த முயற்சிகளில் இறங்கியதன் பயனாக கொழும்பில் கிழவிகளே கிடையாது என்ற முடிவுக்கு வந்துள்ளார். அது எப்படி இருந்த போதிலும் அவருடைய கதையைக் கொஞ்சம் கவனிப்போம்.

### பின் தொடர்ந்தார்

அந்த ஞாயிற்றுக்கிழமை மாலை, தன்னை நன்றாக அலங்கரித்துக்கொண்டு விடுதியை விட்டு வெளியேறினார். வெளியேறிய அவரால் எந்தப் பக் [illegible] ஒரு நாணயத்தை விட்டெறிந்து தலையா 'வாலா' என்று பார்க்கலாமா என்று எண்ணினர். அதற்கு அவசியமே இல்லாமல் அவள் தெரு வழியாக வந்துகொண்டிருந்தாள். நமது கதாநாயகன் ஏகாம்பரத்தை அந்த ஆரணங்கு கண்டதும் ஒரு புன் முறுவலை அவிழ்த்துக் கொட்டிவிட்டு அசைந்தாள்—நடந்தாள்.

அதன் பின்பும் அவர் அந்தச் சிலையைத் தொடர்ந்து பின் செல்லவில்லையென்றால் அனுபவமில்லாத அசடு—வாழத் தெரியாத கோழை என்று அவருடைய நண்பர் குழாம் கேலி செய்யக் கூடும். தனக்கென்றில்லாமல் பிறருக்காக—உலகத்துக்காக வாழ்ந்து தொலையும் மனிதப் புழுக்களுக்கு இந்த ஒரு ஏகாம்பரம் ஏன் மறுவை உண்டு பண்ண வேண்டும்? தொடர்ந்தார்!

### மைதானத்தில் இருவரும்

அவளுடைய பொன் மேனியின் பின்னழகை மேய்ந்தபடி எவ்வளவோ தூரம் பின் சென்று விட்டார் ஏகாம்பரம். எவ்வளவு தூரம் என்று வரையறுத்துக் கூற முடியாது. ஒரு வேளை தனியாகத் திரும்பி வந்தால் மைல்க் கணக்கில் அளவிடலாமோ என்னவோ!

அந்த மைதானத்தில் பரந்து கிடந்த புற்றரையில் அவள் அமர்ந்திருந்தாள். பொது மக்களின் வாழ்க்கைக்காக அரசினர் அமைத்துத் தரும் வசதிகளில் இந்த மைதானமும் ஒன்று. அங்கே அவளைப்போல எத்தனையோ பெண் மலர்கள்; ஏகாம்பரத்தைப் போன்ற ஏமாளி ஆண் வண்டுகள். சிவலோகம் போய்விட்ட வள்ளுவரையும் பாரதியையும் விழா வெடுத்துக் கௌரவிக்கிறோம். அதிவீரராம பாண்டியனையும் வத்சயாயனரையும் வேறெப்படிக் கௌரவிப்பதாம்?

இதுதான் சமயம் என்று அவளுக்கு ஒரு பத்தடி தூரத்தில் போய் அமர்ந்தார் ஏகாம்பரம். அவளுடைய பட்டு முகத்தைத் தொட்டு வந்த தென்றல் அவரையும் தழுவிக்கொண்டு அப்பால் சென்றது.

### ஏகாம்பரம்

அங்கே அவர்கள் இருவரையும் தனியாக விட்டுவிட்டு நாங்கள் சிறிது நேரம் விலகிக் கொள்வோம். அந்த இடை நேரத்தில் ஏகாம்பரத்தைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லிவிடுகிறேன். உங்கள் ஆண்டவன் வகுத்த இரு சாதிகளில் அவர் ஆண் சாதி. வயது கூட ஒரு இருபத்திச் சொச்சம்தான். ஒல்லியான உருவம், போதுமான உயரம், நல்ல அழகான கறுப்பு நிறம். இந்தக் காலத்தில் அவரிடமும் ஏதோ 'திறமை'யைக் கண்டு ஒரு உத்தியோகம் தந்தார்

(11-ம் பக்கம் பார்க்க)


ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை
வைகாசி 1959

அற்லஸ் ஹோல் அளிக்கும் விளக்கமான பாடங்களைப் படிப்பதன் மூலம் இவ் வருடம் பரீட்சையில் சுலபமாகத் தேறி நீங்களும் ஒரு

ஆசிரியராகலாம்

★ சாதாரண பயிற்சி
★ விஞ்ஞானப் பயிற்சி
★ தூய கணிதப் பயிற்சி

விபரங்களுக்கு எழுதினல் இலவசமாக அனுப்பப்படும்.

அற்லஸ் ஹோல்.,
தபால் பெட்டி 649, கொழும்பு.
போன்: 9759.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாடகம்: தியாகச் சின்னம்

சரஸ்வதி நாகராஜன்



## காட்சி-8

(நந்தவனம். விநோதினி மடிக்கட்டில் உட்கார்ந்து தளபதி வீரவர்மனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருள். சிறிது நேரம் கழித்து தளபதி வருகிருர். விநோதினி அவரைக் கண்டும் காணுதது போல மறுபக்கம் திரும்பிக் கொள்ளுகிருள்.)

வீரவர்மர்: விநோ...இங்கே பார்!

விநோதினி:......(மௌனம்)

வீரவர்மன்: நேரத்தோடு வரவில்லையென்று என்மேல் கோபமா விநோ?...எவ்வளவு முக்கியமான காரியத்தில் ஈடுபட்டிருந்தேன் என்பது தெரிந்தால் நீ கொஞ்சம் கூட கோபப்பட மாட்டாய். ...எங்கே என்னைப் பார்... (முகவாய்க் கட்டையை நிமிர்த்து கிறார்.)

விநோதினி: ஆமாம். மிக மிக முக்கியமான காரியம். ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை எல்லோரையும் சந்திக்கப் போயிருந்தீர்களோ?

வீரவர்மன்: ஹஹ் ஹஹ் ஹா...! அவர்கள் எல்லோரும் தான் ஒரே உருவம் எடுத்து இங்கேயே இருக்கிருர்களே! அவர்களைத் தேடி நான் ஏன் போக வேண்டும்?...அது கிடக்கட்டும் விநோ...இதோ பார். நான் அன்றைக்கு சூசகமாக சொன்னது இன்றைக்கு நிஜமாகவே நடக்கப் போகிறது. இன்னும் சில மணி நேரத்தில் உன்னைப் பிரிந்து போர் முனைக்குப் போக வேண்டியிருக்கிறது...

விநோதினி: ஆ...நிஜமாக சொல்லுகிறீர்களா, பிரபு?

வீரமர்மன்: ஆமாம் விநோ. பாண்டிய நாட்டுப் படைகள் நம் எல்லைக் கருகில் குவிந்திருப்பதாக செய்தி வந்திருக்கிறது. இன்றிரவு மூன்ரும் ஜாமத்தில் நமது படைகள் கிளம்ப வேண்டும் என்று அரசர் கட்டளைப் பிறப்பித்திருக்கிருர்.

விநோதினி: பிரபு......நீங்களும் செல்ல வேண்டுமா? வீரர்கள் மாத்திரம் போனுல் போதாதா?

வீரவர்மன்: அசட்டுப் பெண்ணே! தலையில்லாத உடல், உயிர் வாழுமா? அது மாதிரித்தான் இதுவும். தளபதி யில்லாத படை எதற்கு உதவும்?...கண்ணே, நான் எங்கு சென்ருலும் உன் உருவம்தான் என் கண் முன்னே தோன்றும். மின்னும் வாளிலே, பாயும் ஈட்டியிலே, ஓடும் ரத்தப் பிரவாகத்திலே எல்லாம் உன் உருவம்தான் நிற்கும்.

விநோதினி: பிரபு...பிரபு... வர எத்தனை நாளாகும்? சீக்கிரம் வந்து விடுவீர்களா?

வீரவர்மன்:எத்தனைநாள்?... யாரால்தான் இதற்கு விடை கூற முடியும்? 'வெற்றி அல்லது வீரமரணம்-இதுதானே விநோ வீரர்களின் கணக்கு! எதிர் காலம் தான் உனக்கு விடை கூற வேண்டும்.

விநோதினி: இந்தப் பாழும் யுத்தங்கள் ஏன் வருகின்றன? யுத்தமே வராமல் ஒருவராலும் தடுக்க முடியாதா?

வீரவர்மன்: மனிதனுடைய உள்ளத்திலிருந்து பேராசை, பொருமை இந்த இரண்டு குணங்களையும் நீக்கி விட முடியுமானுல் நிச்சயம் உலகத்தில் யுத்தங்களையும் தவிர்த்து விடலாம். ஆனுல் அந்த குணங்கள் தான் மனிதனுடைய ரத்தத்திலேயே ஊறிக் கலந்துவிடுகின்றனவே.

விநோதினி: பிரபு...நீங்கள் சொலவதைப் பார்க்கும் போது எனக்கு என்னவோ பயமாயிருக்கிறது.

வீரவர்மன்: பயப்படுவதற்கு ஒன்றுமேயில்லை, விநோ. ஆண்டவன் உன்னையும் என்னையும் பிரிக்கக் கூடாது என்று எண்ணிஞல், நிச்சயம் வெற்றி மாலை சூடி திரும்புவேன். என் வாழ்க்கையில் இதுவரை நான் தோல்வியைக் கண்டதில்லை. இனிமேலும் காணமாட்டேன் என்ற நம்பிக்கை இருக்கிறது...அதற்கு மேல் ஆண்டவன் சித்தம்...சரி, நேரமாகிறது, நான் வருகிறேன் எனக்கு விடை கொடு கண்ணே...!

விநோதினி:...பிரபு... (கண் கலங்குகிருள்.)

வீரவர்மன்: அழாதே விநோ. சந்தோஷமாக விடைகொடு.

விநோதினி: சரி, சென்று வாருங்கள்.

(தளபதி மனமில்லாமல் பிரிந்துசெல்லுகிருர். விநோதினி கவலையுடன் பார்த்துக்கொண்டிருக்கிருள். இதுவரை தூரத்தில் ஒளிந்து இவர்களைப் பார்த்துக் கொண்டிருந்த மாயா மெதுவாக வர்து விநோதினியின் தோளைத் தொடுகிருள். விநோதினி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கிருள்.)

விநோதினி: ஆ, மாயாவா? நீ எப்போது வந்தாய்?

மாயா: இப்பொழுது தான் வந்தேன்...ஆமாம் அக்கா, ஏன் ஒரு மாதிரியாக இருக்றீர்கள்? உடம்புக்கு ஏதாவது செய்கிறதா.

விநோதினி: உடம்புக்கு ஒன்றுமில்லை, மாயா. உள்ளத்திலேதான் வியாதி.

மாயா: பின்னே வராமலா இருக்கும்? ஆதவன் உதிக்க மறந்தாலும் தளபதி தங்களைச் சந்திக்க மறக்க மாட்டாரே; அவர் கொஞ்ச காலத்துக்கு வரமாட்டார் என்பதை நினைக்கும் போது உள்ளத்துக்கு வியாதி வராமல் என்ன செய்யும்?

விநோதினி: அடி கள்ளி, உனக்கு எப்படி தெரியும் இதெல்லாம்?

மாயா: எனக்கா? பாம்பின் கால் பாம்பறியும். நீங்கள் தினசரி இந்த நந்தவனத்துக்கு வருவது எதற்கு என்று எனக்குத் தெரியாதா?

விநோதினி: அது சரி, நாளையிலிருந்து அவர் வரமாட்டார் என்று உனக்கு எப்படி தெரியும்?

மாயா: அக்கா, என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். நான் தற்செயலாக இந்தப் பக்கம் வந்தேன். நீங்கள் அழுவதையும் தளபதி கவலையாயிருப்பதையும் கண்டு விஷயம் என்னவாயிருக்கலாம் என்று யோசித்தேன். பின் செய்யக் கூடாத குற்றம் ஒன்றையும் செய்து விட்டேன்.

விநோதினி: குற்றமா.... என்ன சொல்லுகிருய்?

மாயா: காதலர்கள் கூடியிருக்கும்போது அவர்களை ஒளிந்து பார்ப்பது குற்றம் தானே? அப்படியிருந்தும் உங்களுடைய கவலைக்கு காரணம் என்னவாயிருக்கலாம் என்று தெரிந்து கொள்ள ஆசைப்பட்டேன். ஆகவே...

விநோதினி: ஒளிந்திருந்து பார்த்தாயாக்கும்!

மாயா: ஆமாம் அக்கா. அதனுல் தான் தாங்கள் செய்த ஒரு பெரிய தவறும் தெரிய வந்தது.

விநோதினி: தவரு...நான் செய்தேனு?

மாயா: தவறு தான். மன்னிக்க முடியாத தவறு ஒன்று செய்து விட்டீர்கள்!

விநோதினி: சுற்றி வளைத்துப் பேசாமல் சீக்கிரம் சொல்லேன் மாயா...என்ன தவறு செய்தேன்?

மாயா: அப்பப்பா, என்ன அவசரம்! ஏனக்கா, அவருக்கு எவ்வளவோ முக்கியமான வேலைகளிருந்தும் கூட உங்களைப் பார்க்க ஓடோடி வந்தார்? போர்க் களத்திற்குச் செல்ல உங்களிடம் உத்தரவு கேட்டார். யுத்தம் செய்யும் போதும் உங்கள் ஞாபகமாகவே இருப்பேன் என்று சொன்னுர்...

விநோதினி: அதெல்லாம் கிடக்கட்டும்...நான் செய்த தவறு என்னவென்று சொல்லவில்லையே.

மாயா: போதுமே உங்கள் அவசரம். அதைத்தானே சொல்லி வருகிறேன்...அப்புறம், நீங்களும் தலையசைத்து கண்ணைக் கசக்கி, 'சரி, போய் வாருங்கள்' என்று சொல்லி விட்டீர்கள். அவரும் சிவனே என்று போய் விட்டார். ஆனுல் என்ன நினைத்துக் கொண்டு போயிருப்பார் தெரியுமா? 'என்னடா இந்தப் பெண், கொஞ்சம் கூட மரியாதை தெரியாதவளாயிருக்கிருளே. நாம் இவ்வளவு எடுத்துச் சொல்லியும் தன் ஞாபகமாக வைத்துக் கொள்ளட்டும் என்று ஒரு கணையாழியாவது கொடுத்தாளா?' என்று நினைத்திருப்பார்...!

விநோதினி: கணையாழியா? மாயா, என்ன சொல்லுகிருய்? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!

மாயா: நல்ல ஆளக்கா நீங்கள். காதல் செய்ய தெரியும், ஆனுல் காதலனிடம் எப்படி நடந்து கொள்வது என்பது தெரியாது...தூரதேசத்துக்குப் போகிற காதலரிடம் தன் ஞாபகமாக வைத்துக் கொள்ளும்படி கணையாழி கொடுப்பது தமிழ்ப் பெண்களின் மரபல்லவா? அவரும் அதைத் தானே எதிர்பார்த்தார்...?

விநோதினி: மாயா, உண்மையாகவா சொல்லுகிருய்? அவர் என்னைப் பற்றி என்ன நினைத்திருப்பார்?

மாயா: கவலைப்படாதீர்களக்கா. இன்னும் ஒன்றும் பிந்தி விடவில்லை. மூன்ரும் ஜாமத்துக்கு மேலேதானே புறப்படப் போவதாகச் சொன்னுர். கொண்டுபோய் கொடுத்துவிட்டால் போகிறது.

விநோதினி: நான் எப்படி மாயா போவேன்? அகால நேரத்தில் வெளியே போய் பழக்கமில்லையே! அதோடு...

மாயா: அக்கா, நீங்கள் இருங்கள். உங்களுக்கு ஆட்சேபணையில்லையென்ருல் நான் கொண்டுபோய் கொடுக்கிறேன்.

விநோதினி: தெய்வம் போல வந்து சேர்ந்தாய் மாயா. இல்லாவிட்டால் என் கதி...ஐயோ, அதை நினைக்கும் போதே பயமாயிருக்கிறதே...இதோ இதை...எப்படியாவது அவரிடம் கொடுத்துவிட்டு வா.

(மோதிரத்தைக் கழற்றிக் கொடுக்கிருள். மாயா செல்கிருள்.)

## காட்சி-9

(தளபதி வீரவர்மன் தனது மாளிகையில் மேலும் கீழுமாக உலவிக் கொண்டிருக்கிருர். மாயா கதவைத் தட்டுகிருள்.)

வீரவர்மன்: யாரது?

மாயா: நான்தான் தளபதி, மாயா.

வீரவர்மன்: யார்,மாயாவா? (கதவைத் திறந்து) மாயா, என்ன இந்த நேரத்தில்? ஏதாவது அவசரமான செய்தியா?

மாயா: விநோதினி அக்கா அனுப்பினுர்கள். ஒரு முக்கியமான விஷயம்.

வீரவர்மன்: அப்படியா,விஷயம் என்ன, சொல்லு.

மாயா: தங்களுடன் சாயந்திரம் பேசிக்கொண்டிருக்கும் போதே கொடுக்க நினைத்தார்களாம். ஆனுல், தங்களைப் பிரிய வேண்டியிருக்கிறதே என்ற கவலையில் மறந்துவிட்டார்களாம்.

வீரவர்மன்:என்ன கொடுக்க நினைத்தாளாம்......எனக்கு விளங்கவில்லையே!

மாயா: இதோ இதைத் தான்.தன் ஞாபகமாக வைத்துக்கொள்ளச் சொன்ஞர்கள். (கணையாழியைக் கொடுக்கிருள்.)

வீரவர்மன்: ஓ...ரொம்பச் சந்தோஷம் என்று சொல்லு.

(தளபதி கீழே பார்த்துக் கொண்டு விரலில் மோதிரத்தை மாட்டும்போது, மாயா பின் புறமாக உள்ள தளபதியின் மஞ்சணையில் தலையணைக்கு கீழே ஓலையைத் திணித்து விடுகிருள்.)

மாயா: நான் வருகிறேன்.

வீரவர்மன்: இதோ இந்த மாலையை பரிசாக வைத்துக் கொள் மாயா...நீ ரொம்ப சிரமப் பட்டிருக்கிருய்.

மாயா: ரொம்ப நன்றி. என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். எனக்குஇட்டவேலை முடிந்துவிட்டது. உங்களிடம் பரிசுபெற்ருல்அக்கா கோபித்துக்கொள்வார்கள்.......நான் வருகிறேன்.

(வெளியே வந்த மாயா,இருட்டில் பிச்சைக்கார வேஷத்திலிருந்த தன் அண்ணன் குசலவனிடம் தலையணைக்கடியில் ஓலை இருக்கிறது என்பதை சைகையால் சொல்லிவிட்டுமறைகிருள்.)

(தொடரும்)

### கொஸ்லாந்தை இ. தி. மு. க. கழகம்

கொஸ்லாந்தை மாவட்ட இ. தி. மு. க. கிளைக் கழகத்தின் ஆரம்பக் கூட்டம் சென்ற 25-1-59-ல் பழைய பஸ் நிலையத்தில் தோழர் திரு. அ. வைத்தியநாதன் தலைமையில் நடைபெற்றது.

திரு. இரா. சுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்திஞர். தோழர்கள்: மு. அ. வேலழகன், சிவேரா, கந்தசாமி, குமாரசாமி, சுந்தர் ஆகியோர் பேசினுர்கள். திரு. இளஞ்செழியனுக்கு கூட்டத்தில் வரவேற்பளிக்கப்பட்டது.

தோழர். இராசு செல்லத்துரையின் நன்றியோடு கூட்டம் இனிது முடிந்தது.


நன்றி கூறும் தமிழ் அன்பர்கள்

எனக்கு வயது 39 ஆகிறது. 5 குழந்தைகளுண்டு. ஆஸ்த்மா என்ற நோய்வு 15 வருட காலமாக என்னை சித்திரவதை செய்தது. நடுச் சாமம் தனியாக ஊசி போடுவதற்காக ஆஸ்பத்திரிக்குச் சென்ற நாட்களை இன்று நினைத்தாலும் பயமாக இருக்கிறது. ''ஆஸ்த்மடிக்கா'' 3 பாட்டில்கள் எனக்கு பூரண குணமளித்துள்ளது என்பதை ஆண்டவன்மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன்.

ஒப்பம்
திரு. கே. அப்துல்காதர்,
55/2, காலி ரோட்,
கொழும்பு—4.

என் மனைவிக்கு 10 வருட காலமாக இருந்தஆஸ்த்மா, மாரடைப்பு, மார்ச்சளி பூரண குணம். நன்றி.

திரு. வி. முத்துக்குமார்,
Erracht Estate,
Dehiowita.

"ஒரே பாட்டில் ஆஸ்த்மடிக்கா"ஸ்பெஷலில் பலவருஷமாக எனக்கு இருந்த ஆஸ்த்தா பூரண குணம். என் இதய நன்றி.

திரு. எல். செல்லையா,
Stokland Group,
Udugama.

எனக்கு 15 வருடமாக இருந்த ஆஸ்த்மா பூரண குணம். நோய்வு ஏற்பட்ட நாள் ஞாபகமேயில்லை. என் நன்றி ஆஸ்த்மடிக்காவுக்கு.

ஸ்ரீமதி இ. சரவணமுத்து
"ரமணிவாசம்," தெல்லிப்பழை.

ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்ச்சளி, மார்பில் "கர்" என்ற சத்தம், இரவில் ஏற்படும் இருமல் இவைகளுக்கு

'ஆஸ்த்மடிக்கா'
(ஒரு நவீன சஞ்சிவி)

ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல் ரூ. 15/-
ஆஸ்த்மடிக்கா சாதாரணம் ரூ. 5/-

சுகாதார வைத்தியசாலை.,
255 காலி ரோட்,
(பம்பலப்பிட்டிய கண்வண்ட் எதிரில்)
கொழும்பு- 4.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கைலாசம்-கண்டேன் (5)



### பாகேஸ்வரம்

ஜூன்—5 மாலை

6060 அடி உயரத்தில் இருந்தோர் 3200 அடியிலுள்ள பாகேஸ்வரத்துக்குக் கீழே வந்துவிட்டனர். கல்லும் மலையும் தாண்டிப் பெருங்காடுஞ் செடியும் கடந்து எல்லையில் சமவெளியில் ஓடிவரும் சரயுநதி பாகேஸ்வரத்தை வளம்படுத்துகின்றது. சலசலத்தோடும் சரயுநதிக் கரையில் வருவோரை விருப்புடன் ஏற்று, இளைப்பாற இடமளிக்கும் வாடி வீடு அமைந்திருக்கின்றது. எதிர்க்கரையில் வானுறவோங்கித் தழைத்துப் பரந்து செழித்து நிற்கும் அரசமரம் வாடி வீட்டின் தோற்றப் பொலிவை மிகைப்படுத்துகிறது. ஜூன் 5ந் திகதி மாலை நேரம் வாடி வீட்டை அடைந்தோம். பாகேஸ்வரத்தின் அழகை இருநாட்கள் இரசித்து இன்புற்றோம். கோமதியும், சரயுவும் சங்கமிக்கும் இடம் தனித்ததோர் அழகினைத் தருகின்றது. அப்புண்ணிய தீர்த்தத்தில் யாத்திரிகர் நீராடி உடற்றூய்மையோடு, உளத்தூய்மையும் பெறுகின்றனர்.

### மார்க்கண்டேயர் பாறை

அமைதி நிலவிய மாலை நேரம் சரயு நதிக் கரையை அடைந்த எம்மைத் தனது அலைக்கரத்தால் அழைத்தாள். கரையிலிருந்து அழகை அள்ளிப் பருகிய உள்ளம் அன்னையின் அணைப்பில் அமிழ்ந்தி மகிழ விழைந்தது. விருப்புடன் சென்றேன். விரைந்து அணைத்தாள். உடலும் உள்ளமும் குளிர்ந்தன. நதியின் மத்தியில் பெருங்கற்பாறையொன்றைக் கண்டேன். சரயு அதனைத் தாண்டிக் குதிக்க விரைந்தோடி, தோல்வியுற்றுத் திரும்புகின்றனளோ? அன்றேல் அலைக் கரத்தால், நீரை அள்ளிச் சொரிந்து அபிஷேகம் செய்கின்றனளோ? என்றயர்ந்தேன்.

### பெயர் வந்த விதம்

'அந்தப் பாறையைக் கண்கொட்டாது பார்க்கின்றீர்களே, அது மார்க்கண்டேயர் பாறை' என்று சற்றுத் தூரத்தில் நின்ற அன்பர் ஒருவர் கூறினார்.

'அப்படியா? ஏன் மார்க்கண்டேயர் என்ற பெயர் இப்பாறைக்கு வந்தது?' என்று வினவினேன்.

அன்பர் மேலும் கூறினார் 'ரிஷி மார்க்கண்டேயர் அந்தப் பெரும் பாறையில் இருந்துதான் பெருந்தவம் செய்தார். அப்பொழுது பிரார்த்தனை நூலாகிய துர்க்கா சப்தசதி என்ற திவ்ய நூலையும் ஆக்கினார். இங்கேதான் ஈசன் இமவான் மணம் புரிந்தான் என்று புராணங்கள் கூறும்' என்றார்.

மேகத்தில் இருள் படர ஆரம்பித்தது. நம்மை மறந்து நதியுள் நின்று புராணகாலத்தில் புகுந்த நாம், மீண்டும் திரும்பி வந்தோம். நீண்டநேர ஸ்நானத்தை முடித்துக்கொண்டு கரை சேர்ந்தோம். இரவு அவ்வூர்ச் சிறார் சிறுமிகளுடன் நீண்ட கூட்டுப் பிரார்த்தனை நடந்தது. உணவை முடித்து உறங்கச் சென்றோம்.

### மகர சங்கராந்தி உற்சவம்

மறுநாட் காலை சரயு, கோமதி சங்கமத்தில் தீர்த்தமாடி பாகேஸ்வர ஆலயத்தைத் தரிசிக்கச் சென்றோம். பாகேஸ்வர நாதன் (சிவன்) திருப்பாதம் பணிந்து பேரானந்தம் பெற்றோம். அங்குள்ள பக்தர் குழாம் வருடா வருடம் மகர சங்கராந்தி உற்சவத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றனர். அந்நாட்களில் ஊர் மக்களனைவரும் ஒன்று கூடுகின்றனர். பலவகைப் பொருள்களைக் கொள்வனவு விற்பனவு செய்யப் பெருஞ் சந்தையும் அந்நாட்களில் கூடுகின்றது. சுருங்கக்கூறின் மகர சங்கராந்தி உற்சவம் மக்களை மகிழ்ச்சியின் எல்லைக்கு அழைத்துச் செல்கின்றது.

### சண்டி தேவிக்கு உயிர்ப்பலி

பிற்பகல் பாகேஸ்வரத்திலுள்ள மலை உச்சிக்குச் சென்றோம். மலை, சிறிய ஆனால் சிறந்த இடம். இக்குறுகிய மலை நடை, இனி வரும் பெருவழிக்கு எமது பாதரட்சைகள் எவ்வாறு ஒத்துழைக்கும் என்று மாதிரி பார்த்துக்கொள்ளவும் உதவியது. மலையுச்சியிற் சண்டி தேவி வீற்றிருக்கின்றாள். தேவியைத் தரிசித்து, அவ்விடத்துச் சிறப்பை விசாரித்தேன். அருகே நின்ற அன்பரொருவர் அச்சக்தியின் மகிமையை எடுத்துரைத்தார்.

சுவாமி சச்சிதானந்தா

சண்டி தேவிக்கு மக்கள் பலி கொடுத்து வழிபடுகின்றனர் என்றும் அங்குள்ள எருமைக் கடாக்களையே பலியிடுகின்றனர் என்றும் அறிந்தேன். தாமசகுணம் நிறைந்ததும், எதிர்ப்படுவோரை எதிர்ப்பதுமான எருமைப் பலியைத் தேவி ஏற்றுக்கொள்வது ஏன்? என்று சிந்தித்துப் பாருங்கள். தெய்வம் ஏற்பது வெறும் மிருகப் பலியன்று. ஆன்ம ஈடேற்றத்துக்குத் தடையாயுள்ள தாமசகுணத்தையும், வீறுகொண்ட ஆணவத்தையுமே தெய்வ சந்நிதானத்திற் பலியாக்க வேண்டும். இதுதான் பலியிடுதலை விளக்கும் தத்துவம். இன்று உண்மைத் தத்துவத்தை மறந்து, மிருகங்களைப் பலி கொடுத்தால் ஆண்டவன் மகிழ்வார் என்று எண்ணுகின்றனர். எத்தகைய பேதமை!

### சாம்பல் மரம்

பாகேஸ்வரத்தை சாம்பல் மரக்காடுகள் (Ash Wood) அழகுபடுத்துகின்றன. வளைந்து கொடுக்கும் தன்மைமிக்க அம்மரத்திலிருந்து டெனிஸ், பாட்மின்ரன் போன்ற விளையாட்டுத் துடுப்புகள் செய்யப்படுகின்றன. அரசாங்கத் தொழிற்சாலையொன்று அப்பொருட்களை உற்பத்தி செய்கின்றது. பாகேஸ்வரத்திலேயே எமது யாத்திரைக்குத் தேவையான இரும்புப் பூணிட்ட ஊன்றுகோலைத் தயார் செய்துகொண்டோம்.

### ஜோசியின் நட்பு

ஜூன்—7

மாலையில் பிறன்சிபல் ஜோசியைச் சந்தித்தோம். சிறந்த அறிஞர், நிறைந்த ஞானம் பெற்றவர், விரிந்த மனப்பான்மை உடையவர். அன்னார் நட்பைப் பெற்றது எமது யாத்திரைக்குப் பெரும் பயனளித்தது. அவரிடமிருந்து கைலாய யாத்திரை அனுபவத்தைக் கேட்டுப் பல புதிய விஷயங்களைத் தெரிந்துகொண்டோம். அன்றிரவு சிறந்த சத்சங்கமும் இராமாயணக் கதையும் சிந்தனைக்குப் பெருவிருந்தாகின. அப்பெரியாரிடம் விடைபெற்றோம். எமது யாத்திரைக் காலத்தில் உணவை ஆக்கித் தர சமையற்காரனையும் பாகேஸ்வரத்தில் ஒழுங்கு செய்தோம். திவான் சிங் சிறந்த சமையற்காரன் மட்டுமல்ல, உற்ற துணைவனாகவும் உண்மை ஊழியனாகவும் விளங்கினான்.

### குதிரைகள்

கால்நடையாக மலை மீது ஏறும்போது பழக்கமற்றவர்கள் ஒரு சிறு பாரத்தைத் தானும் கையில் எடுத்துச் செல்ல இயலாது. அதனால் இரு மாதங்களுக்குத் தேவையான உணவு, சமையற்பாத்திரங்கள், குளிரைத் தாங்கும் உடைகள், படுக்கைகள் ஆகியவற்றைச் சுமந்து வர 4 குதிரைகளையும் 2 கூலியாட்களையும் ஆயத்தப்படுத்திக்கொண்டோம். தற்சமயம் பாகேஸ்வரம்தான் இவ்வேற்பாடுகளுக்கு ஏற்ற இடமாக இருக்கிறது. இங்கு குதிரைகள் என்பது மட்டக் குதிரைகளே, அதாவது உயர்சாதிக் குதிரைக்கும் கழுதைக்கும் பிறந்தவை. அங்குள்ள மக்களுக்கும், குதிரைகளுக்கும் சுமைதூக்குவதிலும் மலை ஏறுவதிலும் நிறைந்த பயிற்சி உண்டு. கூலிகள் எம்முடன் பஸ்ஸில் வர, குதிரையாட்கள் குதிரைகளுடன் நடந்து கப்கோட்வரை வந்தனர்.

### வாகனப் பிரயாணம் முடிந்தது

ஜூன்—8

பாகேஸ்வரத்திலிருந்து காலை புறப்பட்டு 14 மைல் பஸ்ஸிற் சென்று கப்கோட்டை அடைந்தோம். இந்தப் பதினான்கு மைல்களும் இவ்வருடம்தான் அமைத்த பாதை. இன்னும்

(15-ம் பக்கம் பார்க்க)

## மின்னற் கொடி

மின்னற் கொடியணங்கே,—ஒளி
மேனி படைத்தவளே; என்
கண்ணைப் பறித்துவிட்ட,—உன்
கட்டழ கென்னவென் பேன்? 1

ஓடும் முகிற்திரை யில்,—உயிர்
ஓவியம் தீட்டிய நீ,—கண்
மூடித் திறப்பதற் குள்,—அதை
மூடி மறைத்தது மேன்? 2

கொட்டும் மழையினி லே,—நின்று
கும்மாளம் கொட்டிய நீ,—என்கை
எட்டிப் பிடிப்பதற் குள்,—உடன்
எங்கு மறைந்தனை யோ? 3

உன்கரத் தைப்பிடித் தே,—விண்ணில்
ஓடி விளையா ட,—பேதை
என்மனத் தாசைகொண் டேன்;—அதை
ஏற்க மறுத்தது மேன்? 4

வல்லிடி வீரனி டம்,—உள்ளம்
மருவி விட்டத னால்,—சிறு
பிள்ளையின் காதலென் றே,—எனைப்
பேண மறுத்தா யோ? 5

வான்மகள் பெற்றெடுத் த,—ஒளி
வண்ணச் சுடர்க்கொடி யே;—விண்
மீன்களில் மூத்தவ ளே;—கன
வேகம் படைத்தவ ளே! 6

மையிருட் கானகத் தே,—திசை
மாறி யலைபவர்க் கு,—உடன்
கைவிளக் காகவந்த து,—வழி
காட்டி மறைபவ ளே! 7

வாழ்வின் அநித்தியத் தை,—இந்த
மானிடன் கற்பதற் கோ,—என்முன்
தூலச் சுடர்வடி வில்,—உடன்
தோன்றி மறைந்துவிட் டாய்? 8

—"பரமஹம்ஸதாசன்"


## பெண்மணிகளுக்கு ஒரு வார்த்தை

வெள்ளைவிழுதல் ("Leucorrhoea") ஒரு பயங்கரமான வியாதியாகும். இவ் வியாதியால் பாதிக்கப்பட்டவர்கள், தலை மயிர் விழுதல், பல் ஈறு கரைதல், உடல் மெலிவு, மாதவிடாய் சம்பந்தப்பட்டக்கோளாறுகள், கை, கால் நோவு, பசியின்மை என்பன போன்ற பல வியாதிகளால் கஷ்டப்படுகிறார்கள்.

"லியூகோ" கொம்பவுண்ட்

ஓர் நவீன முறைப்படி செய்த, நம்பிக்கையுடன் பாவிக்கக் கூடிய ஹானியற்ற மருந்தாகும்.

மூன்று அல்லது நான்கு போத்தல்கள் பாவித்தால் பூரண குணம் ஏற்படும்.

மருந்தின் விலை ரூ. 3/- வி. பி. பி. தனி

விபரங்களுக்கு:

டாக்டர். சுக ஆதார வைத்தியசாலை,
(MODERN CLINIC)
255, காலி ரோட்டு.
(பம்பலப்பிட்டிய கன்வன்ட் எதிரில்)
கொழும்பு—4.



போன்: 281. தந்தி: "ஜுவல்லர்ஸ்"

மதிப்பிற் சிறந்த வைரங்கள் !
அழகிற் சிறந்த ஆபரணங்கள் ! !
யாவற்றிற்கும்
ஈழத்திருநாட்டில் இணையற்ற ஸ்தாபனங்கள்

# எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ் & தங்க மாளிகை

யாழ்ப்பாணம்.

உத்தரவாதமுள்ள எல். கே. எஸ். நகைகளையே அணிந்து ஆனந்தமடையுங்கள்.
கிளைகள்: கொழும்பு, திருச்சி, சென்னை, காயல்பட்டணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1959 பெப்ரவரி மாதம் 15-ந் திகதி

194 ஏ, தட்டாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


## எதிர்ப்புக் கட்டடத்தில் வெடிப்பு

பிரதமர் திரு பண்டாரநாயகா நித்திய கண்டமும், நீங்காத தலையிடியுமாகக் கடந்த இரண்டரை வருட காலம் இலங்கையில் இராஜரிகம் செய்து வருகிறார் அல்லவா?

இத்தனை துன்பமும் அவருக்கு ஏற்படுவதற்கு வித்தாக அமைந்தது எது?

1956-ம் ஆண்டு ஜூன் மாதம் 5-ந் தேதி அவர் அவசரப்பட்டுக் கொண்டுவந்த சிங்களம் மட்டும் சட்டந்தான் என்பதை திரு பண்டாரநாயகா இன்னும் உணர்ந்து கொள்ளாதது விந்தையாகவே இருக்கிறது.

அழிவுப் பாதையில் சென்று கொண்டிருப்பவனுக்கு, பட்டனுபவித்த பின்னரும் கூடத் துட்டத் தனத்தைத் தவிர்க்கும் குணநலமும், நிதான புத்தியும் ஏற்படாவென்பதை ஹிரண்யன், சூரபத்மன், ஹம்ஸன், சிசுபாலன், ஹிட்லர், முஸோலினி போன்ற புராண, இதிகாச, சரித்திர பாத்திரங்களே நமக்கு நிதர்சனமாக எடுத்துக் காட்டுகின்றன.

எவ்வளவோ எதிர்ப்பும், இரத்தக் களரியும் ஏற்பட்ட பின்னரும் கூட திரு பண்டாரநாயகா, சமீபத்தில் தமது சக மந்திரிகளுக்கு அனுப்பியுள்ள ஒரு சுற்றறிக்கையில் "இந்த ஆலோசனையைத் தீவிரமாக அமுல் செய்தால் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைவேன்" என்று தெரிவித்துள்ளாராம்.

திரு பண்டாரநாயகாவுக்கு மட்டற்ற மகிழ்ச்சியளிக்கக் கூடிய அந்த ஆலோசனை எந்த ஆலோசனை என்று அறிவதில் யாருக்கும் ஆவல் இருப்பது அதிசயமல்ல. இதோ அவர் கூறியுள்ள ஆலோசனை:

"அரசாங்க இலாகாக்களில் எல்லா அலுவல்களும் சிங்கள மொழியில் மட்டும் நடைபெறுவதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

"அரசாங்க கடித உறைகளிலும், கடிதத் தலைப்புகளிலும் அரசாங்க முத்திரைகளிலும் சிங்களம் மட்டுமே இடம்பெற வேண்டும். இந்த விஷயத்தில் நிதியமைச்சர் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

"அரசாங்க இலாகாக்கள் ஒவ்வொன்றிலும் அலுவல்கள் அனைத்தும் சிங்களத்தில் நடைபெறுவதைக் கவனிக்க சிரேஷ்ட அதிகாரிஒருவர் மேற்பார்வையாளராகஇருக்கவேண்டும். இந்த சிரேஷ்ட அதிகாரி பிரதி மாதமும் இலாகா மேலதிகாரிக்கு சிங்கள மய அபிவிருத்திபற்றி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

"ஈற்றில் அவ்வறிக்கைகள் பிரதமரின்கீழ் இயங்குகின்ற உத்தியோக மொழி இலாகாவுக்குப் போய்ச் சேர வேண்டும். அங்கிருந்து மேலும் வேண்டிய ஆலோசனைகள் அவ்வப்போது தரப்படும்"

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் அரசாங்க பதவி முத்திரைகள் இதுகாறும் பொறிக்கப்பட்டு வந்த வழக்கம் பிரதமரின் மேற்படி ஆலோசனையினுல் முற்ருக முறியடிக்கப்பட்டுவிட்டது.

இதுவேதான், வாய் கிழியப் பிரசாரம் செய்துகொண்டு பிரதமர் நிறைவேற்றி வைத்த நியாயமான அளவு தமிழ் மொழி உபயோகச் சட்டத்தின் பிரயோக இலட்சணமா என்று அறிய விரும்புகிறேம்.

பிரதமருடைய இந்த சிங்கள மய ஆலோசனையைப் பற்றியும், தமிழ் மொழி உரிமையைப்பற்றியும் உள்ள பிரச்னைகளை தமிழரசுக் கட்சி விரைவில் ஜனப்பிரதிநிதிகள் சபையில் கிளப்பவிருக்கிறது என்று கட்சித் தலைவர் திரு என். ஆர். இராஜவரோதயம் தினப் பத்திரிகைகளில் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.


பாராளுமன்றத்தில் கிளப்ப வேண்டியது மிகமிக அவசியந்தான். ஆயினும் அரசாங்கத்தின் போக்கைத் தடுத்து நிறுத்த அதுமட்டும் போதுமா என்பது சந்தேகத்துக்கிடமானதே. வேறு பல வழிகளிலும், துறைகளிலும் கிளர்ச்சியைப் பலப்படுத்த வேண்டியது அவசியம். என்ன வழி, என்ன துறையென்பது இன்றுள்ள 'அவசரகால' சூழ்நிலையில் திர்க்கமாகச் சிந்தித்து முடிவு செய்ய வேண்டியதொன்ருகும். இந்த விஷயத்தில் காலந்தாழ்த்துவது புத்தியாகாது. உடனடியாகத் தமிழரசுக் கட்சியின் செயற் குழு ஒன்றுகூடி விவாதித்து முடிவு கட்ட வேண்டிய ஒரு அத்தியாவசியப் பிரச்னை இது.

காலந் தாழ்த்துவதும், சோர விடுவதும் தமிழ் பேசும் மக்களின் சிங்களம் மட்டும் சட்ட எதிர்ப்பு உணர்ச்சியை க்ஷீணிக்கச் செய்து விடும். அதனுல் பின்னர் ஏற்படக் கூடிய விளைவுகள் அனர்த்தமானவை.

சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப் பட்டதும் தமிழ் பேசும் மக்கள் காட்டிய ஏகோபித்த எதிர்ப்புக் காரணமாக தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களம் கற்கப் பின் நின்றார்கள். ஆனல் இப்போது நிலைமை மாறி வருவதாகவும், உணர்ச்சி குன்றிய ஒரு சில அரசாங்க ஊழியர்கள் அரசாங்கம் நடத்துகிற சிங்கள வகுப்புகளுக்கு ஒளிந்து மறைந்து போய் வருவதாகவும் ஒரு கவலை தரும் செய்தி நம் காதுகளுக்கு எட்டுகிறது.

சிங்களம் மட்டும் சட்டத்துக்கும், சிங்களத்தைத் திணிக்க அரசாங்கம் தீட்டும் புதிய புதிய திட்டத்துக்கும் தமிழ் பேசும் மக்களும், தமிழ்த் தலைவர்களும், தமிழர் தம் அரசியல் கட்சிகளும் காட்டும் எதிர்ப்பும் கிளர்ச்சியும் தளர்கின்றனவா? அப்படித் தளர்வதனுல் ஏற்படும் பலவீனமும் தோல்வி மனப்பான்மையுமே அரசாங்க ஊழியர்களைத் தவருன வழியில் இழுப்பும் கவர்ச்சியும் கொள்ளச் செய்கின்றன என்று கருதுகிறேம். இந்த வெடிப்பு உடனடியாகச் செப்பனிடப்படாவிட்டால் கஷ்டப்பட்டுக் கட்டிய எதிர்ப்புக் கட்டடம் தகர்ந்து விடலாம் என்று எச்சரிப்பது சுதந்திரனுடைய கடமையாகும்.

## பண்டாவின் பானம்




## தடுப்புக் காவலில் மூன்று மாதங்கள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தபால் நிலையத் தெருவழியாகப் பறந்து மறைந்தது.

இரண்டாவதாக சுப்பிரின்டென்டென்ட் மற்றுமொருவரை அழைத்தார். அவர் திரு நவரெத்தினத்தை ஒரு காரில் ஏற்றிக் கொண்டு மற்றுமொரு தெருவழியாக காற்றேடு காற்ருய் மறைந்தார்.

### பொலிஸ் காரில் பயணம்

மூன்றாவதாக எனது பெயரைச் சொன்னார் பொலீஸ் சுப்பிரின்டென்டென்ட். நான் கதவைத் திறந்து கொண்டு வெளியே குதித்து நிமிர்ந்தேன். நீலமும்—பச்சையும் கலந்த மேர்குரி தெரு விளக்கில் அப் பொலீஸ் உத்தியோகஸ்தர்கள் கூர்ந்து என்னை நோக்கினர். நான் சிரித்தபடியே நின்றேன்.

எனக்கென்று தயாராக நின்ற காரில் ஏறினேன். எனக்கென்று வந்திருந்த உதவிப் பொலீஸ் சுப்பிரின்டென்டென்ட் என்னோடு கூடவே பக்கத்தில் அமர்ந்தார். மறு பக்கத்தில் மற்றுமொரு பொலீஸ் அதிகாரி உட்கார்ந்தார். என்னை ஏற்றிய கார் முந்திச் சென்ற இரு கார்களும் போன திசையிலல்லாது வேறுதிக்கில் சென்றது.

கோட்டை பொலீஸ் நிலையத்தினுள் என்னை ஏற்றிக் கொண்டு சென்ற கார் நுழைந்தது. பொலீஸ் நிலையத்திற்கு நான் அழைத்துச் செல்லப்பட்டேன்.

### ஆச்சரியம்!

என்ன ஆச்சரியம்! சில நிமிஷங்களுக்கு முன் கூடவேயிருந்து தனித் தனியே பிரித்தெடுக்கப்பட்டுச் சென்ற பிரதிநிதிகள் அங்கு அமர்ந்திருந்தனர். பின்பு திரு. கந்தையா அங்கு அழைத்து வரப்பட்டார். அடுத்த சில நிமிஷங்களுக்குப்பின்பு திரு. செல்வநாயகம், திரு. அமிர்தலிங்கம், திரு. வன்னியசிங்கம் ஆகியோர் அங்கு கொண்டுவரப்பட்டார்கள்.

எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி உட்கார்ந்தோம். கோட்டை பொலீஸ் நிலைய பிரதம அதிகாரி எங்கள் ஒவ்வொருவருக்கும் அச்சிட்ட ஒரு பத்திரத்தை வழங்கினர்.

### பத்திரம் பெற்றதும் 'தந்தை' பேசினர்

அப்பத்திரம் எங்களை கைதிகளாக்கி — தடுப்புக் காவல் கைதிகளாக்கியிருக்கிறதென்று கூறியது. ஒரு தடவைக்கு இருதடவை அப்பத்திரத்தைப் படித்தோம். புன் சிரிப்போடு இருந்தோமே தவிர யாரும் பேசவேயில்லை. அங்கு நிலவிய நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு, தமிழினத்தின் தந்தை பேசினர். அவருடைய குரலிலே கண்டிப்பு இருந்தது. உறுதி தொனித்தது. "அடுத்ததாக என்ன செய்யப்போகிறீர்கள்?" என்று அவர் கேட்டார். எனதயும் ஏற்க நாம் தயாராய் இருக்கிறேம் என்று ஒலிப்பது போலிருந்தது அவர் கேள்வியும் குரலும்.

"உங்களை உங்கள் வீட்டிற்கு கொண்டுபோகப் போகிறேம்" என்று இழுத்தபடி பேசினர் பொலீஸ் அதிகாரி.

அவருக்கே உரித்தான மோகனப் புன்னகையுடன் எங்கள் ஒவ்வொருவரையும் பார்த்தார். அப்பார்வை யிலே எங்கள் உள்ளத்தையும் கூடவே பார்த்தார். "இவர்களை என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டார். "அவர்களுக்கென்று சில பிரத்தியேக ஒழுங்குகள் இருக்கின்றன. அவற்றை செய்துவைப்போம்" என்ருர் பொலீஸ் அதிகாரி.

### பிரிவு

நேரம் இரவு பதினென்று கிவிட்டது. எல்லாரையும் நோக்கி இரு கரம் கூப்பி வணங்கி "போய்வருகிறேன்" என்று விடை கூறிச் சென்ருர் திரு. செல்வநாயகம். அவர் காரில் ஏறி சென்று மறையும்வரை அவரைப் பார்த்துக்கொண்டே நின்றேம்.

பழையபடி வேலை தொடங்கிவிட்டது. எங்களை தனித் தனியே பொலீஸ் நிலையத்திற்கு அழைத்து வந்த உதவி பொலீஸ் சுப்பிரின்டென்டென்ட்மார் மீண்டும் எங்களைத் தனித்தனியே காரில் ஏறுமாறுகேட்டார்கள். பொலீஸ் நிலயத்திலிருந்து எங்கள் ஒவ்வொருவரையும் ஏற்றிக்கொண்டு ஒவ்வொரு காராக புறப்பட்டுச் சென்றது.

(தொடரும்)

### 'ஒருப்படேன் அத்தான்'

விருப்போடு கரத்தைப் பிடிக்கிருன் கணவன். 'ஒருப்படேன் அத்தான்' என்கிருள் அந்த உத்தமி.

தொட்டிலில் ரோஜா மொட்டவிழ்ந்தது போல் பெட்டகச் செவ்வாய் திறந்து முறுவலிக்கிருன் அந்த 'பிஞ்சுத் துரை.'

"முதலில் மானப் போர். பின்னர் இணைப்பு ஆட்சி. அதன் பின் பொருளாதார உயர்ச்சி. அப்புறமாக ஆரத்தழுவி அன்புப் போர் புரிவோம். அப்போ யாரத்தான் தடுப்பார் — நீங்கள் யாழைத்தான் மீட்டும் போது?" என்று அவள் குரல் கீதமிசைக்கிறது.

அன்னை சொல்லை ஆமோதிப்பது போல் 'சின்னவன்' சிரிக்கிருன் கனவுலகில்!

அற்புதமான கற்பனை. அமிர்தமான கவிதை. படைத்துத் தருகிருர் "நீலாவணன்" அடுத்த வார சுதந்திரனில். ஆம்......

அப்போ தடுப்பார் யார் அத்தான்?

—ஆசிரியர்

### அருளொளி நிலையம்

#### ஐந்தாவது ஆண்டு தீப தரிசன விழா

கொழும்பு அருளொளி நிலயத்தின் ஐந்தாவது ஆண்டு தீப தரிசன விழா 15-2-59 ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு திரு கே. பி. ஹரன் தலைமையில் கொம்பனித் தெரு டோசன் வீதியில் கொண்டாடப்படும் என்று தெரிகிறது. செல்வி யோகதேவி சொக்கநாதனின் பக்திப் பாடல்களுடன் முதலியார் குல. சபாநாதன், அன்பர் பூபதிதாஸர் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள். சோதி வழிபாடு, யோகாசனப் பயிற்சி, மௌனப் பிரார்த்தனை, மகேஸ்வர பூசை ஆதியனவும் இடம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தக மதிப்புரை: அவசரகால நிலைமை '58

# பாலூட்டியவாறு தாயும், உண்டவாறு சேயும் மாண்டுகிடந்தது உண்மையா?

## மட்டக்களப்புசம்பவங்கள்: இல்லாததையும் பொல்லாததையும் மிகைபடக் கூறியதன் மர்மம்

### பத்திரிகா பொன் மொழிக்கு வந்தது ஆபத்து!

நயினாதீவு நாகதீபச் சம்பவத்தை அளவுக்கு மிச்சமாக நீட்டி முழக்கிக் கூறியதன் மூலம், தமக்கு 'தமிழன் உயிர் சிறிது; பௌத்த ஆலயம் தான் பெரிது' என்பதை நூலாசிரியர் வித்தாச்சி நமக்குக் காட்டியிருப்பதை முந்திய கட்டுரையில் கண்டோம். இது சம்பந்தமாக ஒரு வாசகர் கிளப்பிய சந்தேகத்துக்கு கடந்த வாரம் விளக்கமும் தந்தோம்.

மட்டக்களப்பில் நடந்த சம்பவங்கள் பற்றி விவரிக்கப் பட்டிருப்பதைக் கவனித்தால் இனி வித்தாச்சியின் அந்தரங்க நோக்கம் என்ன, அவருடைய உள்ளத்திலே தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த வரையில் குடிகொண்டிருக்கும் எண்ணம் என்ன என்பது குறித்து சந்தேகப்பட இடமிருக்காது.

மட்டக்களப்புப் பகுதியில் சிங்கள மீன்பிடி தொழிலாளர் மிகுந்த அவஸ்தைக்குள்ளானதாக நூலாசிரியர் கூறுகிறார். கடலுக்கு சென்றவர்கள் கரையில் வந்து காலடி வைக்க முடியாத நிலை இருந்தது என்று கூறுகிறார். ஆவேசம் கொண்ட தமிழர்கள் கொள்ளை, கொலை, தீயிடுதல்—இம் மூன்றையும் செய்வதில் அதி தீவிரம் காட்டினார்கள் என்று குறிப்பிட வந்த ஆசிரியர் எத்தகைய உருக்கத்தையும் பிடிப்பையும் வைத்து விஷயத்தைக் கூறியிருக்கிறார் என்பதை அவதானிக்க வேண்டும்.

#### உருக்கமான விவரணம்

"பயந்து காடுகளிலே ஓடி ஒளிந்து கொண்டவர்களில் பலர் பசிக் கொடுமையாலும் பொல்லாத மிருகங்களினாலும் உயிரிழந்தனர். தப்பித் தவறி உயிரோடு இருந்தவர்களுக்கு அபயமளிக்கு முகமாகப் பொலீஸாரும் இராணுவத்தினரும் காடுகளைக் குடைந்த பொழுது பல பிரேதங்களை அவர்கள் கண்டார்கள். அழுகி நெக்குவிட்டுப் போய் பல பிரேதங்கள் கிடந்து நாற்றமெடுத்தன. ஒரு பிரேதம்! அது பெண்மணி ஒருவருடையது. கையிலே குழந்தை. அந்தக்குழந்தை தாயின் பாலுண்ட சமயத்திலே அந்தத் தாய் மரித்திருக்க வேண்டும். முலையிலே வைத்த வாய் எடுக்காமல் குழந்தையும் தாயோடு கூடப்போய் விட்டது."—இப்படியான பல விவரணங்கள் இன்னும் உருக்கமாகத் தரப்பட்டிருக்கின்றன.

#### தூபம் போடுகிறாரா?

கொள்ளை, கொலை, தீவைத்தல்—இப்படியான சம்பவங்கள் எல்லோருடைய உள்ளத்திலும் கிளர்ச்சியையும் ஆவேசத்தையும் உண்டுபண்ணும் என்று சொல்ல முடியாது. இவற்றைச் சர்வ சாதாரணமாக மதிக்கும் 'ஜென்மங்கள்' நிறைய இருக்கலாம். ஆனால் இந்தக் கல்நெஞ்சு படைத்த ஜென்மங்களைக் கூட அசைத்துவிடும் 'பிள்ளைக்கதை'. குழந்தைகளுக்கு கொடுமை செய்வதை யாராலும் பொறுத்துக்கொள்ள முடியாது.

> **மொழி பெயர்ப்பும் முழி பெயர்ப்பும்**
>
> "Facts are sacred, comment is free"- இதன் சரியான தமிழ் மொழி பெயர்ப்பு என்ன? தினசரிப் பத்திரிகை ஒன்றும் புதிய வாரப் பத்திரிகை ஒன்றும் தந்தது மொழி பெயர்ப்பா, அல்லது முழி பெயர்ப்பா?

இது வித்தாச்சிக்குத் தெரியாமல் இருக்க நியாயமில்லை. தெரிந்தும் 'தாய் முலைப்பால் ஊட்டிய நிலையிலும்' குழந்தை அதை உண்ட நிலையிலும் மாண்டதாகச் சொல்லியிருப்பது ஏன்? தமது இனத்தவர்களுக்குத் தூபம் போடுகி

சிங்கம்

றாரா? 'தமிழர் செய்த அக்கிரமத்துக்குப் பயந்து காட்டுக்குள் ஓடி ஒளித்ததால் தானே தாயும் குழந்தையும் அந்தக்கதி அடைந்தனர். அதற்குப் பிராயச் சித்தம் தேடவேண்டாமா' என்று தம்மவரைக் கேட்கிறாரா?

#### இது நடக்க முடியுமா?

உண்மையைச் சொல்லி அவ்விதம் கேட்டாலாவது தேவலை. அந்தச் சம்பவம் உண்மையில் நடந்திருக்க முடியுமா என்று நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். தாய் மரிக்கும் கடைசி நேரம் வரை குழந்தைக்குப் பால் கொடுத்திருந்தால் குழந்தை தாய்க்குப் பிந்தித் தான் மரணமடைந்திருக்க வேண்டும். அப்படியானால் குழந்தை மீண்டும் பாலுக்காக துடித்து முலையில் வாய் வைத்த சமயம் பால் வராமை கண்டு கத்திக் கூச்சல் போட்டிருக்கும். இந்த நிலை குழந்தையின் உயிர் போகும்வரை நீடித்திருக்கும். ஆயின் அழும் குழந்தையின் வாய் முலையைப் பற்றியிருப்பது எப்படிச் சாத்தியமாகும்? குழந்தை முதலில் மரித்ததாகவைத்துக்கொண்டால் தமக்கு முடிந்த வரையில் குழந்தையின் பிணத்தை அருகில் தானும் பாதுகாத்துவைத்திருப்பாள்தாய் அப்படி இல்லாவிட்டால் முலையைக் கவ்வ வைக்காமல் மார்போடு ஒட்டி அணைத்துக் கொண்டிருப்பாள். அவள் சாகும் போது அந்தப் பிடி தளராமல் இருந்தாலும் இருந்திருக்கலாம்.

#### திரிபு

இதை எப்படியெல்லாம் வித்தாச்சி திரித்துக் கூறியிருக்கிறார்! யாரோ விஷமிகள் கட்டிவிட்ட கதையை அப்படியே எடுத்தாள அவரது உள்ளம் ஒப்பியது ஒன்றே போதுமே அவருடைய ஆழ நீளத்தை ஒருவர் அறிந்து கொள்ள!

வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களவர்களுக்கு நடந்தவற்றை இப்படி நேரில் நின்று பார்த்தவர் போல நெஞ்சழுத்தத்தோடு அச்சுறுத்தி எழுதிய வித்தாச்சி தமிழ் மக்கள் ஆங்காங்கே அனுபவித்த இன்னல்களையெல்லாம் வெளிப்படுத்தியிருக்கிறாரா? வெளிப்படுத்தினேன் என்று சத்தியம் செய்யப் போலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக நுனிப் புல் மேய்ந்து சொல்லி வைத்திருக்கிறார்.

ஆனால், தமது நூலடக்கத்தில் புத்தகத்துக்கு ஒரு சிறப்புரிமை கோரப் புகுந்த ஆசிரியர் "Facts are sacred comment is free" என்ற பத்திரிகா பொன் மொழியைக் குறிப்பிட்டு அதை மனதில் வைத்தே தாம் அவசரகால நிலைமை '58ஐ எழுதியதாகக் குறிப்பிடுகிறார்.

"Facts are sacred comment is free" என்பதை தமிழில் எப்படிச் சொல்வது என்பது பிரச்னை. "உண்மைகள் புனிதமானவை; விமரிசனம் தாராளமானது" என்று ஒரு தினசரிப் பத்திரிகை மொழி பெயர்த்திருக்கிறது. தாராளமானது என்றால் அதில் 'தொள தொளப்பு'ம் கூடவே வந்து விடுகிறது. 'வழ வழா' என்று அதுநீளும் என்று எண்ணத் தோன்றுகிறது. 'இறுக்கம்' இல்லாத விமரிசனம் எதற்கு? அதிலும் 'Free' என்பதைத் 'தாராளம்' என்று தமிழில் மொழிபெயர்க்க முடியுமா?

#### வாரப் பத்திரிகை முழிபெயர்ப்பு

இன்னொரு பத்திரிகை. வாரப் பத்திரிகையாம். கடந்த 9ந் திகதி முதன் முதலாகக் கண்டபோது முதல் பக்கத்திலேயே இந்த வாசகம் இடம்பெற்றிருப்பது தெரிந்தது. அந்தப் பத்திரிகை ஒரு படி மேலே சென்று இன்னொருவிதமாக மொழிபெயர்த்திருக்கிறது. "உண்மை தெய்வீகமானது, கருத்துரைகள் கட்டுப்பாடற்றவை"—இதுதான் அந்த வாரப் பத்திரிகையின் முழி பெயர்ப்பு 'Sacred' என்பதை 'தெய்வீகமானது' என்று மொழிபெயர்க்கலாமா? 'Divine' என்றால்தான் 'தெய்வீகம்' என்று ஆகும். இனி, கருத்துரைகள் கட்டுப்பாடற்றவையாம். அவை என்ன 'லகான்' இல்லாத குதிரைபோல தடம்புரண்டு கொண்டு செல்லுமோ? தெரியவில்லை. அந்தப் பத்திரிகைக்குத்தான் அது வெளிச்சம்.

அந்தப் பத்திரிகை தந்திருப்பதைத் தமிழ் மொழி பெயர்ப்பு என்று கொள்வதானால் ஆங்கில மூலம் இப்படித்தான் இருக்கவேண்டும்: 'Facts are divine, comment at random' இது புது மொழி.

மன்செஸ்டர் கார்டியன் (Manchester Guardian) ஆசிரியர் திரு சார்ல்ஸ் பிறெஸ்ட்விச் ஸ்கொட் (Charles Prestwich Scott) சொல்லி வைத்த பொன்மொழி நம் நாட்டுத் தமிழ் பத்திரிகைகளில் படும் பாட்டைப் பார்த்தால் அந்தோ பரிதாபம்! 1872 தொடக்கம் 1929 வரை அதாவது 57 வருட காலம் ஆசிரியராக இருந்து அந்தப் பத்திரிகையைக் கட்டி எழுப்பி உலகிலேயே தலை சிறந்த பத்திரிகைகளில் ஒன்றாக விளங்கச் செய்த திரு. ஸ்கொட்டின் [illegible] கொள்கை வாய்மொழி இங்கு வாய்க்கு வந்தபடி உபயோகிக்கப்படுகிறது.

## லெனின் வழியும் தோழர்களின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் முன்னேறிச் செல்வதாகப் பெருமை பேசும் தோழர்கள் சற்றுப் பின் நோக்கி லெனின் சொல்லி வைத்ததைப் பார்த்தால் அவர்களுக்கே வியப்பாக இருக்கும்! தமது 'ஏக' கொள்கைக்கும் லெனின் வழிக்கும் எவ்வளவு வித்தியாசம் என்பது புலப்படும்.

புது ருஷ்யாவை எப்படி ஆக்குவது என்பது பற்றி ஆலோசிக்கப்பட்டது. அப்போது 'இரண்டாவது இன்டர் நாஷனல்' வாதிகள் ஒரு யோசனை கூறினார்கள்.

#### யோசனை

"மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கம் என்று இரண்டு விதமான அரசாங்கங்களை அமைப்போம். பல மொழி பேசும் சகல இன மக்களையும் ஒரே அதிகாரத்துக்குள் கொண்டுவருவோம். மாகாண அரசாங்கங்களுக்கு வேண்டுமானால் மொழி சுதந்திரத்தை மட்டும் கொடுத்து விட்டு மற்றப்படி அதிகாரம் எல்லாவற்றையும் மத்திய அரசாங்கத்திடம் இருக்கச் செய்வோம்" என்றார்கள்.

போல்ஷிவிக் கட்சியின் தலைமையை லெனின் ஏற்றுக்கொண்ட பிறகு அவர் வேறு விதமாகச் சொன்னார்.

"ஒவ்வொருவரும் சுதந்திரமாக வாழ வேண்டும்; அது அவர்களது பிறப்புரிமை. ஒரு பிரதேசத்தின் பெரும்பான்மையான மக்கள் விரும்பினால் பிரிந்து போகலாம"

இப்படி அவர் விளக்கிச் சொன்னார்.

#### அடுத்த வாரம்

நம்மைக் கேட்டால் "உண்மைகள் புனிதமானவை; கருத்து சுதந்திரமானது அல்லது சுயேச்சையானது" என்றுதான் மொழி பெயர்ப்போம். அது எப்படி இருந்தபோதிலும் புனிதமான உண்மைகளை வித்தாச்சி உரிய முறையில் மறைக்காமல் சொல்லியிருக்கிறாரா என்பதுதான்கேள்வி. மறைக்கப்பட்ட முக்கிய சம்பவங்கள் அதாவது உண்மைகள் சிலவற்றை அடுத்த வாரம் பார்க்கலாம்.

## பகிரங்கக் கடி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஊர்வல முடிவில் நடைபெற்ற கூட்டத்தில் நான் தமிழில்பேசுகையில், சுதந்திரன் செய்தியில் குறிப்பிட்டிருந்ததுபோல என்னை எவரொருவரும் இடையில் தடுத்துநிறுத்தவில்லை; மற்றைய பேச்சாளர்கள் அனைவருக்கும் 15 நிமிஷ நேரம் கொடுக்கப்பட்டது போலவே எனக்கும் 15 நிமிஷநேரம் தரப்பட்டது.

நானும் 'நேரத்துக்குத் தகுந்தாற்' போல எனது பேச்சை முடித்துக்கொண்டேன். எனது தமிழ்ப் பேச்சை மக்கள் ஆர்வத்துடன் கேட்டனர்."

குறிப்பு:

திரு. துரைராஜசிங்கத்தின் தமிழ்ப் பேச்சை மக்கள் ஆர்வத்துடன் கேட்டது மகிழ்ச்சிக்குரிய செய்தி.

'ஊர்வலம் சென்றபோது தமிழ் சிங்கள கோஷங்கள் வானைப் பிளந்தன' என்கிறார் திரு. துரைராஜசிங்கம்.

ஆனல், "கூட்டம் முடிந்து திரும்பியவர்களின் வாகனங்களில் எல்லாம் சிங்களஎழுத்துக்களோடு கூடிய செங்கொடிகள் பறந்தன. 'ஜயவேவா' வேறு முழங்கியது. 33 சிங்கள ஸ்ரீ 1369 அடையாளமுடைய பஸ்ஸில் மட்டும் ஒரே ஒரு கொடி தமிழ் எழுத்துக்களுடன் இருந்தது. ஆனல் அது ஏனையவற்றைப் போலப் பறக்க விடப்படவில்லை. சுருக்கிப் பவித்திரமாகக் கட்டப்பட்டிருந்தது" என்ற திரு. மொழிவாணனின் கூற்று மறுக்கப்படவில்லை.

நேரத்துக்குத் தகுந்தாற் போலத் தாம் பேசியதாக அவரே ஒப்புக்கொள்ளும் போது நாம் அவர் சார்ந்திருக்கும் சமசமாஜக் கட்சியின் மொழிக் கொள்கை பற்றி விளக்கத் தேவையில்லையே! நேரத்துக்கு ஒன்றும் இடத்துக்கு ஒன்றுமாக இப்படித் தகுடுதத்தம் பண்ணுவதைத் தானே 'வேண்டாம் விட்டு விடுங்கள்' என்று தமிழ் மக்கள் கூறுகிறார்கள்.

—ஆசிரியர்.

## திட்டமிடுதல் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

லீட்டுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது.

(தொடரும்)



சி. சி. சி.

தெங்குப் பசளைக் கலவைகள்



அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கின்றன

நீங்கள் எமது பசளைக் கலவைகளில் நம்பிக்கை வைக்கலாம் ஏனெனில் அவை நல்ல, பெருவாரி விளைச்சலைப் பெறுவதற்கு உங்களுக்கு உதவியளிக்கின்றன.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவுசெய்து எழுதுக:-

கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்டெட்

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது)

தபாற் பெட்டி 33, கொழும்பு. ccc629

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சீனத்துக் காதல் கதை

# வண்ணப் பூச்சிகள்

**கா**தல் கதைகளும் காவியங்களும் எல்லா தேசங்களிலும் எல்லா மொழிகளிலும் உண்டு. அவற்றுள் ஒரு சில, மக்கள் சமுதாயத்தில் என்றும் மாருத பசுமை பெற்று விளங்குவன. சம்பந்தப்பட்ட காதலர்கள் காதல் தெய்வத்தின் பலிபீடத்தில் செய்யும் ஆத்மத் தியாகமே அவர்கள் கதைகளுக்கு அமரத்துவம் அளித்து ஊழிகாலம் உயிர் வாழச் செய்கின்றது போலும்!

ரோமியோ-ஜூலியட், அம்பிகாபதி-அமராவதி, லைலா-கயஸ், தேவதாஸ்-பார்வதி, அனார்க்கலி-சலீம் போன்றோரின் காதல் கதைகளை ஒத்ததே லியாங் ஷான் போவும் ச்சூ யிங்டாயும் என்ற சீன தேசத்துக் காதல் கதையுமாகும்.

**சு**மார் 1600 வருடங்களுக்கு முன்பு கிழ—ச்சின் என்ற இராஜகுலத்தினர் சீனவை ஆட்சி புரிந்த காலத்தில் இந்த பரிதாபகரமான காதல் சம்பவம் நிகழ்ந்தது.

காதலன் லியாங் ஷான் போ. காதலி ச்சூ யிங்டாய். இவர்கள் பிரபுத்துவ விவாக முறையை எதிர்த்து அமரத்துவம் அடைந்த உருக்கமான கதை கடந்த பல நூற்றுண்டுகளாக சீனவின் பல பாகங்களிலும் கிராமியக் கதையாக—கிராமிய இலக்கியமாக, இசை நாடகமாக வழங்கி வருகின்றது.

ஷாங்யு நாட்டின் செக்கியாங் மாகாணத்தைச் சேர்ந்த ச்சூசியா என்ற கிராமத்துப் பிரபு ஒருவரின் மகளாக வயதும், வயதுக்கேற்ற வனப்பும் வாய்ந்த வனிதையாக ச்சூ யிங்டாய் விளங்கினள்.

ச்சூ யிங்டாய் ஒருநாள் மாடியிலிருந்து ஜன்னல் வழியாக கீழே தெருவை நோக்கினள். பாடசாலையிலிருந்து பல மாணவர்கள் களிப்போடும் உற்சாகத்தோடும் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்டதும் தானும் அவர்களைப்போல அழகு வாய்ந்த ஹாங்சௌ நகரத்துக்குச் சென்று கல்வி பயில வேண்டும் என்ற ஆசை அவளைப் பிடித்துக்கொண்டது.

தந்தையிடம் சென்று தன் எண்ணத்தை வெளியிட்டாள். ஆனால் அவரோ 'பெண்களுக்கு எதற்கு கல்வி?' என்று கேட்கும் பழைமை விரும்பிகளின் கட்சியைச் சேர்ந்தவர். வீட்டை விட்டு வெளியேற அனுமதி மறுத்துவிட்டார். அத்தோடு வயது வந்த பெண்கள் தனியாகப் பாடசாலைக்குச் சென்றால் அவர்கள் ஆடவர்களால் கவரப்பட்டு விடுவார்கள் என்றும் கவலைப்பட்டார்.

ச்சூ யிங்டாய் கெட்டிக்காரப் பெண். அவள் அவ்வளவோடு விட்டுவிடவில்லை. ஒருநாள் அவள் தன்னை ஆண்மகளுக அலங்கரித்து வேஷம் போட்டுக் கொண்டாள். குறிசொல்லும் சோதிடனைப் போலத் தன் கிழத் தந்தை முன் தோன்றினள். அந்தக் கிழவரால் மகளை அடையாளம் கூடக் கண்டு பிடிக்க முடியவில்லை. அவள் நடிப்பில் கிழவர் ஏமாந்து விட்டார்.

"அப்பா இதோ இந்த ஆணைப் போலவே நான் வேஷம் தாங்கிக்கொண்டு பாடசாலைக்குப் போகிறேன். அப்போது ஆபத்து எதுவும் ஏற்படாது" என்று கூறிக் கெஞ்சினள் ச்சூ யிங்டாய். கிழவர் தயக்கத்தோடு அனுமதி கொடுத்தார்.

ச்சூ யிங்டாயும் அவள் தோழி யின்சின்னும் ஆண்களைப்போல ஆடை அணிந்துகொண்டு ஹாங்சௌ நகரத்துக்குப் புறப்பட்டார்கள். வழியிலே லியாங் ஷான் போ என்ற இளைஞனைச் சந்தித்தார்கள்.

லியாங் ஷான் போ தன் வேலைக்காரனையும் அழைத்துக்கொண்டு அதே கல்லூரிக்குத்தான் சென்றுகொண்டிருந்தான். சாச்சியா என்ற தங்குமிடத்தில் ஆடவனும் ஆடவன் உடையிலிருந்த அழகியும் சந்தித்து அளவளாவக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. இருவரும் ஒருவரோடொருவர் பற்றுக்கொண்டவர்கள் ஆனார்கள். அவர்களிடையே ஒருவித கவர்ச்சி உருவாகிவிட்டது. அன்றுமுதல் இருவரும் இணைபிரியாத சகோதரர்களாக ஒன்றுகூடி வாழ்வது என்று உறுதி செய்துகொண்டு பிரயாணத்தைத் தொடர்ந்தார்கள்.

மூன்று வருடங்கள் ஒன்ருகப் படித்தார்கள். அந்தக் காலத்தில் அவர்கள் நட்புறவு பலத்து வளர்ந்து வந்தது. முடிவில் ச்சூ யிங்டாய் லியாங் ஷான் போ மீது காதல்கொண்டுவிட்டாள். இவ்வளவுக்கும் தன் நண்பன் ஒரு ஆடவன் அல்லன்; ஆண் வேடத்தில் உள்ள பெண் என்பதை லியாங் ஷான் போ அறியமாட்டான்.

ஒருநாள் ச்சூ யிங்டாய்க்கு அவள் தந்தையிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதிலே அவள் உடனடியாக வீட்டுக்குத் திரும்ப வேண்டும் என்றும் அவளுடைய நீண்டகாலப் பிரிவினால் தான் மிகவும் கவலைப்படுவதாகவும் கிழத் தந்தை குறிப்பிட்டிருந்தார். புறப்பட்டுப் போகுமுன் ச்சூ யிங்டாய் தன்னுடைய அந்தரங்க இரகசியத்தை தன் பாடசாலை ஆசிரியரின் மனைவியிடம் வெளியிட்டாள். தான் ஒரு பெண் என்பதையும் லியாங் ஷான் போவிடத்தில் காதல் கொண்டிருப்பதையும் எடுத்துரைத்தாள். ஆசிரியரின் மனைவி ஆறுதல் கூறினாள். இருவருக்கும் விவாகம் நடத்தி வைக்கத் தன்னால் ஆனதைச் செய்வதாகவும் அவள் வாக்குறுதியளித்தாள்.

லியாங் ஷான் போவும் ச்சூ யிங்டாயுடன் பாதித்தூரம் பிரயாணம் செய்தான். வழியிலே பேச்சுவாக்கில் தான் ஒரு பெண் என்பதையும் தனக்கு அவன்மீது காதல் உண்டு என்பதையும் ச்சூ யிங்டாய் சூசகமாகக் குறிப்பிட்டாள். ஆயினும் உண்மையும் நம்பிக்கையும் கொண்ட லியாங் ஷான் போவுக்கு இந்த பூடகமான குறிப்புகள் எதுவும் புலனாகவில்லை.

முடிவில் ச்சூ யிங்டாய் இன்னொரு யுக்தியைக் கையாண்டாள். தனக்கு ஒரு இளைய சகோதரி இருப்பதாகவும், அவள் தன்னைப் போலவே இருப்பாள் என்றும் கூறி, அவளை லியாங் ஷான் போ விவாகம் செய்து கொள்ள விரும்பினால் தான் மிக்க மகிழ்ச்சியோடு ஏற்பாடு செய்வதாகவும் தெரிவித்தாள். இந்த ஏற்பாட்டை லியாங் ஷான் போ தடையின்றி ஆவலோடு ஏற்றுக்கொண்டான். இருவரும் பிரியும்போது லியாங் ஷான் போ காலந்தாழ்த்தாமல் தன்னுடைய வீட்டுக்கு வர வேண்டும் என்றும் தன் இளைய சகோதரியை விவாகம் செய்து கொள்ள வேண்டும் என்றும் வற்புறுத்திவிட்டுச் சென்றாள் ச்சூ யிங்டாய்.

ஒருநாள் இரவு லியாங் ஷான் போ படித்துக்கொண்டிருக்கும்போது அவனுக்கு தன் பாடசாலைத் தோழனான ச்சூவினுடைய நினைவு வந்தது. அதேசமயத்தில் ஆசிரியரின் மனைவி அவனிடம் வந்து ச்சூ யிங்டாயின் அந்தரங்கத்தை வெளியிட்டாள். அதாவது ச்சூ ஒரு இளம் பெண் என்றும் அவள் அவனைக் காதலித்ததாகவும், இருவருக்கும் விவாக ஏற்பாடு செய்யும்படி தன்னிடம் சொல்லிச் சென்றதாகவும் [illegible].

லியாங் ஷான் போ ஆச்சரியக் கடலுள் மூழ்கினான். அவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சியேற்பட்டது. அப்போதுதான் ச்சூ யிங்டாயினுடைய பேச்சுக்களின் உட்கருத்துக்களை அவன் உணரலானான். சகோதரியைக் கலியாணம் செய்யும்படி அவள் கேட்ட தன் பொருள் தன்னைக் கலியாணம் செய்துகொள்ளும்படி விடுத்த கோரிக்கைதான் என்பதை ஊகித்துக் கொண்டான்.

உடனே ச்சூவின் வீடு நோக்கிப் புறப்படலானான். வழியிலே புல்லும், புதரும், மரமும், தளிரும் அவனுக்கு பழைய ஞாபகங்களின் இன்பக் கதைகளை எடுத்துக் கூறின. அவன் காதல் மயக்கத்தில் அந்தரத்திலே மிதந்துகொண்டு அழகி ச்சூவின் வீட்டையடைந்தான். இந்த நல்ல காரியத்தை ஏற்கனவே செய்யாமல் விட்டோமே என்று தன்னைத் தானே கடிந்துகொண்டான்.

ஆனால் இந்த இரண்டு அற்புதக் காதலர்களுக்கிடையே பிரிவுத் திரை ஏற்கனவே போடப்பட்டுவிட்டதென்பதை அவன் எப்படி அறிவான்?

ச்சூ யிங்டாய் ஏற்கனவே வீடு வந்து சேர்ந்தபோதே அவள் தந்தை அவளுக்கு கலியாண நிச்சயார்த்தம் செய்துவிட்டார். மா வென் சாய் என்பவனுக்கு ச்சூவைக் கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டுவிட்டது!

நம்பிக்கையோடு பறந்து வந்த லியாங் ஷான் போவுக்கு இனி ச்சூ யிங்டாய் தன்னுடையவளல்ல என்ற செய்திதான் காத்துக்கிடந்தது. இரு காதலர்களும் சந்தித்தபோது அவர்களுடைய இளம் இதயங்கள் துயரம் என்ற ஈட்டியினால் துளைத்துக் கிழிக்கப்பட்டன. பிரியும்போது இருவரும் சூளுரைத்தனர்: "இந்த ஜென்மத்தில் நாங்கள் இருவரும் ஒன்று சேராவிடினும் மறுஜென்மத்தில் ஒன்று சேருவோம்" என்று கூறிக் கதறினர்.

லியாங் ஷான் போ தன்னுடைய வீட்டுக்கு வந்து சேரும்போதே உடைந்த இதயத்தோடு உருக்குலைந்தவனாக வந்து சேர்ந்தான். மறுகணமே மாரடைப்பினால் மரணமுற்றான்.

ச்சூ யிங்டாயினுடைய விவாக தினம் வந்தது. மணமகள் பல்லக்கிலேறி மணமகன் வீட்டிற்குப் போவது சீன தேசத்து வழக்கம். அதன்படி பல்லக்கில் ஏறுமாறு தந்தை மகளுக்குப் பணித்தார். ஆனால் அவள் ஒரு கோரிக்கையைத் தகப்பனிடம் சமர்ப்பித்தாள்: "வழியில் லியாங் ஷான் போவின் கல்லறை இருக்கிறது. அங்கு நான் இறங்கி என் இறுதி மரியாதையைச் செலுத்திவிட்டுப் போக அனுமதிக்க வேண்டும்" என்பதே அவள் விடுத்த கோரிக்கையாகும். இந்தக் கோரிக்கைக்கு இணங்காவிட்டால் அவள் மணப் பல்லக்கில் ஏறமாட்டாள் என்று தெரிந்தது. எனவே தந்தை அனுமதி வழங்க வேண்டியதாயிற்று.

லியாங் ஷான் போவின் கல்லறையை அடைந்ததும் ச்சூ பல்லக்கை விட்டு இறங்கினாள், கல்லறையில் தலையைச் சாய்த்துக்கொண்டு கதறிக் கண்ணீர்விட்டாள்.

திடீரென்று ஒரு புயல் காற்று வீசிற்று; அது சூறாவளியாயிற்று. மின்னலும் இடிமுழக்கமும் ஏற்பட்டன. கல்லறை இரண்டாகப் பிளந்தது. அந்தப் பிளவினுள் ச்சூ யிங்டாய் தன்னைத் தானே பலியிட்டுக்கொண்டாள்.

சிறிது நேரத்தில் அமைதியேற்பட்டது. வானம் வெளிப்புற்றது. லியாங் ஷான் போவும் ச்சூ யிங்டாயும் இரண்டு இணைபிரியாத வண்ணப் பூச்சிகளாக வெளிப்போந்து மலருக்கு மலர் மகிழ்ச்சியுடன் தாவினர்.

வண்ணப் பூச்சிகளைச் சோடிகளாய்க் காண்பவர் எண்ணங்களில், ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குப் பின்வரும், இந்த அமர காதலர்களான லியாங் ஷானும்—ச்சூ யிங்கும் என்றென்றும் வாழ்வார்கள்.

---

## இந்திரா காந்திக்கு வாழ்த்து

திருமதி. இந்திரா காந்தி, இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபைக்கு தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதைப் பாராட்டி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மாதர் பகுதியின் சார்பாக அதன் தலைவி திருமதி. ஜெகதாம்பாள் இராமசுப்ரமணியம் தமது வாழ்த்தை தெரிவித்துள்ளார்.

"இந்தியாவிற்கு சுதந்திரம் ஈட்டிக் கொடுத்த மாபெரும் ஸ்தாபனத்தின் தலைவராக தாங்கள் தெரிவுசெய்யப்பட்டிருப்பது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மாதர் பகுதியினருக்கு பெருமையளித்திருக்கிறது" என்று தம் வாழ்த்துத் தந்தியில் கூறியுள்ளார்.

---

## தெளிவத்தை வள்ளுவர் மன்றம்

தெளிவத்தை வள்ளுவர் மன்றத்தின் ஆதரவில் மன்ற மண்டபத்தில் மகாத்மா நினைவு தினம் கொண்டாடப்பட்டது. திரு. வை. வேலாயுதம் வரவேற்புரை நிகழ்ந்தினர். விழாவுக்கு மன்றத் தலைவர் திரு. இரா. இராமசாமி தலைமை தாங்கினர்.

"வள்ளுவர் பள்ளி" மாணவ, மாணவிகள் பலரும், திருவாளர்கள் வீர. மணியம், வீரப்பன் ஆகியோரும் காந்தியப் பாடல்கள் பாடி விழாவைச் சிறப்பித்தனர். திருவாளர்கள் க. ஆறுமுகம், இரா. கன்னை, மா. பெ. வீரமுத்து முதலியோர் முறையே, காந்தியும் பொதுத் தொண்டும், காந்தி கண்ட சனநாயகம், காந்தியும் பெண்ணுரிமையும், என்னும் பொருள் பற்றிப் பேசினர். காந்தியார் சாந்தியடைய எனும் பொருள் குறித்து திரு. தமிழோவியன் (செயலாளர் திருக்குறள் மன்றம் பதுளை) விளக்கவுரையாற்றினர்.

---


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ANANDA MEDICAL HALL 174 [illegible] STREET COLOMBO 11

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களுக்கு 'சோனகர்' என்ற பெயர்
# நச்சினார்க்கினியர் தந்தது

## பட்டினப்பாலை கூறும் 'யவனர்' என்ற பதத்துக்கு அப்படி அவர் உரை எழுதினார்

## சோனகர் வேறு, மற்றவர்கள் வேறு என்று பேசிப் பேதம் வளர்ப்பது தற்கொலை முயற்சி

(அல்-ஹாஜ் வி. எம். ஷம்சுத்தீன்)

இலங்கை ஒரு திராவிட நாடு. முதல்வனாகிய விஜயன் இலங்கைக்கு வரு முன்னரே, இங்கு தமிழர்கள் குடியேறியிருந்தார்கள். நெடுங்காலத்துக்கு முன்னர் இலங்கையும்—தென் இந்தியாவும் ஒன்றாகவே இருந்தது. சங்க காலத்தில் கடற் பெருக்கால் இலங்கை ஒரு தீவாகிவிட்டதென்பர்.

இலங்கைக்கு எந்த அறபியர்களும் நேரடியாக வந்ததில்லை. இலங்கையிலுள்ள ஆதமலையைத் தரிசிப்பான் வேண்டி, அறபி நாட்டிலிருந்து முதலில், சில பக்கீர்களும், ஷெய்குமார்களும் மலையாளத்திலுள்ள கொடுங்களூர் என்ற துறைமுகம் வந்து சேர்ந்தனர். கொடுங்களூர் மன்னர் இவர்களை உபசரித்து இலங்கைக்கு அனுப்பினார். இவர்கள் தங்கள் மரக்கலத்தில் இலங்கை யாத்திரையை ஆரம்பித்து வேறுவிலையில் இறங்கி சீனங்கோட்டையில் தங்கினர்.

### மன்னர் தழுவிய மதம்

தங்கள் இலங்கை யாத்திரையை முடித்துக்கொண்டு, மீண்டும் மலையாளம் சென்று கொடுங்களூர் மன்னர் சேரமான் பெருமானைச் சந்தித்தார்கள். இங்கு வந்த அறபியர்கள் கூறியதாவது:“நாங்கள் முஸ்லிம்கள். எங்களுடைய திரு நபி முஹம்மது (ஸல்). நாங்கள் வந்த நோக்கம் இலங்கையிலுள்ள ஆதமலையைத் தரிசித்துப் போவதுதான்”.

இஸ்லாத்தின் ஏக தெய்வக் கொள்கையை அவர்கள் மூலமாக அறிந்த மன்னர் சேரமான் பெருமாள், தாம் இஸ்லாம் மதத்தினராகி, மக்கா யாத்திரை சென்று, “ஸபர்” என்ற ஊரில் காலமாகிவிட்டதாகவும், இவரின் இஸ்லாமியப் பெயர் அப்துர் ரஹ்மான் சாமிரி என்றும் கூறப்படுகிறது.

### மாப்பிள்ளை என்ற பெயர்

மலையாளத்தில் குடியேறிய அறபிய முஸ்லிம்கள் மலையாளப் பெண்களை மணந்து கொண்டபடியால் இவர்களுக்கு “மாப்பிள்ளை” என்ற பெயர் வந்தது என்பர். இதன் காரணமாகத் தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் “மாப்பிள்ளைத் தம்பி மரைக்கார்” என்று சில முஸ்லிம்கள் தங்களைச் சொல்லிக் கொள்கின்றனர். இலங்கையிலுள்ள மலையாள வழித்தோன்றல்களில் சிலர் தாங்கள் “மரைக்கார்” அல்லரென்றும் “மார்கார்” என்றும் கூறுகின்றனர்.

### அறபியர்களின் வர்த்தகம்

இஸ்லாம் வருவதற்கு முன்னரே, அதாவது கி. மு. 178—ஆம் ஆண்டு முதலே, அறபியர்களின் வர்த்தகம் தமிழ் நாட்டில் இருந்தது. இவர்கள் தங்கள் சரக்குகளைக் கப்பலில் ஏற்றி முதலில் கேரள நாட்டின் பட்டினங்களாகிய கள்ளிக்கோட்டை, கொடுங்களூர், கொல்லம் ஆகிய துறைகளில் வந்திறங்கி அங்கு அச்சாமான்களை விற்றுவிட்டு, அதன் பின் பாண்டிய நாட்டின் துறைமுகப் பட்டினங்களாகிய, கொற்கை, காயல்பட்டினம், குலசேகரன் பட்டினம், தொண்டி, தேவிபட்டினம் முதலிய துறைமுகங்கள் சென்று, அங்கிருந்து கொழும்பு, காலி, செல்வார்கள். இங்கிருந்து, முத்து, பவளம், மிளகு, ஏலக்காய், கோப்பி, அகில் ஆகியவற்றை ஏற்றிக் கொண்டு தாயகம் செல்வார்கள்.

### தமிழ் அகராதியில்......

வாணிபத்தின் பொருட்டு தமிழகம் புக்கிய வேற்று



அல்-ஹாஜ்
வி. எம். ஷம்சுத்தீன்

நாட்டு மக்களை இத் தமிழர்கள் “புலம் பெயர்” மாக்கள் “வம்ப மாக்கள்” என்று அழைத்தனர். இப் புனித முஸ்லிம்களை இவர்கள் “மக்கள்” என்று அழைக்காமல் “மாக்கள்” என்று ஏன் கூறினார்கள் என்பது தெரியவில்லை. இந்த அறபியர்களின் தோற்றமும் அவர்களின் போர் வீரமும் இவர்களுக்கு அப்படித் தோன்றியிருக்கக் கூடுமெனவ வரலாற்று ஆசிரியராகிய நண்பர் அப்துர்—றஹீம் தமது நூலில் எழுதியுள்ளார் இதன் காரணமாகத்தான் “சோனகன்—மிலேச்சன்” என்ற பதம் தமிழ் அகராதியில் வந்தது போலும்!

இனிமேல் தமிழ் அகராதி எழுதுகிறவர்கள் “சோனகன்” முஸ்லிம்—அவன் இஸ்லாத்தைச் சேர்ந்தவன் என்று எழுதுக.

### பட்டினப் பாலையில்....

பட்டினப்பாலையில்:- இதைப்பற்றி “நீரில் வந்த நிமிர்பரிப் புரவியும் காலில் வந்த கருங்கறி மூடையும்” “மெய்ப்பைபுக்க வெருவருந் தோற்றத்து வலியுணர் யாக்கை வன் கண் யவனர்” “உடம்பின் உரைக்கும் உரையா நாவில் படம் புகு மிலேச்சர்” என்றுஇருக்கிறது.

மேற்கூறிய பட்டினப் பாலையிலிருந்து தமிழ் நாட்டில் குடியேறிய வர்த்தக மரபினர்களான அந்நிய நாட்டவரை அம்மக்கள் “யவனர்” என்று அழைத்தார்கள் என்று அறியக்கிடக்கின்றது.

### நச்சினார்க்கினியர் தந்த

முஸ்லிம்கள் மீது தமிழ் நாட்டு மக்கள் கொண்ட அன்பின் காரணமாக “யவனர்” என்ற சொல்லுக்கு நச்சினார்க்கினியர் “சோனகர்” என்று உரை எழுதினார். “சம்மாங்காரன்” என்ற வார்த்தை எந்த சங்க நூல்களிலும் காணப்படவில்லை. “சோனகன்” என்ற வார்த்தை தமிழ் நாட்டு முஸ்லிம்களுக்குரியது என்பதிலிருந்தும்—அத் தமிழ் நாட்டு முஸ்லிம்களாகிய “மரக்கல—ஆயர்கள்” (மரைக்காயர்கள்) இலங்கையில் வர்த்தகத் தொடர்பு கொண்டு வந்து அவர்களில் சிலர் இலங்கையில் குடியேறியபடியாலும்—அவர்கள் மூலமாகவே இலங்கை முஸ்லிம்களுக்கும் “சோனகர்” என்ற பதம் வந்திருக்கக்கூடும்!

### காயல் பட்டினம் வருகை

இலங்கையில் தமிழுக்குத் தொண்டு செய்யும் நண்பர் எம். முஹம்மது உவைஸ் எம். ஏ. சுதந்திரன் ஆண்டு மலரில் எழுதிய கட்டுரையில் “தமிழ் நாட்டு முஸ்லிம்கள் என்று யான் கூறும் போது, இலங்கை வாழ் முஸ்லிம்களும் அக் குழுவில் சேர்வர்” என்று எழுதியுள்ளார். அதுவேதான் இக் கட்டுரையை எழுதும் நமது கருத்துமாகும்.

கி. பி. 9-வது நூற்றாண்டில் எகிப்தில் வாழ்ந்து வந்த சில அறபிக்குடும்பங்கள் ஹஜ்ஜாஜ் இப்னுயூசுபின் கொடுங்கோன்மைக்கஞ்சி தென் இந்தியாவிலுள்ள பாண்டிய மன்னரை அண்டி தஞ்சம் புகுந்தனர். இவர்கள் வந்து கரைஇறங்கியது, “சோனகர் பட்டினமாகிய காயல்பட்டினத்திலேயே” அம்மன்னர் அம்முஸ்லிம்களுக்கு அபயம் நல்கி பல உரிமைகளையும் வழங்கினார்.

### மன்னர் கொடுத்த பட்டயம்

அவர் முஸ்லிம்களுக்குப் பட்டயம் எழுதிக் கொடுத்து “தமிழர்களின் சிறிய மத பேதமற்ற பண்பையும் காட்டிக் கொண்டார்”. இப் பட்டயம் காயல் பட்டினத்திலுள்ள முஹம்மது கல்ஜிக்கு கொடுக்கப்பட்டது. இவர்களின் வழித்தோன்றல்கள் இன்றும் காயல் பட்டினத்தில் வாழ்கின்றார்கள். இப்பட்டயம் எழுதிக்கொடுத்த மாமன்னரின் பெயர் ஜெயவீரராஜன். இவர் பட்டயத்தை எழுதிக்கொடுத்து, முஸ்லிம்கள் தங்களை நம்பும்படி அவர் வழிபடும் குலதெய்வங்கள் மீதும் சத்தியம் செய்து கொடுத்திருக்கின்றார்.

### நாவிதர்களுக்கு தனிப் பள்ளி

எகிப்திலிருந்து தென் இந்தியாவிற்கு வந்து காயல் பட்டினத்தில் இறங்கியவர்கள்:- ஹாஷிம் வம்சத்தார் 23, “நாச்சியார்” என்ற உயர் குலப் பெண்கள் 9, அடிமைகள் 4, பாருக் வம்சத்தார் 43, உமையாக்கள் 14, அடிமைப் பெண்கள் 2, “இராவுத்தர்” என்ற இராணுவ வீரர்கள் 16, நாவிதர்கள் 3.

காயல் பட்டினத்தார்கள் நாவிதர்களுக்கென்று ஒரு பள்ளிவாசலையும் அது காலே கட்டிக்கொண்டார்கள். இது இஸ்லாத்தின் கோட்பாட்டிற்கு அப்பாற்பட்டது. மதப்பணியில் அதிக ஆர்வமுள்ள அவ்வூர் முஸ்லிம்கள் ஏன் 'நாவிதர்'களுக்குத் தனிப் பள்ளி கட்டினார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இதைப்பற்றி காயல் வாசிகள் எவரேனும் 'சுதந்திர'னில் விளக்கினால் என் போன்ற வரலாற்று மாணவர்களுக்கு உதவியாயிருக்கும்.

### குஞ்ஞாலி காக்கா

அறபி முஸ்லிம் வர்த்தகர்களுடன் தமிழ் நாட்டு முஸ்லிம்களும் கடல் வாணிபம் செய்து வந்து தங்கள் வர்த்தகத்தை இலங்கையில்

(12-ம் பக்கம் பார்க்க)

---

# பருவம் பேசினால்..

[5-ம் பக்கத் தொடர்ச்சி[

கள் என்றால், அந்தத் தவறு நிச்சயமாக ஏகாம்பரத்தினுடையதல்ல.

### ஒட்டமும் நடையும்

ஏகாம்பரம் காலையில் எழுந்து அலுவலகம் செல்வதுண்டு. மாலையில் திரும்பி வருவதுண்டு. போகும் போதும் வரும் போதும் அவளையும் தவறாது வழியில் சந்திப்பதுண்டு—சந்திப்பின் சின்னம் ஒரு சிரிப்பு. அவ்வளவுதான். அவளும் காலையில் எங்கோ போகிறாள். மாலையில் எங்கிருந்தோ வருகிறாள். போகுமிடம் பஸ் வண்டிகளைப் போல நெற்றியில் எழுதியொட்டியா இருக்கிறது. பொழுது விடிந்தால் போதும், உங்களுக்கு; இதுதான் வேலை. போகிறீர்கள், வருகிறீர்கள், நடக்கிறீர்கள், ஒடுகிறீர்கள். எல்லாம் எதற்கு? வாழ்க்கை வாழ்வதற்கே. என்று சொல்லி வைத்த மேதாவிக்கு மதிப்புத்தரா!

### அவள்

அவளைப்பற்றியும் இங்கு சொல்லவேண்டியிருக்கிறது. அதை ஏகாம்பரமே சொல்லுகிறார், கேளுங்கள்:

“பிறை நெற்றி, விற்புருவம், சுழலும் விழிகள், கிளி மூக்கு, பவள அதரம், கூரம்புக் கொங்கைகள், கொடியிடை-சேச்சே, கொடியிடை யாவது மின்னலிடை-சேச்சே, அவளுக்கு ஏது இடை, இடையே இல்லை. வயது; கூட ஒரு பதினேழு—அல்லவாவு அதிகமா?—பதினெட்டு தான் இருக்கும். இவள் தான் அவள். அவள் தான் இவள். உடல் நிறம் அப்படியே வெளியில் தெரியும் படியான மெல்லிய மேற்சட்டை, முழங்கால் வரை ஒரு பட்டுப் பாவாடை; இவற்றைவிட செயற்கை அலங்காரம் இவ்வளவு அவ்வளவா? உதட்டிலே சிவப்புப் ‘பெயின்ற்’ கண்ணிலே கறுப்புப் ‘பெயின்ற்’, கன்னத்திலே வெள்ளைப் ‘பெயின்ற்’. அட, கையில் ஒரு அழகுப்பை வேறு!”.

### பையும் சூட்கேஸும்

ஏகாம்பரத்தின் கருத்தைக் கேட்டீர்களா? ஆமாம், எனக்கும் நீண்ட நாட்களாக ஒரு ஆசை. பெண்கள் கையில் ஒரு சிறு பை கொண்டு திரிகிறார்களே, ஆண்கள் மட்டும் வெளியில் போகும்போது ஏன் ஒரு கைப் பையைக் கொண்டு போவதில்லை? அது பெண்களால் கண்டு பிடிக்கப்பட்ட நாகரிகம் என்று அதை ஆண்கள் காப்பியடிக்க விரும்பவில்லையென்றால், இப்படிச் செய்துவிட்டால் போகிறது. ஆண்கள் ஒரு ‘சூட்கேசை’யே கொண்டு புறப்பட்டு விடலாம். அதற்குள்ளே உடுப்பு, படுக்கை, ஒரு சிறிய யந்திர அடுப்பு, கொஞ்சம் அரிசி, பருப்பு, கிழங்கு, உப்பு, மிளகாய் முதலியன, ஒரு பட்டணத்தார் யாடல், ஒரு உருத்திராக்கமாலை.............!

### பெயர் மேரி

தங்கள் பெயரை அடியேன் அறிலாமா? என்று நடுக்கத்தோடு—பெண்களோடு பேசும் பொழுது ஆண்களுக்கு இயற்கையாகத் தோன்றும் நடுக்கத்தோடு கேட்டார் ஏகாம்பரம். ஆமாம், வாசகர்களை அந்தப் பழைய மைதானத்தில் கதை விடப்பட்ட இடத்துக்கு வரும்படி அழைப்பு விடுகிறேன்.

“மேரி” என்றாள். ‘ஆ, என்ன ஜோரான பெயர்’ என்று உதட்டைக் கடித்தார் ஏகாம்பரம்—தன்னுடைய உதட்டை! இப்பொழுது அவர்களுக்கிடையில் பத்தடி தூரம் கிடையாது. அருகருகே இருந்தார்கள். அது அவர்களுடைய தவறோ எனது தவறோ அறியேன் கச்சி ஏகாம்பரா!

### அற்புதம்!

அடுத்த வார்த்தை பேச முடியாமல் திரு. ஏகாம்பரம் திக்குமுக்காடி இன்பக் கடலில் குதித்துக் குளித்து முழுகிக் கரையேறு முன் ஒரு அற்புதம் நிகழ்ந்தது.

அந்த மங்கையை நோக்கி ஒரு பையன் வந்து, “அம்மா”! என்று அழைத்தான்.

“என்ன மகனே” என்று கேட்டாள் அவள் பாசத்தோடு.

“உங்களை அப்பா அழைத்து வரச் சொன்னார்” என்றான் மைந்தன். பையனுடன் கூடிக் கொண்டு போய்விட்டாள் அந்தப் பால் நிலவுப் பாவை. பையனுக்கு வயது பதினைந்து இருக்கலாம்.

ஏகாம்பரத்தார் குழப்பம் தெளியாமல் அந்தப் புற்றரையில் படுத்திருக்கிறார்,

நோத் சிலோன் றேடிங்
கம்பனி லிமிட்டட்
ஸ்ரான்லி றேட்,
யாழ்ப்பாணம்.
வட மாகாண வினியோகஸ்தர்கள்
போன்: 587 தந்தி : யாழ்றேட்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதோ விளக்கம்

நேயர்கள் தமது சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளுமுகமாக அனுப்பிய கேள்விகளில் மூன்றுக்கு தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தரும் பதில்கள் இங்கே பிரசுரமாகின்றன.

திருமலைப் பிரதிநிதி திரு ந. இ. இராஜவரோதயத்திடம் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு அவர் தரும் பதிலும் இங்கு நாலாவதாக வெளியிடப்படுகிறது.

—ஆசிரியர்

—எஸ். ஜே. வி. செல்வநாயகம்

—ந. இ. ராஜவரோதயன்

1. நீங்கள் கோரும் சமஷ்டி அரசமைப்பு வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மட்டுமா அல்லது தமிழ் பேசும் மக்கள் வாழும் ஏனைய பிரதேசங்களுக்குமா? ஏனைய பிரதேசங்களுக்கு மாயின் வடமேல் மாகாணம், தென் மாகாணம், மலைநாடு ஆகிய இடங்களில் உள்ள தமிழரின் நிலை எப்படியிருக்கும் என்பதைத் தெளிவுபடுத்துக.

—அ. பே. பிள்ளை, தோப்பு, கொச்சிக்கடை

—வீ. இரத்தினவேல், கழுதாவளை

—வெற்றிவேந்தன் தெமட்டகொடை

### விளக்கம்

இலங்கைத் தமிழரசுக் கட்சி கோரும் சமஷ்டி அரசமைப்பு தமிழ் பேசும் மக்கள் பரம்பரையாகவும் பெரும்பான்மையாகவும் தொடர்பு கொண்டு வாழும் தமிழ்ப் பிரதேசங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டியதுதான். ஆனல் இந்தக் கோரிக்கை நூற்றுக்கு நூறு விதம் நிறைவேறுவதில் சில வில்லங்கங்களும் உண்டு. இலங்கைக்கு ஒரு சமஷ்டி அரசமைப்பை ஏற்படுத்துவது என்று அரசாங்கம் கொள்கை அளவில் ஒப்புக்கொண்ட பின், சமஷ்டி அரசமைப்புத் திட்டத்தை உருவாக்க பரந்த பிரதிநிதித்துவமும் விரிந்த அதிகாரமும்கொண்ட ஒரு அரசியல் நிர்ணய சபை அமைக்கப்பட வேண்டும். அச்சபையினுல் சமஷ்டி எல்லைகளும் நிர்ணயிக்கப்படலாம். அந்த சபை சமஷ்டி எல்லைகளை நிர்ணயிக்கும் போது நாம் சில சாதாரண விஷயங்களில் விட்டுக் கொடுத்தும் சில முக்கியமான விஷயங்களில் விடாப்பிடியாக நின்றும் எங்கள் பங்கை பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு தமிழ் பேசும்மக்களின் ஒன்றுபட்ட ஒற்றுமையும் உறுதியும் அவசியம். திடமான தலைவர்கள் மிகமிக அத்தியாவசியம்.

மலைநாட்டுத் தமிழரையும் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களையும் பொறுத்தவரையில் அவர்கள் தனித்தும் இருக்கலாம், தமிழரசின் ஒருமித்த யூனிட்டாகவும்அமையலாம். அன்றி தமிழரசுக் கட்சியின் திருமலைத் தீர்மானத்தின் படி இலங்கை சமஷ்டியின் தனித் தனி யூனிட்டுகளாகவும் அமையலாம். எப்படி அமைவது என்பது அவரவர் சுயநிர்ணயத்தைப் பொறுத்ததாகும். இப்படியாக வகுக்கப்பட்ட பின்னரும் ஒருசில பகுதிகளில் சிறு சிறு தமிழ்க் குடியேற்றங்கள் சிங்கள அரசிலும், சிறு சிறு சிங்களக் குடியேற்றங்கள் தமிழரசிலும் அகப்பட்டுக்கொள்ளக் கூடும். அப்படியான குடியேற்றங்களின் நலவுரிமைகளைப் பரஸ்பரம் பாதுகாப்பதற்கான ஜீவாதார உரிமை விதிகள் சமஷ்டி அரசமைப்பு சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். அத்தோடு ஆங்காங்கே தனித்துக் குடியிருக்க விரும்பாத குடிபதிகள் முறையே தமிழ்ப் பகுதிக்கும் சிங்களப் பகுதிக்கும் பரிவர்த்தனையாக, மத்திய அரசாங்கத்தினுல் ஒத்தாசையும், ஆதரவும், மற்றும் வசதிகளும் அளிக்கப்பட வேண்டும். இந்தத் திட்டத்தின் படி மலைநாட்டுத் தமிழர் குடியுரிமை வாக்குரிமை பெற்று விரும்பினுல் வடக்கு கிழக்கு மாகாணங்களில் குடியேறுவதும் ஊக்குவிக்கப்படலாம்.

2. தமிழரசுக் கட்சியின் அடுத்த நடவடிக்கை என்ன? எப்போ எந்த வகையில் தொடங்குகிறது?

—சி. பொன்னுத்தம்பு, புன்னைக்குடா

### விளக்கம்

தமிழரசுக் கட்சியின் 'அடுத்த நடவடிக்கை' என்ற சொற்பிரயோகத்துக்கே இடமில்லை. தமிழரசுக் கட்சியின் ஒரே நடவடிக்கை தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டில் இழந்த உரிமைகளை மீண்டும் பெற்று சமஷ்டி அரசமைப்பு என்ற இலட்சியத்தை அடையும்வரை தளராது போராடுவதுதான். முதல் நடவடிக்கையும் அதுதான்; அடுத்த நடவடிக்கையும் அதுதான்; முடிவான நடவடிக்கையும் அதுவேதான்—அதாவது போராட்டம். இந்த உரிமைப் போராட்டத்தை, விடுதலைக் கிளர்ச்சியை நடத்த வேண்டும் என்பதுதான் திருமலை மாநாட்டில் செய்யப்பட்ட முக்கிய தீர்மானமாகும். அதைத் தொடர்ந்து வவனியா மாநாட்டில் செய்யப்பட்ட ஊர்ஜிதத் தீர்மானமும் இதுவேயாகும். எனவே இத்தீர்மானத்தின்படி நடப்பதைத் தவிர தமிழரசுக் கட்சிக்கு வேறு வழியில்லை.

ஆனல் இன்று நடைமுறையிலிருக்கும் அவசரகால சூழ்நிலையை அனுசரித்து, கடந்தகால அனுபவங்களை முன்னிறுத்திப் போராட்டத்தையும் அதன் முறைகளையும் ஏற்றுற்போல் மாற்றியமைத்து விழிப்போடும் எச்சரிக்கையோடும் செய்ய வேண்டியது தவிர்க்க முடியாததாகும். இத்தகைய அத்தியாவசிய மாற்றங்களுக்கும், அம்மாற்றங்களுக்கு ஏற்றுற்போல் மக்களைத் தயார்படுத்துவதற்கும் சற்று காலமும் அவகாசமும் அவசியம். தலைவர்களின் சிந்தனையில் போராட்டத்தின் புதுவழிகள் ஆராயப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. எந்த நேரத்திலும் போர் முரசு முழங்கலாம். அந்த நேரம் க்ஷணப்பொழுதில் அணிவகுக்க தொண்டர்களும் வீரர்களும் தமிழ்ப் பொதுமக்களும் பயிற்சியும் எழுச்சியும் பெற்றவர்களாக வேண்டும். ஒழுங்குடனும் கட்டுப்பாட்டுடனும் சத்தியச் சங்கு ஊதி, அறம் என்ற வாள் ஏந்தி, அஹிம்சைக் கொடியுயர்த்த ஆயத்தமாயிருக்க வேண்டும்.

3. கடந்த காலக் கலவரத்தின் அனுபவத்தையொட்டி அடுத்தும் அப்படி ஏதாவது நடக்கலாம் என்ற யூகத்தின் பேரில் திரு சுந்தரலிங்கம், தென் இலங்கையில் உள்ள தமிழ் பேசும்மக்களுக்கு பாராளுமன்றத்தில் ஒரு எச்சரிக்கை விடுத்துள்ளார். அங்குள்ள தமிழர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு காலம்தாழ்த்தாது திரும்பிவிட வேண்டும் என்பதே அவரது எச்சரிக்கை. இதுபற்றித் தமிழ் பேசும் மக்களுக்கு தமிழரசுக் கட்சி என்ன சொல்கிறது?

—பி. பாலசுப்பிரமணியம், குருநாகலை

### விளக்கம்

தமிழ் பேசும் மக்கள் தங்கள் உரிமை கோரி வடக்கிலே குரல் எழுப்பினுல் தெற்கிலேயுள்ள தமிழர்கள் தாக்கப்படுகிருர்கள். இதுவே இன்றைய உண்மை நிலை. பலாத்காரச் செயலின் மூலம் தமிழ் இனத்தைப் பணியச் செய்துவிடலாம் என்பதுதான் ஆட்சியாளரின் அந்தரங்கத் திட்டமாக இருக்கிறது. இத்தகைய பயமுறுத்தலுக்கு நாம் அடிபணிந்து நமது சுதந்திரக் கோரிக்கையைக் கைவிடுவது சரியா? இல்லவேயில்லை.

தெற்கில் உள்ள வெகு சில தமிழர்கள் தாக்கப்படுகிருர்கள் என்பதற்காக வடக்கு கிழக்கில் உள்ள பரந்த தமிழினம் உரிமை கோராமல் ஊமையாய் வாழ முடியுமா? ஒருபோதும் முடியாது. நாம் ஏற்கனவே விளக்கியபடி திருமலைத் தீர்மானத்தை அனுசரித்து இன்றே என்றே நாம் போராட்டம் நடத்தத்தான் போகிறோம்; உரிமை கோரத்தான் போகிறோம். எனவே தெற்கில் தம்மைத் தாமே பாதுகாக்க முடியாத நிலையிலுள்ளவர்கள் கடந்தகால அனுபவத்தைக் கொண்டு ஏற்ற ஒழுங்குகளை எச்சரிக்கையோடு செய்துகொள்ள வேண்டியது அவரவர் சொந்தத் திடத்தையும் தீர்மானத்தையும் பொறுத்ததாகும்.

—எஸ். ஜே. வி. செல்வநாயகம்

4. ஐயா, திருமலைப் பிரதிநிதி திரு இராஜவரோதயம் அவர்களே, "டெம்பிள் ட்ரீஸ்" மாளிகையில் நடக்கும் அரசாங்க வைபவங்களில் தமிழ் அரசுக் கட்சி கலந்துகொள்வதில்லை என்ற சம்பிரதாயத்தை கட்சி நீண்டகாலமாக அனுஷ்டித்து வருகையில் கட்சித் தலைவரானதாங்கள் மட்டும் கனேடிய பிரதமருக்கு அளிக்கப்பட்ட விருந்தில் கலந்துகொண்டீர்கள். இது அடுக்குமா? "இதோ தமிழர் தலைவர்எம் கட்சியில்..." என்று திரு பண்டாரநாயகா காட்டி வெளிநாட்டுப் பிரதமரை ஏமாற்ற இடங்கொடுக்கும் ஏமாளித்தனத்தை செய்துவிட்டீர்களே! என்ன சொல்கிறீர்கள்?

கே. குலசேகரம், —வெள்ளவத்தை

### விளக்கம்

திருமலைப் பிரதிநிதி தன் மானத்தை ஏலங்கூறி விற்றுவிடவில்லை. டெம்பிள் ட்ரீஸில் என்னைப்போல் வேறு எவரையோ கண்டுவிட்டார் இந்தக் கேள்விதாரர். என்னைக் கண்டிருக்க முடியாது. நான் அங்கு அழைத்தாலும் அடியெடுத்து வைப்பவனல்லன். கட்சியின்சம்பிரதாயம் எனக்குத் தெரியும். நான் அதன்படியே நடந்துள்ளேன்.

—ந. இ. ராஜவரோதயன்

---

## சென்னை அரசாங்கத்துக்கு..

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

விசுவநாதமும் கேட்டுக் கொண்டதன்பேரில் அவர் பின்னர் தமது உண்ணுவிரதத்தைக் கைவிட்டார்.

### பகிஷ்கரிப்பு

இதைத் தொடர்ந்து ஆகாஷ்வாணிக்குப் பதிலாக 'வாஞெலி' என்று அழைக்கப்படும்வரை எந்த வாஞெலி நிகழ்ச்சியிலும் பங்குபற்றுவதில்லை என்று பல கலைஞர்களும் சபதம் செய்துகொண்டனர். தி. மு. க. சட்ட சபை உறுப்பினர்களான டாக்டர் சத்தியவாணிமுத்து, அன்பழகன், கவிஞர் கண்ணதாசன் ஆகியோரையும் பள்ளிப் பேராசிரியர் அன்பு கணபதியையும் முக்கியமாகக் குறிப்பிடலாம்.

### சென்னையில் உண்ணு விரதம்

இப்போது சென்னை வாஞெலி நிலையத்தின் முன்பு ரெங்கரத்தினம் என்ற வாலிபர் கடந்த மாதம் 22ந் திகதி தொடக்கம் உண்ணுவிரதம் இருந்து வருகிருர். சகல கட்சித் தலைவர்களும் மக்களும் ஆதரவு தெரிவிக்கிருர்கள். கூட்டம் நடத்தித் தீர்மானம் நிறைவேற்றி சர்க்காருக்கு அனுப்புகிருர்கள். மாணவர்களும் தமது பங்கைச் செய்கிருர்கள். பலன்தான் பூஜ்யம்.

### எச்சரிக்கை

ஆனல் ஒன்று. தமிழ்நாடு தனி நாடாக வேண்டும் என்ற கோரிக்கைக்கு வழி செய்வதாக இந்த வாஞெலிப் போராட்டம் அமைகிறது. திரு விசுவநாதம் சென்னை சர்க்காருக்கு வாஞெலிப் போராட்டம் சம்பந்தமாக விடுத்துள்ள எச்சரிக்கை இதுதான்:

"வாஞெலிப்போராட்டம் வலுக்கிறது. மக்கள் ஆதரவு திரள்கிறது. சர்க்கார் குறுக்கிட்டு பிரச்னையை நல்லபடி தீர்த்து வைக்காவிட்டால் தமிழ் நாட்டைப் பிரித்து அதைத் தனி விடுதலை நாடாக்கிக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை"—இந்த எச்சரிக்கை வேறு சென்னை மந்திரிகளுக்கு தலைவலியைக் கொடுத்திருக்கிறது.

---

## முஸ்லிம்களுக்கு....

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

பரப்பி, இந்து மஹா சமுத்திரத்தில் வர்த்தகம் செய்து வந்த பறங்கியர்களைத் தீவிரமாக எதிர்த்தனர். பறங்கியர்களை முதுகு புறங்காட்டி ஓடச் செய்தவர் குஞ்சு அலி மரைக்காயர் என்ற "குஞ்ஞாலி காக்கா". இந்த மரைக்காயரின் திரத்தையும், தாய் நாட்டுப் பற்றையும், கடல் வணிகத் தன்மையையும் மெச்ச வேண்டி இந்திய அரசாங்கம் இந்திய கடற்படையிலுள்ள கப்பலொன்றுக்கு "ஐ. என். எஸ்., குஞ்ஞாலி" என்ற நாமத்தைச் சூட்டியுள்ளது. இவரது குடும்பத்தாரை இன்றும், மலையாள முஸ்லிம்களும், தமிழ் நாட்டு முஸ்லிம்களும் போற்றுகின்றனர். "Moor" "மூர்" என்ற ஆங்கில வார்த்தை "சோனகன்" என்பதைக் குறிக்காது.

### இரண்டும் ஒன்றே

இலங்கை அரசாட்சியில் (தமிழ் பேசும்) முஸ்லிம்கள் சிறுபான்மையோர். எனவே தங்கள் வருங்கால வாழ்விற்கு தங்களுக்குள் ஐக்கியத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். "சோனகன்" வேறு, மற்றவர்கள் வேறு என்று சொல்வது தற்கொலைக்கு ஒப்பாகும். இதை ஒவ்வொரு முஸ்லிமும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த விளக்கத்தை இத்துடன் முடிக்கிறேன்.

---

## மக்கள் குரல்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யத்தையும் துன்பத்தையும் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

பழைய அரசியல் தவறுகளை மறந்து இலங்கைத் தமிழருடன் வேற்றுமை காட்டாமல் முன்னின்று உழைக்கும் மலைநாட்டுத் தமிழர் மத்தியில் மேற்படி கூற்று எவ்வளவு அவநம்பிக்கையை உண்டாக்கும்என்பதை'கன்' உணராமல் பேசியது வித்தையிலும் வித்தை. பழைய தவறுகளை உணர்ந்து மன்னிப்பு கோரிய 'கன்' மேற்படி கூற்றையும் வாபஸ் பெற்று, மலைநாட்டு மக்களின் ஐயத்தைப் போக்க முன்வர வேண்டும். அதுதான் அழகு.

—க. சுப்பிரமணியம் காரைநகர்.

### முழுப் பொய்!

தினசரிப் பத்திரிகை ஒன்றில் 5-2-59-ல் மூதூரிலும் சுதந்திரதினம் கொண்டாடப்பட்டதாக முழுப் பொய்யான செய்தி ஒன்று வெளியாகி இருந்தது. நானும் ஓர் மூதூர்வாசி என்ற முறையில் உண்மையை கூற வேண்டியவனுய் இருக்கிறேன்.

இங்கு எந்த விதமான கொண்டாட்டங்களும் நடைபெறவில்லை. எங்கும் பூரண அமைதி காணப்பட்டது. இதுதான் உண்மை.

—ம. மிக்கேல் மூதூர்

## சங்கப் பலகை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கதை ஆகியன இதழுக்கு மணமும் குணமும் கூடவே எழிலும் அளிக்கின்றன.

90 பக்கங்கள் கொண்ட கலைச்செல்வி பொங்கல் மலர் அனைவரும் படித்துச் சுவைக்கவேண்டியதுதான், சந்தேகமில்லை.

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது!

உஷா தையல் மெஷின்களே!



★ ஒருவரின் ஆயுள் காலம் முழுவதும் உழைக்கக் கூடிய வெகுமதி
★ மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
★ இலங்கை பூராகவும் விற்பனையாகிறது
★ உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:
ரெய்மூ சன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி,
கொழும்பு-11
போன்: 4243, 5060
கல்முனையில் கிடைக்குமிடம்:
கொழும்பு ஸ்டோர்ஸ்,
பொலீஸ் ரோட், கல்முனை.
கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்஧ிலால் நடாத்தப்படுவது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மக்களுக்கு

## ஆறுதல் அளிக்கும் செய்தி

## ஆழக்கிணற்றில் இலகுவாகத் தண்ணீர் எடுக்க மொரிஸன் பம்புகள்

## அப்துல் காதர் ராவுத்தர் அண்ட் கம்பனி தரும் இயந்திரங்களும் உபகரணங்களும்

இன்று நேற்றல்ல, அரை நூற்றாண்டுக் காலமாக ஒரு வர்த்தக ஸ்தாபனம் வெற்றிகரமாக இயங்கி, இரும்புப் பொருள் வியாபாரத்தில் ஈடு இணையற்றதாகவும் விளங்கி வருகிறது என்று சொன்னால் அது எந்த ஸ்தாபனம் என்று அறிவதற்கு வர்த்தகர்களும் பொது மக்களும் ஆவலுறுவது இயற்கையே.

ஆம், கொழும்பு ஸ்கின்னேர்ஸ் ரோட் தெற்கு 312-ம் இலக்கத்தில் உள்ள மெஸர்ஸ் கே. என். அப்துல் காதர் ராவுத்தர் அண்ட் கம்பனி லிமிட்டெட் என்ற பெரிய ஸ்தாபனத்தைத் தான் குறிப்பிடுகிறோம்.

### ஏக விநியோகஸ்தர்கள்

இங்கிலாந்து, லோபரோவிலுள்ள மொரிஸன் ஆட்டோமேட்டிக் பம்ஸ் லிமிட்டெட் என்ற உற்பத்தி ஸ்தாபனத்துக்கு இவர்கள் இலங்கையின் ஏக விநியோகஸ்தர்களாக விளங்குகிறார்கள்.

மொரிஸன் தண்ணீர் பம்புகளும், மின்சார உற்பத்தி இயந்திரங்களும் உயர்தரத்தில் உலகப் பிரசித்தமானவை. நீண்ட காலம் உழைக்கும் சக்தியும் பழுதற்ற முறையில் திறமையாக இயங்கும் பண்பும் வாய்ந்தவை இவை.

### மொரிஸன் பம்புகள்

மொரிஸன் தண்ணீர் பம்புகள் பல ரகத்திலும் பல தரத்திலும் உள்ளன. இலகுவாக உடுப்புப் பெட்டியைத் தூக்கிச் செல்வது போல் வேண்டிய இடத்துக்கு ஒரு கையில் தூக்கிச் செல்லக் கூடிய "போட்டபின் பம்பு" கள் அவற்றை இயக்கும் இயந்திர சாதன இணைப்புகளுடன் அமைந்திருப்பது ஆச்சரியமேயல்லவா?

வேறு சில பெரிய பம்புகள் சக்கரங்களில் பொருத்தப்பட்டு வேண்டிய இடங்களுக்கு உருட்டிச் செல்லும் படியாக அமைந்துள்ளன. நிலைபதியாக வைத்து வேலை செய்யக்கூடிய பாரிய என்ஜின்கள் பொருத்தப்பட்ட தண்ணீர் பம்புகளும் உண்டு.

இந்தப் பம்புகளை இயக்கும் லிஸ்டர், பெட்டர் போன்ற என்ஜின்கள் பெட்ரோல், டீஸல்* எண்ணெய், மண் எண்ணெய்-வேண்டியவற்றில் இயங்கக் கூடியனவாகத் தேர்ந்தெடுக்கலாம்.

### தோட்டக்காரருக்கு வரப்பிரசாதம்

இந்த மொரிஸன் தண்ணீர்ப் பம்புகள் ஆழக் கிணறுகளிலிருந்து பட்டை கட்டித் துலா மிதித்து நெற்றி வியர்வை நிலத்தில் சிந்து மாறு ஏறு வெய்யிலில் உழைத்துக் களைக்கும் யாழ்ப்பாணத்து தோட்டக்காரருக்கும், மட்டக்களப்பு, மற்றும் உள்ள இடங்களில் உள்ள விவசாயிகளுக்கும், மலைநாட்டு மரக்கறி உற்பத்தியாளருக்கும் ஒரு வரப்பிரசாதமாகும். ஒரு சில போத்தல் மண்ணெண்ணெயுடன் அவர்கள் வேண்டிய தண்ணீரை இந்தப் பம்புகளைக் கொண்டு இலகுவாக இறைத்து விடலாம். தோட்டமும் வாடாது. வயலும் காயாது. காய் கறியும் கருகாது.

### புரூக் மின்சார மோட்டர்கள்

உலகப் பிரசித்தி பெற்ற புரூக் இலக்றிக் மோட்டர்கள் 230/440 440 வோல்ட்களில் தேவையான குதிரை சக்திகளில் இவர்களிடம் கிடைக்கின்றன. இந்த மோட்டர்களைக் கொண்டு தொழில் நிலையங்கள், அச்சகம், நெல் அரைக்கும் ஆலை, மா அரைக்கும் ஆலை, தேயிலை, ரப்பர் தொழிற்சாலைகள் ஆகிய இடங்களுக்கு வேண்டிய இயக்கு சக்திகளை மலிவான செலவுடன் பெறுவது சாத்தியமாகிறது.

### பெட்ரோல், டீஸல் மண் எண்ணெய் என்ஜின்கள்

உலகப் புகழ் வாய்ந்த பின் வரும் உற்பத்தியாளர்களின் பல்வேறு வேகமும், குதிரைப் பலமும் கொண்ட பெட்ரோல், டீஸல், மண் எண்ணெய் என்ஜின்கள் எப்போதும் இவர்கள் கைவசம் இருக்கின்றன.

★ வொல்ஸ்லி என்ஜின்கள்
★ பிறிக்ஸ் அண்ட் ஸ்ராட்டன் என்ஜின்கள்
★ கிர் லோஸ்கர் டீஸல் என்ஜின்கள்
★ டூவெட்ஸ்(ஜெர்மன்)டீஸல் என்ஜின்கள்
★ லிஸ்டர் என்ஜின்கள்
★ பிளாக்ஸ்டன் என்ஜின்கள்
★ பெட்டர் என்ஜின்கள்

வேறுவகையான தண்ணீர் பம்புகளுக்கும் இஸகி (ஜப்பானிய) நெல் அரைக்கும் இயந்திரங்களுக்கும் இவர்கள் விநியோகஸ்தர்களாக விளங்குகிறார்கள்.

### நெல், மா அரைக்கும் இயந்திரங்கள்

நெல் குற்றும் ஓரயில் கிராண்ட் இயந்திரங்களும், மற்றும் இந்திய உற்பத்தி நெல் குற்றும் இயந்திரங்களும் அவற்றிற்கான உப உறுப்புக்களும் இவர்களிடம் எந்த நேரமும் கையிருப்பில் உள்ளன. மாவரைக்கும் இயந்திரங்களும் அவற்றிற்கான உப உறுப்புகளும் கூட இவர்களிடம் எப்போதும் உண்டு.

### ஏனைய பொருட்கள்

மேலே கூறிய பாரிய பொருட்களையும் இயந்திர சாதனங்களையும் தவிர பொதுப்படையான இரும்பு சாமான்களும், கட்டட நிர்மாணவேலைகளுக்குத்தேவையான பொருட்களும் இவர்களிடம் உண்டு.


ஆர்மிடேஜ் க்கூஸ் பாத்ரூம் உபகரணங்கள், வார்னிஸ் தீந்தை வகைகள், சக்கரங்களை சுழற்றும் ரப்பர் பெல்ட்டுகள், ரப்பர் தண்ணீர் குழாய்கள், நாகம் பூசிய இரும்பு பைப்புகளும் உபகரணங்களும், மற்றும் ஆணி, பூட்டு, பிணைச்சல், தச்சன், கொல்லன் ஆயுத வகைகளும் குறைந்த வகையில் நிறைந்த பொருட்கள் இவர்களிடம் இருக்கின்றன.

"காந்தி" உரோம பெல்ட்டுகள் மிகச் சிறந்தவையாகும்.

### தராசுகளும் நிறுவை இயந்திரங்களும்

அனைவராலும், அரசாங்கத்தாலும் விரும்பி ஏற்றுக் கொள்ளப்படும் "எவறி" தராசுகளும், நிறுவை இயந்திரங்களும் இவர்களிடம் உண்டு. இவ்வளவு பரந்த பொருட் செறிவோடு கூடிய ஒரு சிறந்த வர்த்தக ஸ்தாபனத்தை நாம் ஆதரித்து மேலும் வளர்த்து விடுவது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நன்மை பயக்கும் அல்லவா?


# மொரிஸன் பம்புகள் | "புருக்" மோட்டர்கள்



நெருங்கிப் பொருந்திய விவசாயத்திற்குரிய பம்புகள் மண்ணெண்ணெயால் தாமே இயங்கவும், நீடித்த பாவனைக்கும் உத்தரவாத முள்ளவை.

1½, 2, 2½ அங்குல அளவுகளில் கிடைக்கும்.

பிரசித்தி பெற்ற "புரூக் இலக்றிக் மோட்டர்கள் 230-400/440 வோல்ட்களில் தேவையான குதிரை வேகங்களில் கிடைக்கும்.




தேவைக்கு எழுத வேண்டுகிறோம்

## கே. என். அப்துல்காதர் ராவுத்தர் அண் கம்பனி லிமிடெட்,

312, ஸ்கின்னேர்ஸ் ரோடு தெற்கு, கொழும்பு-10.

டெலிபோன் : 2956 தந்தி : MEDAL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டது கற்க.....

இந்தப் பகுதிக்கு நேயர்கள்கூட வினாக்களும் விடைகளும் எழுதி அனுப்பலாம். ஏற்றவை அவரவர் பெயர்களுடன் வெளியிடப்படும்.

ஆசிரியர்: சுதந்திரன்

1. நாள் ஒன்றுக்கு மனிதனின் நகம் எவ்வளவு நீளம் வளர்கிறது? இருதயம் எத்தனை தரம் அடிக்கிறது?

—க. சுப்பிரமணியம், காரைநகர்.

2. நரி அதிகம் விரும்பி உண்ணும் உணவு எது.

—க. இரத்தினசிங்கம், கிளிநொச்சி.

3. தையல் மெஷின், பெனிஸிலின் மருந்து, தொலைபேசி-இவற்றைக் கண்டுபிடித்தவர்கள் யார் யார்?

—ஆ. இராசரத்தினம், கொழும்பு.

4. பிரிட்டிஷ் ஆட்சியில் அடிமை வியாபாரம் எப்போது ஒழிக்கப்பட்டது?

—வி. சதாசிவம், ஆலிஎல.

5. சர்வதேச நீதிமன்றத்தின் முக்கிய கடமை என்ன? அது எங்கே இருக்கிறது?

—எஸ். மரியநாயகம், சில்லாலை.

...............பண்டிதனுவான்

# இலக்கியம் தரும் இன்பம்

இலக்கியம் தரும் காட்சிகளை யாம் அகக்கண்ணுற் காணுகையில் இன்பம் பெறுகின்ருேம். மேலும் மேலும் அதனைச் சிந்தித்துப் பார்க்கப் பார்க்க இன்னுமின்னுமதிகமான இன்பத்தை யாம் அடையலாம். மனக்கவலை களெல்லாம் மறைந்துவிடும். எனவே மனக்கவலையைப் போக்கும் ஒரு மருந்தாகவும் இருக்கிறது இலக்கியம். இத்தகைய இன்பக் காட்சிகளிலொன்றை இங்கே பார்ப்போம்.

"வயல்களிற் பெண்கள் களை பறிக்கின்ருர்கள். அவர்களின் சிறு பெண் குழந்தைகள் விளையாடுவதற்கு ஏதும் பொருட்கள் தேடித் திரிகிருர்கள். பக்கத்திலுள்ள கயல் துள்ளும் குளத்திற்குப் போகிருர்கள். அதில் ஓர் சலைதயற்ற சங்கு கிடக்கிறது. அச்சங்கினம் ஈன்ற முத்துக்களும் பரவிக்கிடக்கின்றன. ஆம்பற்பூக்களும் இருக்கின்றன. மற்றும் தேனுள்ள மலர்களும் நிறைந்துள்ளன. ஓரத்தில் ஆமை ஒடுகளும் கிடக்கின்றன. அவற்றில் மூன்று ஓடுகளையும், அச் சங்கையும், மலர்த் தேனையும், முத்துக்களையும், ஆம்பல் மலர்களையும் சேகரித்து எடுத்துக் கொண்டு ஒரு வரம்புக்குப் போகிருர்கள். அங்கே ஆமை ஒடுகளை அடுப்பாக்கி, ஆம்பல் மலர்களை விறகாக்கித் தீ மூட்டி, சங்கைப் பானையாக்கி, முத்துக்களை அரிசிபோல் அதனுள் இட்டு, நீருக்குப் பதிலாகத் தேனைப் பெய்து உணவு சமைத்துக் களிப்புடன் விளையாடுகிருர்கள். இப்படிப் பல விளையாட்டுக்களைப் பிள்ளைகள் வரம்பெல்

(5-ம் கலம் பார்க்க)

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

**வளர்மதி**

**சுதந்திரன் மாணவர் மன்றம்**

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 6.

பெயர்........................................................................

பாடசாலை..................................................................

விலாசம்....................................................................

..........................................................

.......................................... ..........................................
பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்




# நட்சத்திர மண்டல ஆராய்ச்சி

(சென்றவாரத் தொடர்ச்சி)

பிரபஞ்ச வெளியில் இடையருது ஏற்பட்டுக் கொண்டிருக்கும் விஸ்தரிப்பை சுட்டிக் காட்டும் மற்ருெரு கண்டு பிடிப்பை, கிரிமியா வானுராய்ச்சி நிலையத்தில் சூரியனின் மேற்பரப்பைப் பற்றி ஆராய்ந்து வந்த சோவியத் விஞ்ஞானி ஆந்திரி செவர்னி அணிமையில் கண்டு பிடித்தார். சூரியனுடைய மேற்பரம்பில் அளவிடற்கரிய சக்தி உற்பத்தி செய்யப்படுவதையும், அணுக்கரு சிதைவு மாற்றங்களைப்போல அது இருப்பதையும் கிரிமியாவிலுள்ள மிகப் பெரிய தொலை நோக்கியின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது.

பிரச்னைகள் விவாதிக்கப்பட்டன.

பல நாடுகளைச் சேர்ந்த வானுராய்ச்சி விஞ்ஞானிகளும் பௌதிக விஞ்ஞானிகளும் விவாதங்களில் பங்கெடுத்துக்கொண்டார்கள். அணிமையில் தாங்கள் நடத்திய ஆராய்ச்சிகளைப் பற்றியும், தத்துவார்த்தக் கண்டுபிடிப்புகளைப் பற்றியும் அவர்கள் சொற்பொழிவாற்றினர்கள். மாஸ்கோவில் நடைபெற்ற இக் காங்கிரஸ் விஞ்ஞான உலகில் மிகப் பெரிய நிகழ்ச்சியாகும். மேலும் புதிய துறைகளில் ஆராய்ச்சிகளை நடத்து

## ஆறுவது சினம்

சினம் என்பது கோபம். கோபம் மனிதனைப் புத்தி தடுமாறச் செய்யும்; பாபத்துள் இழுத்துச் செல்லும்; தான் செய்வது என்ன என்பது தெரியாது பெரும் பாவங்களைச் செய்யத் தூண்டும்; கண்களை நெருப்புப் பிழம்பாக ஆக்கும்; பற்களை நெருநெருக்கச் செய்யும்; பார்ப்போருக்குப் பயம் உண்டாக்கும்.

கோபத்தினுல் அழிந்தோர் அநேகர். அழிக்கப்பட்டோர் அதிலும் அநேகர். கோபம் நெருப்பைப் போன்றது. நெருப்புத் தன்னைப் பற்றிக்கொண்ட பொருளையும் அழிக்கிறது. பிற பொருட்களையும் அழிக்கிறது. இதுபோல்தான் கோபமும். அது தன்னைக் கொண்டவனையும் அழித்து அவனுல் கோபிக்கப்படுபவனையும் அழித்து விடுகின்றது.

முனிவர் பலரின் கோபத்துக்கு ஆளாகியவர்கள் தப்பியதில்லை. அதே சமயத்தில் அம் முனிவர்களும் தாம் கொண்ட கோபத்தினுல் தம் தபோபலத்தை இழந்து வருந்தவும் தவறியதில்லை.

பெரியவர்கள் கோபிக்கக் கூடாது. ஏனெனில் 'சினம் சேர்ந்தாரைக் கொன்றுவிடும்'. சிறியவர்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஏனெனில் 'செல்ல இடத்துச் சினம் தீது'.

உலகம் நல்லபடி நடக்க மக்கள் அன்புடையோராகச் சினத்தை ஆற்றிக் கொள்ள வேண்டும்—சினம் ஆற அன்பு உதிக்கும்.

—ஏ. ஜீ. ஆனந்தம். யாழ்ப்பாணம்.

## 'பாஸ்' பண்ணவில்லை

என்போன்ற இளைஞர்கள் இன்பமுறும் நேரம்;
எண்ணங்கள் வான்நோக்கி எழுகின்ற வேளை;
துன்பத்தின் ஒலியெந்தன் உள்ளத் துடிப்பில்
துளையிட்டு வெடி வைத்துப் பொடி செய்ததாலே
இன்பங்கள் சிதறியன; பரீட்சையின் முடிவில்
என்பெயர் இல்லை. நான் 'பாஸ்' பண்ணவில்லை
அன்பின் பிழம்பெந்தன் ஆருயிர் அன்னை
அறிந்திட்டால் என்செய்வாள்? என்செய்வேன் ஐயோ?!

வறுமையிலும் என்வாழ்வு வளம்பெறுமென் றெண்ணி
வாழ்வுதரும் வேதனையை அமைதியுடன் தாங்கி
சிறுமையுறு! உழைப்பிற்றன் செலவுகளைச் சுருக்கி
சிறிதுசிறிதாய்ச் சேர்த்துப் பணமனுப்பும் தந்தை
அறியவரின் அவர்மனது அல்லற்ப டாதோ?
அவனிதனில் ஏன் பிறந்தேன்? ஏன் இந்த நிலையோ?
பொறுமையுடன் எத்தனைநாள் வாழ்ந்திடுவார்; வாழ்வில்
புயலெழுந்து விட்டதுவே! எழுந்தென்ன பயனே?

கதியற் றிருக்குமொரு குடும்பத்தை விதியும்
கனலிட் டெரிக்கிறது. இதனைத்த நீக்க
எதுவும்இவ் வுலகத்தில் இல்லையோ? வறுமை
இருக்கு மிடமெங்குமே தீப்பற்றி எரிக!
நிதியற் றவர்க்குலக மிங்கில்லை; வாழ்வு
நிலையில்லை; நீள்புவியில் எங்குமிடமில்லை.
இது உண்மை; உண்மையிது; வறுமையதன் ஓலம்!
எப்பொழுது இருள்நீங்கி ஒளிகாலு மோதான்?

—க. கணேசலிங்கம்.

சூரியனிலும் நட்சத்திரங்களிலும் வெப்பமும் அடர்த்தியும் மிக அதிகமாக இருக்கக்கூடிய மத்தியப் பகுதிகளில் மட்டுந்தான் அணுக்கருச் சிதைவு மாற்றங்கள் ஏற்பட்டு வருவதாக இது காறும் நம்பப்பட்டு வந்தது. ஆனால் சூரியனின் மேற்பரப்பிலும் அணுச் சிதைவுகள் ஏற்பட முடியும் என்பதை சமீபத்திய ஆராய்ச்சிக் கண்டு பிடிப்புகள் தெளிவாக்கி விட்டன.

நட்சத்திரங்களின் வரலாறு பற்றிய இந்தக் கண்டுபிடிப்புகளைத்தும், அவற்றின் வளர்ச்சிப் போக்கை நன்கு அறிந்து தெளிவதற்கு உதவுகின்றன. நட்சத்திரங்கள் பல்வேறு கட்டங்களின் வழியாக எப்போதும் மாற்றமடைந்துகொண்டே இருக்கின்றன என்பதையும் அவை சுட்டிக்காட்டுகின்றன. சென்ற வருடம் ஆகஸ்டு மாதத்தில் மாஸ்கோவில் நடைபெற்ற பத்தாவது, சர்வதேசவானு ராய்ச்சிக் காங்கிரசின் இரண்டு பெரிய கூட்டங்களில் நட்சத்திரங்களின் பிறப்பு பற்றியும், அவற்றின் அடிப்படையான இயல்பு களைப் பற்றியும் உள்ள

வதற்கு இது ஆக்கமளிக்கும். விண் மீன்களின் மர்மங்களை மேலும் கண்டறிவதற்கு இது வழி கோலும்.

—அல்லா மசேவிச்

(2-ம் கலத் தொடர்ச்சி)

லாம் புரிகிருர்கள்." இவ் வின்பக் காட்சியைச் சேக்கிழார் என்னும் செந்தமிழ்ப் புலவர் சிறந்த செய்யுள் மூலம் (பெரிய புராணம்) படமாக்கிக்காட்டுகின்ருர். இதோ அச் செய்யுள். பயின்று பேருவகையடைவோமாக.

கயல் பாய் பைந் தட நந்தான்
கழிந்த பெருங் கருங் குழிசி
வியல் வாய்வெள்வளைத்தரள
மலர்வேரி உலைப்பெய் தங்
கயலாமை அடுப்பேற்றி
அரக்காம்பல் நெருப்பூதும்
வயல் மாதர் சிறு மகளிர்
விளையாட்டு வரம் பெல்லாம்.

—"தாமரைத்திவான்"

## கண்டது கற்கப் பண்டிதனுவான்

(விடைகள்)

1. நகம் நாளொன்றுக்கு .000046 அங்குலம் வளர்கிறது. இருதயம் 103, 389 தரம் அடிக்கிறது.

2. நரி அதிகம் விரும்பி உண்ணும் உணவு நண்டுதான் என்று பலரும் நம்புகிருர்கள். நண்டை விடக் கொண்டல் காயைத்தான் அது அதிகம் விரும்பி உண்கிறது. இக் காயினுடைய நீளம் சுமார் இரண்டு அடி இருக்கும்.

3. தையல் மெஷினைக் கண்டு பிடித்தவர் ஈ. ஹோவ் (E. Howe) என்பவர். பெனிஸிலின் மருந்தைக் கண்டுபிடித்தவர் ஸேர் ஏ. பிளேமிங் (Sir A. Fleming) என்பவர். கிரகம் பெல் (Graham Bell) என்பவர் தொலைப்பேசியைக் கண்டு பிடித்தார்.

4. 1835-ம் வருஷம் அக்டோபர்மாதம் 4-ந் திகதி பிரிட்டிஷ் ஆட்சியில் அடிமை வியாபாரம் ஒழிக்கப்பட்டது.

5. சர்வதேச நீதி மன்றத்தின் முக்கிய கடமை உலக நாடுகளுக்கிடையே தோன்றும் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதாகும். அது ஹொலண்ட் (Holland) நாட்டின் தலைநகராகிய ஹேக் பட்டணத்தில் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## ஸ்ரீ விவேகானந்த ஜயந்தி விழா

"பௌத்தரோ, கிறிஸ்தவரோ, முஸ்லிமோ, இந்துவோ யாராயினும் சரி, அவரவர் சமயக் கொள்கையை உறுதியாகக் கடைப்பிடிப்பதே, உண்மையான சமய வாழ்க்கையாகும். எங்கும் நிறைந்த பரம் பொருளை உணர்வதற்கு, மதம் மாற வேண்டிய அவசியமில்லை."

இவ்வாறு மட்டக்களப்பு முறக்கொட்டான்சேனை ஸ்ரீ ராமகிருஷ்ண சங்க வித்தியாலயத்தில் நடந்த ஸ்ரீ. விவேகானந்த ஜயந்தி விழாவிற் தலைமை வகித்துப் பேசிய பகுதிக் காரியாதிகாரி திரு. கந்தையா குறிப்பிட்டார்.

திரு. இராஜகோபால் பேசியபோது, "வெளித் தொடர்பற்ற ஆத்ம சாதனையின் மூலம் இறைவனை அடைய முயல்வதை விட, இயற்கைத் தோற்றங்களிலும், ஏழை, எளியவரிடத்தும் இறைவனைக் கண்டு, உள்ளமுருகி அவர்கட்குப் பணிபுரிவதே சிறந்த சாதனை என்பது, சுவாமி விவேகானந்தரது வாழ்க்கையும் வாக்குமாகும்" என்று குறிப்பிட்டார்.

திரு. மூ. சுப்பராமன், சுவாமிஜீயின் வாழ்க்கையை விரிவாக எடுத்துக் கூறி, இரும்புத் தசைகளும், எஃகு நரம்பும், எதற்கும் அஞ்சாத மனவலியும் கொண்ட தன்னலமற்ற வீரத் தொண்டர்களையும், துறவியரையும் உண்டாக்குவதே ஸ்ரீ. விவேகானந்தரது குறிக்கோள் என்றும், அதை நிறைவேற்ற இன்றைய இளைஞர்கள் முன்வர வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இறுதியில், நன்றி கூறிய தலைமை ஆசிரியர் திரு. க. நடராஜன், "விழிமின், எழுமின், கருதிய கருமம் கைகூடும்வரை அயராது உழைமின்." என்ற விவேகானந்தரது ஆவேச மொழியை உள்ளத்திற்கொண்டு, நாட்டுக்குத் தொண்டுபுரிவதே நம் கடன் என்றார். சங்கீத பூஷணங்கள் திரு. என். இராஜு, திரு. கணபதிப் பிள்ளை, செல்வி. ந. காந்திமதி, புனிதவதி ஆகியவர்கள் இடையிடையே இன்னிசை விருந்து அளித்தனர்.

## உப்போடையில் காந்திஜி சிரார்த்த தினம்

கல்லடி உப்போடை இ. கி. மி. பெண்கள் பாடசாலை மாணவர் மன்றத்தினரால் மகாத்மா காந்தியின் 11-ம் நினைவு தினம் கொண்டாடப் பட்டது. விழாவுக்கு திருமதி. க. பாக்கியம் ஆசிரியை தலைமை தாங்கினார்.

தலைவியார் தமது உரையின் போது:- காந்தியடிகள் சத்தியம், அகிம்சை என்பன பற்றிப் பத்திரிகை வாயிலாகவும், மேடைப் பிரசங்கமூலமும் விளக்கியதோடுமட்டுமன்றி அவற்றைச் செயலிலேயே காட்டினார். தூய அவரது வாழ்க்கை அவரை மகாத்மாவாக்கியது என்று கூறினார்.

திரு. ஆர். ராஜதுரை ஆசிரியர் "காந்தீயம்" பற்றியும், செல்வி. பி. அருள் "சாதனையும் போதனையும்" என்னும் பொருள் பற்றியும் பேசினர். திரு. வி. வேலுப்பிள்ளை ஆசிரியர் "காந்திக் கதை" என்னும் பாட்டினைப் பக்க வாத்தியங்களுடன் பாடினார்.

ரகுபதிராகவ பஜனையுடன் விழா நிறைவுற்றது.

## "பெண் கல்வி மிக, மிக, அவசியம்"

"நம் நாடு முன்னேற பெண் குலம் பெரிதும் முன்னேற வேண்டும். அதற்குப் பெண் கல்வி மிக மிக அவசியம். உலகில் சாந்தியும் சமாதானமும் நிலை பெறப் பாடுபட வேண்டியவர்கள் பெண்களே." இவ்வாறு கல்லடி உப்போடை இ. கி. மி. பாடசாலை மாணவர் மன்றத்தில் அணிமையில் பேசிய பன் மொழிப் பண்டிதர், பேராசிரியர் எஸ். ஆர். துரைசுவாமி சாஸ்திரிகள் குறிப்பிட்டார். கூட்டத்திற்கு இலங்கை இ. கி. மி. பாடசாலைகளின் பொது முகாமைக்காரர் சுவாமி நடராசாநந்தா தலைமை தாங்கினார்.

முடிவில் திரு. ஆர். ராஜதுரை ஆசிரியர் நன்றி கூறினார்.

## இலங்கை சமாதான சபை

இலங்கை சமாதான சபை இரத்தினபுரி கிளையின் வருடாந்தக் கூட்டம் அணிமையில் திரு டப்ளியூ. ஏ. பெரேரா தலைமையில் கூடிற்று. புதிய வருடத்திற்கு பின்வருவோர் உத்தியோகஸ்தர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்:-

தலைவர்: திரு. டப்ளியூ. ஏ. பெரேரா, உபதலைவர்கள்: திருவாளர்கள்: கே. பி. சிரிசேன, எம். பி. கே. மன்னப்பெருமா, செயலாளர். திரு. யூ. வி. சைமன், பொருளாளர்: திரு. எல். டீ. ஜீ. ஜயசேன. கமிட்டி அங்கத்தவர்கள்: திருவாளர்கள்:- ஆர். வி. குணசேகர, டி. ஏ. ஜயசிங்க, அ. பிலிப், பீ. டீ. எம். லொக்குலியனே, பீ. ஏ. எம். தனபால, திருமதி. எஸ். எம். டீ. பீரிஸ்.

## மாதர் சங்கம் அங்குரார்ப்பணம்

இடல்காசின்னையைச் சேர்ந்த பணியப்பின்னக்கட்டைத் தோட்டத்தில் சென்ற 2-2-59 அன்று மாலை கதிரேசன் கோயில் மைதானத்தில் திரு. ஜீ. பி. முத்து தலைமையில் மாதர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது. தோட்டத்தில் உள்ள பெண்கள் அனைவரும் கூட்டத்திற் பங்கு பற்றினர்.

மாதர் சங்கத்தினால் பெண்ணினத்திற்கு ஏற்படும் நன்மைகளைப் பற்றிச் சிலர் எடுத்துக் கூறினர்.

பின்னர் பணியப் பின்னக் கட்டைத் தோட்ட மாதர் சங்கத் தலைவியாக திருமதி. சி. சின்னம்மாவும், கூட்டுக் காரியதரிசிகளாகத் திருமதி. மூ. மருதாயியும், செல்வி இ. சிவபாக்கியமும், பொக்கிஷதாரராக திருமதி. வை. சொக்காயியும் தெரிவு செய்யப்பட்டனர்.

கமிட்டி அங்கத்தவர்களாக எஸ். நாகம்மா, என். ராதா, வீ. செல்வம், வீ. அம்மணியம்மாள், ஆர். தங்கம்மாள், வீ. சிட்டு ஆகிய ஒன்பதின்மரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## மகாத்மா காந்தி நினைவு தினம்

ஸ்ரீசுமன தமிழ் மாணவர் இலக்கியச் சங்க சார்பில் மகாத்மா காந்தியின் ஞாபகார்த்த தின கூட்டம் சென்ற 30-1-59-ல் செல்வன் ப. முருகையா தலைமையில் நடைபெற்றது.

பின் வரும் மாணவர்கள் மகாத்மா காந்தியைப்பற்றி சொற்பொழிவாற்றினர்:— செல்வர்கள்: வெ. இராசையா, பெ. அருச்சுனன், இரா. கந்தையா, ச. பொம்மன், மு. சிவனடியான், பி. கோபால், க. பெருமாள்.

## மாணவர் மறுமலர்ச்சி மன்றம்

மாணவர் மறுமலர்ச்சி மன்றச் செயற்குழுக் கூட்டம் சென்ற 9-2-59-ல் திரு. க. முருகேசு தலைமையில் திரு. வி. க. நினைவுப்பள்ளியில் நடைபெற்றது.

அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:—

1. 18 வயது வந்த மாணவர்களுக்கு வாக்குரிமை அளிக்கும் தீர்மானத்தை இரத்துச் செய்யுமாறு அரசாங்கத்தை இக் கூட்டம் கேட்டுக்கொள் [illegible]

2. அரசாங்க [illegible] மாணவர்களுக்கு சிங்கள பாடப் புத்தகங்களை இலவசமாக விநியோகித்து சிங்களம் படிக்கச் செய்வதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

3. காலியான துணைச் செயலாளர் பதவிக்கு திரு. திரு. என். எம். டி. பிரேமசிரியை தெரிவு செய்வதென்று தீர்மானிக்கிறது.

## கலைவாணி கலைக் கழகம்

கலைவாணி கலைக் கழகத்தின் உறுப்பினர் கூட்டம் சென்ற 4-2-59-ல் கழகப் பணி மனையில் திரு. கே. நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்றது.

பண்டிதர் மூ. வேலாயுதம், ஜனாப் ஏ. சி. எம். தர்வேஸ், திருமதி சரஸ்வதி ரஜனி ஆகியோர் மன்றத்தின் வளர்ச்சி பற்றி பேசினார்கள்.

பண்டிதர். எஸ். ஆர். கே. சாமி பேசுகையில் நாட்டில் எத்தனையோ இயல், இசை நாடக மன்றங்கள் இருக்கின்றன. ஆனால் அவைகள் ஒரு சிலரின் சுய நலத்துக்காகப் பயன் படுத்தப்படுகின்றன. இதனால் ஒரு சில நல்ல கழகங்களின் பெயர்களும் கெடுக்கப்படுகின்றன. இந்த இழி நிலை மாறி இளம் உள்ளங்களில் இயல் இசை நாடகம் சிறப்புறவேண்டும் என்று கூறினார்.

அடுத்து திரு. எஸ். கனகராஜா பேசுகையில் கலைஞர்கள் ஆர்வமுள்ளவர்கள், கலைக்காகப் பாடுபடுபவர்கள், அவர்களை நல்ல பாதையில் கொண்டு செலுத்த இக் கழகம் முன் வரும் என்று தாம் நம்புவதாகக் கூறினார்.

கடைசியாக (சுதந்திர) துக்கதினத்தை முன்னிட்டு இரண்டு நிமிடங்கள் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டு 12 மணியளவில் கூட்டம் இனிது கலைந்தது.

# நீலவேணி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்க வேண்டிய அவசியம் நேரவில்லை. அதைவிட முக்கியமானவேலைநமக்குஇரத்துமலானை விமான நிலையத்தில் காத்துக்கிடக்கின்றது. ஆனாலும் அழகேசனின் தத்துவத்தை நாம் கேட்டு வைக்கத்தான்வேண்டியிருக்கிறது. காரணம் அறிவுப் பசி!

நீலவேணியின் சந்தேகத்துக்கு அழகேசன் பதில் சொன்னான்:

"சிலர் எண்ணுகிறார்கள் உடலை வருத்தி வேலை செய்து உழைப்பது மட்டும் தான் களைப்பான தொழில். சும்மா இருந்த இடத்தில் இருந்து கொண்டு காகிதத்தில் எழுதிக் குவிக்கும் 'எழுத்தாள வேலை'யில் என்ன கஷ்டம் இருக்கிறதென்று!

"இந்த எண்ணம் முற்றிலும் தவறானது. எழுத்தாளனைப் 'புரிந்து' கொள்ளாததால் ஏற்பட்ட அறிவு சூன்யம்"

"அது சரி அண்ணா! அதைத்தான் கொஞ்சம் புரியும்படி சொல்லேன்" என்று தூண்டினாள் நீலவேணி அழகேசனை.

"நீலா! 'கரித் துண்டு' பார்த்திருக்கிறாயல்லவா?"

"நல்லாய்க் கேட்டாய் போ! காலையில் எழுந்ததும் கரித் துண்டின் முகத்தில் தானே நான் விழிப்பது!"

"அடி என் நகைச் சுவைப் பொக்கிஷமே! நான் அந்த அடுப்பங்கரைக் கரித் துண்டைக் குறிப்பிடவில்லை, டாக்டர் மு. வரதராஜனின் கரித் துண்டைக் குறிப்பிடுகிறேன் புரிந்ததா?"

"அதில் அவர் கூறுகிறார்: 'கடினமான வேலை செய்யும் உழைப்பாளியின் உடற் கருவிகள் சதா தேய்ந்து கொண்டேயிருக்கின்றன; நிலத்தைஉழுபவன்; மூட்டை சுமப்பவன்; மரம் வெட்டுபவன்; ரிக்ஷா இழுப்பவன் இப்படியான கடின வேலை செய்பவனின் உடற்கருவிகள் சதா உழைத்து உழைத்துத் தேய்ந்துகொண்டே யிருக்கின்றன. அதுபோல், சிந்தித்துச் சிந்தித்துப் புதுப் புதுப் படைப்புகளைச் சிருஷ்டித்து மக்களின் அறிவுப் பசிக்கு விருந்தூட்டும் எழுத்தாளனின் உள்ளம்—உடல் இரண்டும் அசதியாகின்றன. தேய்கின்றன ஒரு படைப்பைப் படைத்து முடித்ததும் 'அப்பாடா' என்று சோர்ந்து விடுகின்றான். அவன் படும் வேதனையை உணர நமக்கும் 'எழுத்தாள மனம்' வேண்டும்!' என்று [illegible] தான் அழகு...

(தொடரும்)

# கைலாசம் கண்டேன்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கற்கள் பரவப்படவில்லை. மழையின்றித் தரை உறுதியாக இருந்ததால் பஸ்கள் செல்ல முடிந்தன. கப்கோட் 3750அடி உயரத்திலுள்ளது. முன்தங்கிய இடத்திலும் சிறிது உயரத்தை அடைந்தோம். P. W. D. வாடிவீட்டில் அற்றை நாட் கழிந்தது. முன்னே ஓடும் சரயு நதியில் ஸ்நானம் செய்து உணவு உண்டு, ஓய்வெடுத்துக் கொண்டோம். இந்த இடத்தோடு எமது வாகனப் பிரயாணம் முடிவுற்றது. மலைப் பாதையிற் பாதயாத்திரை ஆரம்பமாகியது. மலைவளத்தைப் பார்த்துக்கொண்டே பாதயாத்திரையை இனிது நடத்தலாம் என மனம் ஒரு புறம் மகிழ்ந்தது. அதே நேரத்தில், மலையுச்சிகளையும் பள்ளங்களையும் தாண்டியாக வேண்டுமே என்று மற்றோர் சிந்தனையும் தோன்றியது. கயிலாயநாதன் தரிசனம், எல்லாவற்றையும் இனிதே நடைபெறச் செய்யும் என்ற நம்பிக்கை மனதைச் சாந்தி நிலையில் அமைத்தது.

## புதிய பாதை

ஜூன்—9

திங்கட்கிழமை காலை ஒரே உற்சாகம். ஐந்து மணிக்கே பிரயாண ஏற்பாடு தடல்புடலாக நடைபெற்றது. குதிரைக்காரர் தத்தம் குதிரைகளில் பொருட்களைப் பங்கிட்டு ஏற்றிக்கொண்டனர். கூலிகளும் தமது பங்கை எடுத்துக்கொண்டனர். குதிரைகள் சுமார் 1½ மணுவும் கூலிகள் ¾ மணுவும் ஆக எடைகள் அமைந்தன. 'சரி நேரமாகிவிட்டது. புறப்படுங்கள்' என்றார் வழிகாட்டி. இதோ புறப்பட்டுவிட்டோம். மேல்நோக்கி செல்கின்றோம். எம்மைஎதிர் நோக்கிச் சரயுநதி வேகமாகக் கீழ்த்திசையில் ஓடுகிறது. சரயுவின் உற்பத்தியைக் காணச் செல்வது போல அதன் கரைவழியே நடக்கின்றோம். நதியிலிருந்து குளுகுளுத்து வீசும் காற்று; குதூகலத்தை தருகின்றது. அதனருகே பச்சைக் காஷ்மீர்க் கம்பளம் போலப் பசும்புற்றரைகள் தோன்றுகின்றன. அவற்றினிடையே பலநிற மணிகள் பதித்தனபோல சிறு சிறு பூக்கள் பொலிகின்றன. 3½ மைல் தூரம் நடந்த பின் எமது பாதை சரயுநதியோரத்தை விட்டு வேறு திசையிற் பிரிந்தது. அதுவும் நதிக் கரையே. இங்கே வந்ததும் பிண்டாரி கிலேஸியர்ஸ் (Pindari Glaciers) பாதை பிரிகிறது. அப்பாதையை விட்டு மிலம் பாதைக்குச் சென்றோம். இத்தனை தூரம் வந்த நாம் வழியிற் சில நிமிஷங்கள் தங்கினோம். காலை உணவை உண்டு காலையும் ஆற்றிக்கொள்ளவே. அருகிருந்த கடையில் தேநீர் கிடைத்தது. அன்னை டாக்கர்ஸீ அளித்த பண்டங்கள் வயிற்றையடைந்தன. உணவுண்ட உற்சாகத்தோடு தொடர்ந்து நடந்தோம்.

## முதல் அனுபவம்

பகல் 1½ மணிக்கு சியாமதாரா ஊரைக் கண்டோம். இது காப்கோட்டிலிருந்து 11½ மைல்களுக்கப்பால் இருக்கிறது. சிறிது சிறிதாக உயர்ந்துள்ள ஏற்றம் முடிவில் திடீரென உயர்ந்துவிடுகின்றது. இறுதி 3½ மைலும் கடுமையான ஏற்றம். 3750 அடி உயரத்திற் புறப்பட்டு 7000 அடிக்கு வந்துவிட்டோம். 3½ மைல் தூரத்திற்கிடையில் சுமார் 3000அடி உயரம் வித்தியாசம் வந்துவிட்டது. இது முதல் அனுபவம். இப்படியே அடிக்கடி பல ஏற்றங்கள் வந்துகொண்டேயிருக்கும். சியாமதரா சிறிய ஊர்! அங்கொருவர் இங்கொருவராக மிகச் சில மக்களே வதிகின்றனர். அங்கிருந்த அரசாங்க வாடிவீட்டில் தங்கினோம். கனமான பூட்ஸ் என்ற சிறையிலிருந்து கால்களை விடுதலை செய்தோம். சென்ற களைப்பு நீங்க நீராட விரும்பினோம்.

## நீரூற்று

அண்மையில்ஒரு சிறுஓடை இருந்தது. அதில் யாருமே அமிழ்ந்திக் குளிக்க முடியாது. அத்தனை ஆழமா? அல்லது வேகமா? என்றுதானே கேட்கிறீர்கள். ஆழமுமில்லை, வேகமுமில்லை ஒரு அங்குல அகலங்கூட இல்லாத சிறு கயிறு போன்றோடும் நீரூற்று; அவ்வூரை அழகுபடுத்தும் ஆறு அதுவே. உயர்ந்த கல்லடுக்கிலிருந்து கீழே ஒழுகும் சிற்றூற்றின்கீழ் சிறு பாத்திரத்தை வைத்தோம். பல நிமிஷங்களின் பின் பாத்திரம் நிறைந்தது. துணியை நனைத்து உடம்பைத் துடைத்துக்கொண்டோம். ஸ்நானம் முடிந்தது. உணவையும் முடித்தோம். அன்று அவ்விடத்திலேயே தங்கினோம்.

10ந் தேதி காலை புறப்பட இருந்த பயணம் தடைப்பட்டுவிட்டது. காரணம் குதிரைக்காரர்கள் மலைப்பிரயாணத்திற்குத் தேவையான உடை உணவு ஆயத்தம் செய்ய வேண்டியதாயிற்று.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2-வது குதூகல மாதம்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மொடர்ன் (பதுளை) விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் ஆறு திரைகளில்



# பதி பக்தி

(பழய தலைப்பு புதிய கதையமைப்பு)

கதை. வசனம்..... M.S.சோலைமலை • சங்கீதம்............ விஸ்வநாதன்·ராமமூர்த்தி • நிர்வாகம்..... G.N.வேலுமணி • காமிரா....... G.விட்டல்ராவ்

BAKTHA

வெகு விரைவில் சினிமாஸ் தாபனத்தாரால்

திரையிடப் படுகிறது!




சிவாஜி கணேசன்,

ஜமுனா, வி. நாகையா

ரங்கராவ், மைனாவதி,

முதலியோர் நடித்த




# பொம்மை கல்யாணம்

... தட்டாதெரு 194... சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட்
ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாதெரு சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1959 பெப்ரவரி மாதம் 15-ந் திகதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org